கல்கி

KALKI

29.9.1968 40கா





பாம்பே
டையிங்கின்
புதுமை மிக்க
புடவைகளை அணிந்து
கவர்ச்சியுடன்
திகழுங்கள் !

எமது வாட்ரீன் புடவையை எளிதில் சலவை செய்யலாம்; சுருங்காது, விரைவில் உலரும்; இஸ்திரி தேவையில்லை.

எமது ஸ்விஸ் வோயில் புடவை பூப் போன்று மென்மையானது; எடுப்பாக விளங்க மெருகூட்டப்பட்டது, 'டெபிஸிங்' செய்யப்பட்டது, மடிப்புகள் விழாதது.

வாட்ரீன் ('டெரீன்' / காட்டன்) புடவைகள் மற்றும் மென்மையான ஸ்விஸ் வோயில் புடவைகளின் பனிரெண்டு புதுப்புது டிசைன்கள், மனங்கவரும் அழகிய வண்ணங்களில் ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றன. அவற்றை அணிந்து மகிழுங்கள் !

சுருக்கங்கள் விழாத ஸ்விஸ்
வோயில் புடவைகளையும்,
வாட்ரீன் ('டெரீன்'/காட்டன்)
புடவைகளையும் இன்றே
வாங்குங்கள் !

பாம்பே டையிங்


மர்பியின்
புத்தம் புதிய
ரூ 110* க்கு
சிறந்த
சாதனம்
மர்பியின் அழகான மீடியம் வேவ்
டிரான்ஸிஸ்டர்-மூன்று. ஸ்டேஷன்
களை சத்தமாகவும், நாதத்துடனும் பிடிக்
கக்கூடியது. சக்தி வாய்ந்தது.
கரகரப்பான சத்தமில்லாத
தன்மையுடையது.
4 டார்ச் செல்களை உபயோகியுங்கள்
எல்லா இடங்களிலும் சுலபமாகக்
கிடைக்கும்.
*விற்பனைவரி மற்றும் இதர ஸ்தல
வரிகள்தனி, லைஸ பாட்டரிகளைத்
தவிர்த்து.
மாடல் டிபி 0115
இன்றே
வீட்டிற்கு எடுத்துச்
செல்லுங்கள்
மர்பி — இல்லத்தை மகிழ்விக்கிறது!
MAS 331




அம்மா எனக்கு

மார்ட்டனின்

இனிமையான

க்ரீம் டா:.பிகள்

நிறையத் தருகிறாள்



...... ஏனென்றால், அவற்றிலே சுத்தமான பால், வெண்மையான சர்க்கரை, க்ளுகோஸ், இறுகிய கெட்டிப்பால், க்ரீம், வெண்ணெ ஆகிய சத்துள்ள சக்தியளிக்கின்ற கூட்டுப்பொருள்கள் அடங்கியிருப்பது அம்மாவிற்குத் தெரியும். மார்ட்டனின் க்ரீம் டாஃபி அற்புதமான சுவைகொண்டிருப்பதால் அதன்மேல் எனக்கு அதிகப்பிரியம் என்பதையும் அம்மா அறிவாள்.

மார்ட்டனின் க்ரீம் டா:.பிகள் இந்தியாவிலே சிறந்தவை என்று புகழ் பெற்றுள்ளன!

சுவையுள்ள மற்ற டா:.பிகள்:


* கொப்பரை இனிப்பு டாஃபிகள்
* பல இனுசுகள் கலந்த டாஃபிகள்
* பாலேடு மணக்கும் காரமல்ஸ்

ஸி & இ. மார்ட்டன் (இந்தியா) லிட்.

உயர்ந்த ரக மிட்டாய்களையும் பால்பொருள்களையும் தயாரிப்பவர்கள்

கல்கி பொருளடக்கம்

கீலக புரட்டாசி 13 செப்டம்பர் 29



கட்டுமரம் கட்டிக்கொண்டு
கடலின்மேலே போகும்மச்சான்
கட்டித்தங்கம் வீட்டுக்குள்ளே
காத்திருக்கிறா மறந்திடாதே!

படம்: ஆர். பி. எஸ். மணி

கல்கியில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


நான் மகாத்மாவின்
அடிச்சுவட்டில்தானே
நடக்கிறேன்!
காங்கிரஸ்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 9

காந்தி ஜயந்தி

இந்த அக்டோபர் இரண்டாம் தேதி மகத்தான புண்ணிய தினம்.

சத்தியமும், அஹிம்சையும், பக்தியும், எளிமையும், பிரம்மசரியமும், அஞ்சா நெஞ்சும் மூர்த்திகரித்து வந்தாற்போல் இப் பாவன பாரதத்தில் தோன்றி, அன்பு வழியிலேயே இந்த மகத்தான உபகண்டத்துக்கு விடுதலை வாங்கித் தந்த மகாத்மாவுக்கு இன்று நூற்றாண்டின் நினைவு அஞ்சலி செலுத்துகிறோம்.

ஆனால் நினைவு அஞ்சலி செலுத்துவதோடு நம் கடமை முடியவில்லை. காந்தி ஜயந்தி என்கிற ஒரு தினத்தில் அவரை நினைப்பதும் வணங்குவதும் மட்டும் போதாது. நம் வாழ்வுள்ளவரையில் அனவரதமும், அவர் போற்றிய கொள்கைகளை, சாற்றிய தத்துவங்களை நம் உயிரின் அங்கமாக்கிக் கொள்வதுதான் தேச பிதாவுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

ஏழையாக வாழ்ந்த அண்ணல் நமக்கு மகத்தான செல்வங்களைச் சொத்தாக வைத்து விட்டுப் போயிருக்கிறார். உண்மை, அன்பு, அமைதி, அச்சமின்மை ஆகிய குன்றாத நிதிகளை நமக்குத் தந்து சென்றிருக்கிறார் அவர். இந்த உத்தமச் செல்வத்தை உபயோகித்துக் கொள்ள அறியாத மட்டும் நாம் நூற்றாண்டு விழா கொண்டாடுவதில் பயனேது?

இதை எண்ணிப் பார்க்கையில் இந்தப் புண்ணிய தினத்தில் நம் மனம் புண்படாமல் இராது. இன்று மக்களும் சரி, ஆட்சியாளரும் சரி எந்த அளவில் காந்தியடிகள் வகுத்த பாதையைப் பின்பற்றுகின்றனர் என்று பார்த்தால் நோவாத நெஞ்சு இராது.

அன்று தேச விடுதலைக்காக அண்ணலுடைய அறைகூவலின்கீழ் உத்வேகம் பெற்றுக் கிளர்ந்தெழுந்து அந்நிய அரசாங்கத்துடன் போராடிய மக்கள், இன்று தங்களது சர்க்காரிடமே சுதந்திரத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறார்கள். காந்தி அடிகள் அரசியலிலும் மெய்ஞ்ஞானத் துணிவினைப் பிணைத்ததாகப் போற்றினார் பாரதி. ஆனால் இன்றோ நாம் உலகாயதத்தில் மேலும் மேலும் மூழ்கி வருகிறோம். 'எளிய வாழ்வும், சீரிய சிந்தனையும் வேண்டும். இந்திய மண்ணின் பண்பாட்டு மணம் கமழ வாழவேண்டும்' என்று காந்திஜி போதித்ததெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிட்டன. தனவந்தர்கள் யாவரும் தர்மகர்த்தர்கள்போல் தம் உடைமைகளை ஏழைகளுக்காகவே பரிபாலிக்க வேண்டும் என்று மகாத்மா தந்த உபதேசம் நடைமுறையில் மேவவில்லை. கடும் உழைப்புப் பற்றியும், உரிமையைவிடப் பெரிதாகக் கடமையை மதிக்கவேண்டும் என்றும் அடிகள் கூறியதெல்லாம் நம் உழைப்பாளர் சமுதாயத்திடம் ஊன்றவில்லை.

காந்திய தத்துவங்களிலிருந்து பாரத அரசாங்கம் எவ்வளவு விலகிச் சென்றுவிட்டது என்று சொல்லத் தேவையில்லை. இன்றைய ஆலைத் தொழில் அமைப்பையும், அந்நியக் கடனின்மீது இயந்திர பூதங்களைக் கொண்டு வகுக்கப்படும் டம்பாச்சாரித் திட்டங்களையும் காந்திஜி ஆசீர்வதிப்பாரா? இன்று 'சோஷலிஸ' சர்க்கார் தொழில் துறையிலும், தனியாரின் பிரத்தியேக வாழ்விலும்கூடக் கூசாமல் துராக்கிரகம் செய்வதை ஆமோதிப்பாரா? நெறிசார்ந்த வாழ்வுக்கும் புலனடக்கத்துக்கும் அயராது பாடுபட்ட காந்திஜி குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை அநுமதிப்பாரா? அவரது பெயரைச் சொல்லி வாக்குப் பெற்றவர்கள் மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்வதில் மும்முரமாக இருப்பதைக் கண்டால் அவரது ஆன்மா குருதி சொரியாதா? ஹரிச்சந்திரனை முன்னோடியாகக் கொண்ட அந்த மகானின் வாரிசாகத் தம்மை வருணித்துக் கொள்பவர்கள் சத்தியப்பிரமாணமான வாக்குறுதிகளைக் கூசாமல் முறிப்பதைப் பார்த்தால் அடிகளின் ஆவி எப்படிப் பதறும்?

காந்திஜி தயாதாட்சிண்யம் இன்றி ஆத்மசோதனை செய்து கொண்டவர். அவரது நூறாவது பிறந்த நாளன்று நாமும் அதேபோல் ஆத்மசோதனை செய்து கொள்வோம். அந்த சோதனை தரும் போதனைகளை நம்மால் இயன்ற வரை பின்பற்ற முயலுவோம். ராமன் நம்மைக் காப்பானாக!

என்ன சேதி?

பணி நிலையத்தின் மணிவிழா

பம்பாயிலுள்ள சேவாசதனம் பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். அறுபதாண்டுகளுக்குமுன் பேராம்ஜி மலபாரியால் நிறுவப்பட்ட இந்த நிலையம், பல அநாதைப் பெண்டிருக்கும் பாலருக்கும் வாழ்வளிக்கும் புண்ணிய கைங்கரியத்தைச் செவ்வனே செய்து வருகிறது. அபலைகள் தாமாகத் தம்மைக் காத்துக் கொண்டு சுதந்திரமாக வாழுமாறு அவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கிறது. தையல், சமையல், சலவை முதலிய துறைகளில் சேவாசதனத்தினர் மிக நல்ல பெயர் எடுத்திருக்கின்றனர். ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் இந்த நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

மணிவிழா ஆண்டில் சேவாசதனப் பணிகளை விஸ்தரிப்பதற்காக நிதி திரட்டப்படுகிறது. இதனை உத்தேசித்து இம்மாதம் 27ந் தேதி பம்பாய் ஷண்முகானந்தா ஹாலில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஓர் உதவிக் கச்சேரி வழங்குகிறார். பம்பாய்ப் பெருமக்கள் நல்ல பணிக்கு உபகாரம் புரிய ஒரு நல் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

ராணுவப் பிரிவுகள்

ராணுவத்தில் பிரதேசங்களின் பேரில் உள்ள படைப் பிரிவுகளை நீக்கி அனைத்தையும் ஒன்றாக்கிவிடலாம் என்று எண்ணப்படுகிறது. இப்போது பல பிரிவுகளாக இருப்பதால் தீய விளைவு எதுவும் இல்லை. நேரு சர்க்கார் மொழிவாரி மாகாணப் பிரிவினையை ஒப்புக் கொண்டதுதான் பலவித விஷமங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாயிற்று. இந்த அமைப்பை ஏற்றுக் கொண்டிருக்கையில் ஜாட் பிரிவு, ராஜபுதனப் பிரிவு, மராட்டா பிரிவு என்பது போல், ஒரு மையத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள படைப் பிரிவுகளை மாற்ற வேண்டியதில்லை. இப்பொழுதுள்ள அமைப்பை மாற்றுமலே, எல்லாப் பகுதியினரும் கலந்த சில பிரிவுகளை அமைக்கலாம். போரில் நேராக ஈடுபடும் வீரர்களின் கருத்தே இவ்விஷயத்தில் ஏற்கப்பட வேண்டும்; அரசியல்வாதிகளுடையதல்ல. அநேக சந்தர்ப்பங்களில் அரசியல் வாதிகளின் முடிவுகள் அஜாக்கிரதையாய் இருக்கின்றன. தமது முன்னேற்றத்தைப் பற்றி நினைக்கக் கூடிய அதிகாரிகளின் கருத்தை வைத்தும் முடிவு எடுக்கக் கூடாது. போராடும் வீரர்கள் இன்றைய அமைப்பையே சௌக்கியமெனக் கருதினால் அதற்கே முக்கியத்துவம் தர வேண்டும்.

சுதேசியும் ஏகபோக்கியமும்

சுதேசிக் கொள்கை நல்லதுதான். ஆனால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஏகபோக்கியம் அளித்தால் அந்நிய இறக்குமதி இல்லாததைப் பயன் செய்து கொண்டும், உள்நாட்டிலேயே தமக்குப் போட்டி யில்லாததாலும் அவர்கள் தரம் குறைந்த சரக்குகளை மக்கள் மீது திணிக்க முடியும். இந்தப் போக்கைப் பற்றிச் சிந்தித்து ஜாக்கிரதையுடன் சுதேசிக் கொள்கையை அமல் செய்ய வேண்டும்.


உள் நாட்டு உற்பத்தியாளரிடையே போதிய போட்டி இல்லை. எனவே வெளி நாட்டிலிருந்தும் சரக்குகளை ஓரளவு இறக்குமதி செய்ய அனுமதித்துத் தரத்தைக் காப்பாற்ற வேண்டும். எந்தச் சரக்கைத் தேர்வு செய்வது என்பதில் மக்களுக்குச் சுதந்திரம் தர வேண்டும். இதுவே உற்பத்தியாளரை உஷார்ப்படுத்தும்.

மகாத்மா மணிமொழி


ஆண்டவனுக்கு நாம் சேவை செய்வோமாயின், அல்லது ஆண்டவனோடு ஒன்றிவிடுவோமாயின், நாமும் அவனைப் போலவே அலுப்பின்றி அனவரதமும் தொழில் புரியத் தொடங்குவோம்.



சமுத்திரத்திலிருந்து பிரிந்துவிட்ட ஒரு துளி, சமுத்திரத்தின் அலைகளிலிருந்து விடுபட்டு, கண நேரம் அமைதி காணும். ஆனால் பிறகு அது ஆவியாகி மறைந்துவிட வேண்டியதுதான். அமைதி காணுமல் அலை வீசிக்கொண்டே இருக்கும் சமுத்திரத்திலேயே உள்ள துளிக்கு வேலையற்ற அமைதி கிடையாது. நம் விஷயமும் அப்படியே. ஆண்டவன் என்கிற சமுத்திரத்தில் நாம் ஒன்றியவுடனேயே நமக்கு அமைதி இல்லாமல் போகிறது. நமக்கு அப்போது அமைதி தேவைப்படுவதும் இல்லை. அந்நிலையில் நமது தூக்கமும் செயலாக இருக்கும். ஏனெனில் அப்போது இதயத்தில் ஆண்டவனின் சிந்தனையோடு தூங்குவோம். இம்மாதிரி அமைதியின்றிப் பணி செய்வதில்தான் உண்மையான அமைதி உள்ளது. இவ்வாறு ஓயாத கொந்தளிப்பில் இருப்பதில்தான் குன்றாத சாந்தியின் திறவுகோல் உள்ளது. பரிபூரண சரணாகதி செய்து கடலில் துளியாக அனவரதமும் உழைக்கும் உயர்நிலையை வருணிப்பது சிரமம். ஆனால் அது மனிதர்களுக்கு அநுபவ சாத்தியமானதே. ஆத்மார்ப்பணம் செய்த பலர் அந்நிலையை எய்தி உள்ளனர். நாமும் அந்நிலையை அடையலாம்.



உத்கலத்தில் ஓர் உத்சவம்



உத்கலம் என்று பெயர் கொண்ட ஒரிஸ்ஸாவுக்குப் பல சிறப்புக்கள் உண்டு. அந்தச் சிறப்புக்களின் உருவமே கோணார்க்கம் எனப்படும் கொனராக்கும், புவனேசுவரமும், புரி ஜகந்நாதமும். அந்த மக்களின் கம்பீரம் எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வ தற்குக் கோணார்க்கத்திலுள்ள நகராத ரதக் கோயிலும், புரிஜகந்நாதத்தின் நகருகிற தேருமே போதும். சூரியனுக்காக எழுப்பப் பட்ட மாபெரும் ஆலயம் கோணார்க்கில் உள்ளது. கிருஷ்ண பக்தியின் எல்லை நிலமாக எழும்பியது புரியில் ஜகந்நாதர் ஆலயம். ஆதி சங்கரரின் ஞான பீடங்களிலொன்று அமைக்கப்பட்ட புரியில்தான் சைதன்யரும், ஜயதேவரும் பக்தி வளர்த்தனர்.


புவனேசுவரத்தின் லிங்கராஜ ஆலயம் சிவ பக்திச் சிறப்பைப் பகருவது.

அசோகன் போர் வெறியை விட்டு, அன்பு நெறி கண்ட கலிங்கமே இன்றைய ஒரிஸ்ஸா.


இத்தனைப் பழம் சிறப்புக்களைப் பெற்ற ஒரிஸ்ஸாவுக்கு இன்றும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. பாரதத்திலேயே அங்குதான் சுதந்திரக்கட்சியின் அரசாங்கம் நடைபெற்று வருகிறது. சூரியனுக் குக் கோயில் எடுத்த மக்களின் வம்சாவளியினர் தாரகைச் சின் னம் கொண்ட சுதந்திரக்கட்சி யிடம் அரசாட்சியைத் தந்து, தங்களது விவேகத் தையும் சுதந்திர உணர்வையும் வெளியிட்டுக் கொண்டுள்ளனர். மன்னராகப் பிறந் தும் மனத்தால் பாமர மக்களில் ஒருவராகத் தம் மைக் கருதிக் கொள்ளும் ஸ்ரீ ஆர். என். ஸிங்தேவ் அவர் கள் ஒரிஸ்ஸா முதன் மந்திரியாக அரிய முறையில் நிர்வாகம் புரிந்து வருகிறார்.

சுதந்திரக்கட்சி ஆட்சியில் உள்ள இந்த ராஜ்யத்தில் சுதந்திரக்கட்சியின் வருஷாந்தர தேசிய மகாநாடு நடப்பது பொருத்தம் தானே? வருகிற அக்டோபர் மூன்றாந் தேதியிலிருந்து ஆறாம் தேதி வரை ஒரிஸ்ஸா வின் தலைநகரமான புவனேசுவரத்தில் இம் மகாநாடு ஒரு மகோற்சவமாக நடைபெற விருக்கிறது. சுதந்திரக் கட்சியின் அகில இந்தி யத் தலைவர்கள் மகாநாட்டில் பங்கு கொள் கிறார்கள். ராஜாஜியே ஒரிஸ்ஸாவுக்குச் சென்று மகாநாட்டில் கலந்து கொள்ள இருப்பது அந்த ராஜ் யத்தின் அதிருஷ்டம்.

நாட்டு நலனில் அக்கறை கொண்ட நல்லறிஞர்கள் இம் மகாநாடு மூலம் அரசாங்கத் துக்கும் மக்களுக்கும் நல்ல வழிகாட்டுவர். மகாநாடு சிறப் பாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.







ராஜாஜியின் கருத்துக்கள்

வருத்தத்துக்குரிய விஷயம்; ஆயினும் யதார்த்தத்தைப் புறக்கணிப்பதற்கில்லையாதலால் எழுதுகிறேன். 'சிந்தனைச் சுதந்திரம்' என்பதைப் பிரசார மந்திரமாகக் கொண்டிருந்த செக்கோஸ்லோவேகியா, இப்போது அதற்குப் பதில் 'ருஷியாவிடம் விசுவாசம் வளர்க்க வேண்டும்' என்பதை மந்திரமாக ஏற்றுவிட்டது. செக் மக்களை இதற்காக ஜனநாயக வல்லரசுகள் குறைகூறுவதற்கில்லை. முதலடி நடவடிக்கைகளையெல்லாம் எடுக்கக் கூடிய ஸ்தானத்தை ருஷியாவுக்கே அளித்து விட்டன இந்த ஜனநாயக வல்லரசுகள். அதன் பின் வேறென்ன விளைவை எதிர்பார்க்க முடியும்?

உலக நாடுகளின் கண்டனத்துக்கு எவ்வளவோ சக்தி உண்டு. செக்கில் ருஷியா செய்த துராக்கிரகம் குறித்து இந்தக் கண்டன சக்தி போதிய அளவு வெளிப்படுத்தப் பெறவில்லை.

ஃஃஃ

சில மக்களாவது அடிப்படை விஷயங்களை ஆர அமர ஆராய வேண்டிய தருணம் வந்து விட்டது. நிர்வாகத்திலோ, ராணுவத்திலோ உள்ள சர்க்கார் ஊழியர்கள், தொழிற் சங்கத்தினரின் உரிமைகளை எல்லாம் கோர முடியுமா என்பது அடிப்படை விஷயங்களில் ஒன்று. நீதி தேடும் உரிமையும், தாங்கள் நேர்மையாக நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தும் உரிமையும் அனைவருக்கும் உண்டு. எடுத்துக் கூறப்படும் குறைகளைக் கவனித்து அரசாங்கம் ஆவன செய்யவும் வேண்டும். ஆனால் சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதை ஏற்றுக் கொள்ளலாமா? தபால்காரர்களும், தந்தி பட்டுவாடா செய்கிறவர்களும், டெலிஃபோன் ஆபரேட்டர்களும், ரயில்வே கைகாட்டியை ஏற்றி இறக்குபவர்களும் உள்பட அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதென்பது, தங்களது சம்பளமும் படியும் உயர வேண்டும் என்பதை அழுத்திக் காட்டுவதற்காக நாச வேலையில் ஈடுபடுவதற்கொப்பேயாகும். இது வெறும் 'அடையாள' வேலை நிறுத்தமாகவே இருக்கலாம். ஆனால் 'அடையாள' காரியங்களே பெரிய முடிவுகளுக்கு இட்டுச் சென்றுவிடும். 'அடையாள' வேலை நிறுத்தம் நாச வேலைக்கு இட்டுச் செல்லும். அடையாளங்கள் வெறும் அடையாளமாக இருப்பதோடு நின்றுவிடா.

தனக்கு எவ்வளவுதான் அதிருப்தி இருப்பினும் நாசவேலைக்குக் கருவியாகி விடாமல் விரும்பவரே சர்க்கார் ஊழியர். ஓர் அரசாங்க ஊழியருக்கு அதிருப்தி ஏற்பட்டால், போதிய முன்னறிவிப்புத் தந்துவிட்டு வேலையை ராஜிநாமாச் செய்யலாம். ஆனால் வேலையில் இருந்துகொண்டே நிர்வாகத்தை நிலைகுலைக்கும் காரியத்தை அவர் ஒருகாலும் செய்வதற்கில்லை. வேலையில் இருந்து கொண்டே தாம் ஒப்புக் கொண்ட உழைப்பைத் தர அவர் மறுக்க முடியாது. ஒரு தொழிற்சாலையில் சர்ச்சைகள் திருப்திகரமாகத் தீர்க்கப்படாவிடில் அதனை மூடிவிடலாம். ஆனால் சர்க்காரை மூடிவிட முடியாது. சர்க்கார் காரியாலயங்களைப் போர்க்களங்களாகச் செய்வதற்கும் இல்லை.

இது ஒருபுறமிருக்க, ஊழியர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் நியாயமான முறையிலும் விரைவாகவும் விசாரித்து முடிவுசெய்ய வேண்டும். இது அரசாங்கத்தின் கடமை. அலட்சியமாக இருந்துவிட்டு, அல்லது காலதாமதம் செய்துவிட்டு, ஊழியர்களிடம் பூரண விசுவாசத்தை எதிர்பார்ப்பது சரியல்ல.

ஃஃஃ

ருஷியாவின் ஆக்கிரமிப்பு ஏற்படக் கூடும் என்ற நெரிசல் நிலைமையால், வட அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பின் (நாட்டோவின்) ஐக்கியம் வலுவாகி வருவதாகத் தெரிகிறது. புறத்திலிருந்து வருவதும், மனோ தத்துவ ரீதியில் வேலை செய்வதுமான ஒரு நெரிசலால் ஏற்படும் ஐக்கியம் உண்மையானதா என்ற கேள்வி எழுகிறது. அதெப்படி ஆயினும், சோவியத் ருஷியா மேற்கு ஜெர்மனியில் ஒருதலைப்பட்சமாக ராணுவ ரீதியில் குறுக்கிட்டால், உடனடியாக நாட்டோ, ஐக்கியத்துடன் தற்காப்பு நடவடிக்கை எடுக்கும் என்று அமெரிக்க அரசாங்கம் எச்சரித்திருப்பதை வரவேற்க வேண்டும். இது மேற்கு ஜெர்மனிக்குச் சிறிது ஆறுதல் தரும். இருப்பினும் நாட்டோ நாடுகளின் ஐக்கியத்தில் ஜெர்மனியின் முக்கியமான பத்திரிகைகள் நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

அட்டைப்பட விளக்கம்

வைணவன் யார்?

'விஷ்ணு என்கிற ஒரு மூர்த்திக்கு வழிபாடு செய்பவன் உண்மையான வைஷ்ணவன் ஆகி விடுவானா? அதாவது ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமாகி விடுவானா?' என்று காந்திஜி நினைத்ததுண்டு. அவருக்கு விளக்கம் கூறியது நரசிம்ம மேத்தாவின் வைஷ்ணவ ஜனதோ பாடல். எல்லாவித ஒழுக்கங்களுக்கும் உறைவிடமாக எவன் இருக்கிறானோ அவனே உண்மை வைணவன் என விவரிக்கும் பாடல் இது. பாடலைப் பாடிய மேத்தா அப்படிப்பட்ட வைணவனாக வாழ்ந்தவர்தாம். பாடலைக் கேட்ட காந்தி அடிகளும் அப்பாடலுக்கு உரையும் பொருளும் ஆனார். இவ்விதம் அட்டையில் இவ்விரு உண்மை வைணவர்களையுமே சுனுதேசாயின் ஓவியமாகத் தரிசிக்கிறோம்.


ஜெகசிற்பியன்
எழுதும்
புதிய சமூகத் தொடர்
கிளிஞ்சல் கோபுரம்
கல்கியில்
விரைவில்
ஆரம்பமாகிறது

மாற்றாரும் போற்றும் மகான்

ஸ்ரீஹரி

ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களுக்குள் உன்னதமானதோர் இடத்தைப் பெற்றுள்ள பக்தரும், கவியும், ஞானியுமான ஸ்ரீ வேதாந்த தேசிகரின் எழுநூறுவது பிறந்த தினத்தை முன்னிட்டு இச்சிறப்புக் கட்டுரையை நேயர்களுக்கு வழங்குகிறோம்.

— ஆசிரியர்

"அல்லியும் தாமரையும் தமது மோனத் திருவின் முழுமையும் தோற்றம் பெற்றிட அகல விகசித்து..." என்று எழுதி வந்த உரையாசிரியர் ஒரு கணம் எழுதுவதை நிறுத்தி, "ஆமாம்! இவ்விரு மலர்களும் ஏக காலத்தில் எப்படி மலர முடியும்? அல்லி இரவிலும், தாமரை பகலில் மட்டுமேயன்றோ மலரும்?" என்று ஒரு வினாவையும் ஒரு வியப்பையும் தாமே எழுப்பிக் கொண்டார்.

"வேங்கடேசக் கவி, வேங்கடநாதன் என்று தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்ளும் கவிகேஸரி; தூப்பில் ஸ்ரீ வேதாந்த தேசிகன் என்று அன்பர்களால் அழைக்கப்படும் மகா தேசிகன்; ஸர்வதந்திர ஸ்வதந்திரன், கவிதார்க்கிக ஸிம்ஹன் என்ற பிருதுகளைப் பெற்ற பெரியார் இப்படியொரு அஸம்பாவிதத்தை உண்மைபோல் சொல்வாரா?" என்று சொல்லிக் கொண்டார் வேதாந்த தேசிகரின் நூலுக்கு உரை எழுதி வந்த அந்த உரையாசிரியர். அதையடுத்து ஓர் அருமையான இலக்கிய ஆராய்ச்சியில் புகுந்து, வால்மீகி முதலான பண்டைய கவிகள் இதே போன்ற சம்பவத்தை வருணித்திருப்பதாகப் பல சான்றுகளைக் காட்டி 'அவற்றை அநுசரித்த வகையில்தான் வேதாந்த தேசிகனும் எழுதியுள்ளார். இதிலென்ன பிசகு?' என்று உரையாசிரியர் சமாதானமளிக்கிறார்.

"இம் மகா கவியின் இம் மகா காவியத்துக்கு இதுவரையில் நான் எழுதியுள்ளது போன்ற ஆராய்ச்சி பரமான விரிவுரை எழுதினால்தான் கவியின் கருத்தைத் தெளிய முடியும். ஆனால் அவ்வாறு எழுத வருஷங்கள் பல பிடிக்கும். எனது போஷகரான அரசன் கொடுத்திருக்கும் ஒரு வருஷ வரம்பிற்குள் இதன் உரை எழுதி பூர்த்தி பெறவேணுமாதலால் சாதாரணமாக உரையாசிரியர்கள் கையாளும் முறையைத் தழுவி இனி உரையைத் தொடருகிறேன்" என்று தொடர்ந்து எழுதி முடிக்கிறார் உரையாசிரியர்.

நூல், 'யாதவாப்யுதயம்' என்ற மகா காவியம். நூலின் ஆசிரியர் ஸ்ரீ வேதாந்த தேசிகன். அதற்கு உரை எழுதிய ஆசிரியர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்.

'ஹா! அப்படியா? அப்பய்ய தீக்ஷிதரா? வேதாந்த தேசிகனு? அவர்கள் ஒருவரோடொருவர் கீரியும் பாம்பும் போலச் சண்டை போட்டுக் கொள்ளும் பரம வைரிகளல்லவா? தீக்ஷிதர் சிவனைப் பரம்பொருளாகக் கொண்டவர்; தேசிகன் திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டவராயிற்றே? அப்படியிருக்க தேசிகன் நூலுக்கு தீக்ஷிதர் உரை எழுதினாரா?' என்று சிலர் கேட்கலாம். உண்மை அதுவல்ல.

வேதாந்த சித்தாந்த விஷயங்கள், சமய சம்பிரதாய முறைகள் இவை பற்றித் தெளிய, ஆராய்ச்சியாளரின் கருத்தரங்குகளைக் கூட்டிய நேரங்களில் அவரவரும் தத்தமது ஆராய்ச்சி மூலம் தாம் தாம் தெளிந்த முடிவைத் தெரிவித்திருக்கலாம். அவை மாறுபட்டவைகளாகவும் இருந்திருக்கலாம். அதனால் இருவரும் வைரிகள் என்று சொல்வது சரியாகாது. அவரவர் படிப்பு, அறிவு, ஆராய்ச்சி ஆற்றல், ஆராய்ச்சியின் தரம் இவற்றின் மதிப்பீட்டை உன்னி, ஒருவரை மற்றவர் மிகவும் மதித்து ஏற்றுள்ளார் என்பதுதான் உண்மை.

விஜய நகர சம்ஸ்தானத்தில் ஆஸ்தான பண்டிதரும் ராஜ குருவுமாக இருந்த ஸ்ரீ வித்யாரண்ய ஸரஸ்வதி ஸ்வாமிகள் யாத்ரிகர்கள் மூலம் ஸ்ரீ வேதாந்த தேசிகனின் யோக க்ஷேமங்களை விசாரித்தறிந்து "என்ன, மகா பண்டிதனை தூப்பில் திருமகன் உஞ்ச விருத்தி பண்ணி ஜீவிப்பதா? இதைத் தருமம் பொறுக்காது" என்றார். உடனே தம் சிஷ்யரை அழைத்து, "ஸ்ரீ தேசிகன் இங்கு எழுந்தருளி, சம்ஸ்தான கவியாயிருந்திடல் வேணும்' என்று விருப்பம் தெரிவிக்கும் ஓலையைக் கொடுத்து, ஸ்ரீ தேசிகனைக் கையோடு அழைத்து வருமாறு பணித்தார். அத்வைத, விசிஷ்டாத்வைத என்ற சம்பிரதாய பேதங்களின்றி இக்கனிவும் மன நெகிழ்வும் ஏற்பட்டதேன்? ஒருவர்பாலொருவருக்கிருந்த நட்பும் நன் மதிப்பும்தான் காரணம். இது வைரிகளிடையில் ஏற்படுவதா? இவர்களிடையிலா வைரம் ஏற்படும்? வேற்றுமை உணர்ச்சி எல்லாம் நம் மட்டத்தில் இருப்பவருக்குத்தான் உண்டாகும்.

சைவர்களும் நிர்க்குண உபாஸகர்களும் போற்றிய அந்த வைஷ்ணவ சிகாமணியான தேசிகன் யார்?

காஞ்சியின் புறநகர் பிரதேசமான தூப்பில் என்னுமிடத்தில் ஸ்ரீ அனந்த ஸோமயாஜி என்னும் விசுவாமித்திர கோத்ரத்தைச் சேர்ந்த அந்தணப் பெரியார் தமது தர்ம பத்தினியான தோதாரம்பாவுடன் வேத முறைப்படி இல்லறம் நடத்தி வந்தார்.

ஒருகால் இத்தம்பதி திருப்பதிக்கு யாத்திரை சென்றிருந்தபோது தமக்குச் சந்தான பாக்கியம் அருள வேண்டுமென்று வேங்கடாசலபதியை வேண்டிக் கொண்டனர். யாத்திரை முடிந்து தமது இல்லம் திரும்பிய சில நாட்களில் ஸ்ரீ அனந்த ஸோமயாஜிக்கும் ஸ்ரீமதி தோதாரம்பாவுக்கும் ஸ்ரீ வேங்கடநாதனின் அருளால் ஒரு கனவு ஏற்பட்டது. அதில் யாரோ ஒரு வயோதிகப் பிராமணர் பிரம்ம தேஜஸுடன் தோன்றி ஒரு சிறிய கண்டை (கோயில் மணி)யை தோதாராம்பாளிடம் அளிக்க, அப்பெரியாரின் ஆணைப்படி அதை அவள் விழுங்கிவிடுகிறாள். இது சதிபதிகள் இருவருக்குமே உண்டான கனவு. காலையில் இச்செய்தியை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டபின் ஸ்ரீ வேங்கடநாதன் அருளால் அவரது திருக்கோயிலிலுள்ள கண்டை (மணி)யின் அம்சமாகத் தமக்குச் சந்தானம் ஏற்படுமெனத் தெளிந்தனர்.

காலக்கிரமத்தில், இன்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குமுன் புரட்டாசி மாதத்தில் (சிரவண) திருவோண நட்சத்திரம்கூடிய ஒரு தினத்தில் தூப்பில் ஸ்ரீ அனந்தஸோமயாஜியின் தர்மபத்தினியான ஸ்ரீமதி தோதாரம்பா ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அவர்தான் இன்று வைணவ ஆசார்யர்களுள் ஸ்ரீ ராமாநுஜனுக்கு அடுத்தபடியாகப் பலரால் போற்றப்படும் ஸ்ரீ வேதாந்த தேசிகன்.

உற்ற காலத்தில் ஸ்ரீ அனந்தஸோமயாஜிகள் தமது மகனுக்கு ஜாதகர்ம, நாமகரண, சௌள, உபநயநாதிகளைச் சாஸ்திரப்படி செய்தருளினார். திருமலைப் பெருமானின் பெயரையே மகனுக்கு வைத்து வேங்கடேசன் என்று அழைத்தார். வேங்கடநாதன் என்றும் சிலரால் அழைக்கப்பட்டார். ஸ்ரீநிவாஸனுடைய கண்டையின் மறுதோற்றம் என்று கொண்டு இவரைச் சிலர் கண்டாவதாரம் என்றும் அழைப்பர். திருப்பதி தேவாலயத்தில் மணி இன்றளவும் ஆளப்படாமலிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கண்டை என்னும் கோயில் (பூஜை) மணியைப் பற்றி பாஞ்சராத்ர ஆகமத்தில் பொதுவாக கண்டைக்கு வாசுதேவனும், அதன் நாக்குக்கு ஸரஸ்வதியும், ஒலி எழக் காரணமான அந்நாக்கின் அசைவுக்குப் பிரம்மனும், கைப்பிடிக்கு அக்னியும், சூரியனும், அதன் நாதத்துக்கு ஈச்வரனும் அதிதேவதைகள் என்று விளக்கப்பட்டுள்ளது. இவ்வதிதேவதைகளின் சிறப்பான அம்சங்கள் யாவும் ஒன்றுசேரப் பெற்றிருந்தார் என்னும் காரணத்தால் இவரைக் கண்டாவதாரம் என்று (கற்பனையாக) அழைத்தனரோ என்னும் சிலர் சொல்லலாம். ஆனால்,

"திருமலைமால் திருமணியாய்
சிறக்க வந்தோன் வாழியே......"

என்ற வாழித் திருநாமக் கருத்து நிலையான சான்றாகும்.

தூப்பில் பிள்ளையின் தாய் மாமனான ஆத்ரேய ராமாநுஜாசார்யன் என்பவர் திருமாலின் வாகனமும், வேதஸ்வரூபி என்று தெளியப்பட்டவருமான கருத்மானின் அம்சம் என்பது வைணவ சமயத்தாரின் கருத்து. இவரைத் தமது ஆசிரியனாகப் பெற்றுத் தமது இருபது வயதுக்குள்ளாக வேத வேதாந்த சாஸ்திரபுராணாதி சகல கலைகளையும் ஐயந்திரிபற கற்றுத் தெளிந்தார் ஸ்ரீ தூப்பில் பிள்ளையாகிய வேங்கடநாதன். அவரிடமிருந்தே காருட மஹாமந்த்ரோபதேசமும் பெற்றார்.



பிறகு திருவஹீந்திரபுரமென்னும் ஸ்ரீதேவநாதனின் திருக்கோயிலை அடுத்த மலைச்சாரலில் அமர்ந்து அங்க ந்யாஸாதி கிரமப்படி ஸ்ரீகாருட மந்திரத்தை அநுஸந்தித்து ஜபித்துத் தியானத்தில் மூழ்கியிருந்த நிலையில் ஸ்ரீ கருடன் இவருக்குப் பிரத்தியக்ஷமானார்; ஸ்ரீஹயக்ரீவ மஹாமந்திரத்தை உபதேசித்தார். அம்மந்திரத்தின் அநுஸந்தானத்தினால்

இவர் அமோகமான சித்திகளைப் பெற்று, தலைசிறந்த சமயாசாரியனாய் விளங்கி, இகத்திலும் பரத்திலும் பெறத்தக்க பிறவிப் பயன்களையெல்லாம் முழுமையாகப் பெற்றிடவும் நல்லாசி வரன்களை வழங்கி மறைந்தார் கருடாழ்வார். ஸ்ரீ தூப்பில் தேசிகனும் அவ்வாறே ஸர்வ வித்யைகளுக்கும் ஆதாரமான, ஞானானந்தமயனான ஸ்ரீ ஹயக்ரீவனை உபாஸித்து அவனது பரிபூரண அருளைச் சாதித்துக் கொண்டார்.

தொடர்ந்து அவ்வூரிலேயே சில வருடங்கள் வசித்து வந்தார். அச்சமயம், கிருஹஸ்தராய் அங்கு அவர் வசித்த இல்லத்தை ஸ்ரீ தேசிகனின் பக்தர் இன்றும் நன்முறையில் வைத்துப் பாலித்து வருகின்றனர். ஸ்ரீ தேசிகனுக்குத் தனியாக ஓர் ஆலயம் கட்டி அவரை வழிபட்டு வருகின்றனர். அவ்வூரில் தேவநாதப் பெருமான் கண்டருளும் உத்ஸவாதி வைபவங்களுக்கு இணையான அளவிலேயே ஸ்ரீ தேசிகனும் திருவிழாக் கொண்டு வருகிறார்.

'கற்றல், கற்பித்தல் என்னும் தருமங்களை ஏற்று இடைவிடாமலும் இம்மியும் வழுவாமலும் வாழ்க்கையை நடத்தி வரவேண்டும். இதுதான் ஒருவன் தன் குருவுக்கு அளிக்கும் சிறந்த குருதட்சிணையும், குருகுலத்துக்குச் செலுத்தும் கடமையுமாகும்' என்று வேதோபநிஷதங்கள் வகுத்தபடி ஸ்ரீவேதாந்த தேசிகன் திருவஹீந்திரபுரத்தில் வசித்த சில நாட்களிலேயே செயல்படத் தொடங்கிவிட்டார். பிற்காலத்தில் பல்வேறு க்ஷேத்திரங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள பெருமானுக்கு மங்களாசாஸனங்கள் செய்தும் — சிற்சில நாட்கள் ஆங்காங்கே தங்கிச் செல்வதுமாக சுமார் நூறு வருஷ காலம் (வேத நூல்கள் வகுத்தபடி) வாழ்ந்தார்.

திருவஹீந்திரபுரத்திலும் ஸ்ரீரங்கத்திலும் வாழ்நாளில் கணிசமான காலத்தைக் கழித்தாராயினும் ஸ்ரீ தேசிகன் நெடு நாட்கள் காஞ்சியில்தான் வாழ்ந்தார் என்று தெரியவருகிறது.

காலமெல்லாம் உஞ்சவிருத்தியைத்தான் ஜீவனோபாயமாக ஏற்று வாழ்ந்தார். தேவைக்கு அதிகமானதைப் பெறுவதில்லை. வைராக்கிய நிறைவைப் பெற்றிருந்தார்.

சிஷ்யருக்குப் பாடம் சொல்லும் வகையாகவும் கருத்தரங்கங்களில் பயன்படுத்துவதற்கென்ற வகையிலும், போட்டிப் பரிசுகளுக்கெனவும், தேவாலயங்களுக்குச் சுவாமி தரிசனத்துக்காகச் சென்ற காலத்தில் அங்கு கோயில் கொண்ட பெருமானின் புகழைப் பாடும் வகையிலும் — என்றிப்படி. இவர் இயற்றியவை சுமார் நூறுக்கும் அதிகமான நூல்கள் உள்ளன.

ஸம்ஸ்கிருதம், அதன் கொச்சையான பிராகிருதம், தமிழ், (தமிழும் வடமொழியும் கலந்த) மணிப்பிரவாளம் என்ற மொழிகளில் இவர் நூல்கள் இயற்றினார். அதிகரண ஸாராவளி (வடமொழி) என்ற ஸ்ரீபாஷ்யத்தின் விரிவுரை ; தாத்பர்ய சந்திரிகா (வடமொழி) என்ற கீதாபாஷ்யத்தின் விரிவுரை இரண்டும் இவரது பாஷ்ய நூல்களில் முக்கியமானவை.

இவரது சமய தத்துவ நூல்களில் முக்கியமானவை: தத்வமுக்தாகலாபம் (வடமொழி) என்ற ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த விளக்கம்; ரஹஸ்யதிரயம் — வடமொழி தென்மொழிகளில் சான்றுகளைத் தழுவி தமிழிலான ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்கள்.

இவரது யாதவாப்யுதயம் வடமொழியிலான ஒரு காவியம். ஸ்ரீ கிருஷ்ணனின் சரிதம். இடையிடையே ஸ்ரீ பகவத் ராமாநுஜனின் வைபவங்களையும் தெரிவிக்கும் வகையில் இரண்டு பொருள்கள் தரும் வகையில் எழுதப் பட்டிருப்பதுடன், கவிதா சக்தியையும் கற்பனா சக்தியையும் காண்பிப்பதற்கென்றே எழுதப்பட்டதோ என்று தோன்றும்படி அமைந்தது. ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் உரையில் மெச்சப்பட்டுள்ளது.

ஹம்ஸ ஸந்தேசம்: தூதுகாப்பியம்—ராமாயணத்தின் ஒரு நிகழ்ச்சியைத் தழுவி முழுதும் கற்பனையாக வடமொழியில் எழுதப்பட்டது. பூனைக் குட்டியின் முயற்சி இல்லாமலே தாய்ப் பூனை அதைப் பற்றி எடுத்துச் செல்வது போல் ஆண்டவன் தானாகவே ஜீவர்களுக்கு அருள் புரிகிறான் என்ற மார்ஜார நியாயத்தை யொட்டிக் கிடைக்கப்பெறும் பகவானின் அருளை விளக்குவதே இந்நூலின் லட்சியம்.

ஸங்கல்ப ஸூர்யோதயம்: வடமொழி நாடகம். க்ரோதம், டம்பம், சாந்தம் போன்ற மனிதனின் குணதோஷங்களை நாடக பாத்திரங்களாக்கிக் கற்பனைச் சிகரமாக எழுதப் பட்டது.

முனிவாஹன போகம்: இது தமிழ் நூல். திருப்பாணாழ்வார் இயற்றிய 'அமலனாதி பிரான்' என்ற திவ்யபிரபந்த பாசுரத்திற்கு விரிவுரை.

தேசிகனின் ஸ்தோத்திரங்களில் திருப்பதி ஸ்ரீநிவாஸப்பெருமானின் எண்ணிறந்த கல்யாண குணங்களில் ''தயை'' என்னும் ஒரே ஒரு குணத்தை மட்டும் விளக்கிடும் 'தயா சதகம்' என்ற நூறு சுலோகம் கொண்ட நூலும், பகவானுடைய பாதுகையையும் அவனது ஒரு தேவியாகக் கற்பனை செய்து துதித்து ஒரே இரவில் எழுதிய ஆயிரம் சுலோகங்களுள்ள பாதுகாஸஹஸ்ரமும் புகழ்பெற்றவை. சரணாகதியை உபாயமாக ஏற்று அதைக் கடமையாகக் கைப்பிடித்து மனிதன் கடைத் தேறவேணும் என்று வழிகாட்டியாயமைந்த நியாஸதிலகம், நியாஸவிம்சதி ஆகியவை பக்தருக்கும் ரசிகருக்கும் நல்விருந்தாம். ரகுவீரகத்யம் தற்போது மிகப்பிரசித்தி பெற்றுள்ளது.


ஆஹார நியமம் என்ற நூலினால் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் வழி கூறுகிறார் தேசிகன். சரீரத்தின் தடுப்புச் சக்தி குன்றாமலிருக்குமாறு காத்துக் கொள்ளும் வகைகளை விளக்கும் வைத்திய விஷயமும் தேசிகனுக்குத் தெரியாத விஷயமல்ல என்று காண்கிறோம்.

இவருக்கு ஸ்ரீ ரங்கநாதனும், ஸ்ரீ ரங்கநாயகியுமே வேதாந்த தேசிகன், ஸர்வதந்திர ஸ்வதந்திரன் என்ற பிருதுகள் அளித்தனர். இவை இவருக்கு முற்றும் பொருந்துமோ என சங்கித்தவர் வைத்த பற்பல சோதனைகளில் வெற்றிவாகை சூடினார். இது குறித்த வரலாறுகள் பல.

இப்படிப்பட்ட மகானுக்கு இன்று நம் அஞ்சலிகளை அளிக்கிறோம்.



தமிழக முதலமைச்சர்



டாக்டர் மில்லர்


வாழ்க அண்ணா!

இறைவனின் திரு அருளும், கோடானு கோடி மக்களின் நல்லெண்ணமும் முதலமைச்சர் அண்ணாதுரை அவர்களைக் காப்பாற்றி விட்டன. சுருசுருப்புடன் முடிவெடுத்து, தக்க கவனத்துடன் ரண சிகிச்சை செய்த, நியூயார்க் மெமோரியல் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் மில்லரின்பால் தமிழர்கள் அனைவரின் நன்றி நிறைந்த உள்ளம் திரும்புவது இயல்பேயாகும். சென்னையிலிருந்து முதன் மந்திரியுடன் அமெரிக்காசென்றவரும், வழிப்பயணத்தின்போதும், ரணசிகிச்சையின் போதும், அதன் பின்னரும் திரு அண்ணாதுரை அவர்களை சர்வ ஜாக்கிரதையுடன் கவனித்து வருபவருமான நமது ரண சிகிச்சை நிபுணர் திரு வி. எஸ். சதாசிவம் அவர்களுக்கும் நமது நன்றியறிதலை அளிக்கிறோம்.

அண்ணாதுரை அவர்களின் ரண சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறியதற்காக ஆண்டவனுக்கு வந்தனம் தெரிவித்து 19ந் தேதியன்று சுதந்திரக் கட்சியின் சார்பில் சென்னை கோகலே மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் சா. கணேசன், சந்தோஷம், ஹண்டே, முரசொலி மாறன் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்துக்கு ராஜாஜியே பிரசன்னமாகிப் பேசியது அண்ணாதுரை அவர்களின் பாக்கியம்.

மக்களின் அன்பும் மகான்களின் ஆசியும் பெற்ற அண்ணாதுரை விரைவில் பூரண குணமடைவாராக!

முதன்மந்திரியை வாழ்த்தி ராஜாஜி பேசுகிறார்



டாக்டர் சதாசிவம்





சென்னை தக்ஷிண ரயில்வே சீப் இஞ்ஜினியர்ஸ் ஆபீஸ் கன்ஸ்ட்ரக்ஷன் தலைமைக் குமாஸ்தா ஸ்ரீ கே. வி. நாராயணமூர்த்தி அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி அகிலாவுக்கும், சென்னை ஸ்ரீ எஸ். சங்கர ஐயர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி எஸ். விஸ்வநாதனுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

சினிமா சிந்தனை

பி. எஸ். ராமையா

கடந்த சில வாரங்களாகக் கல்கி வெளியிட்ட சினிமா சிந்தனைகளை ஒருங்கிணைத்து, அலசிப் பார்த்து, முடிவு களை வழங்குகிறார் பெயர்பெற்ற எழுத்தாளரும் நாடக, திரைப்படக் கலைஞருமான திரு பி.எஸ். ராமையா அவர்கள்.



திரு கி. வா. ஜகந்நாதன்



ஸ்ரீமதி சௌந்தரம்கைலாசம்



திரு ஆல்பர்ட் பிராங்க்ளின்



ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன்

1

இப்போது அடுத்தடுத்து வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ப் படங்களின் தரம், அவை தமிழ் மக்களிடையே ஒவ்வொரு நாளும் பரப்பிக் கொண்டிருக்கும் கருத்துக்கள், சுவை ஆகியவை பற்றிய குறைகூறல்களும் குற்றச்சாட்டுகளும்தான் இந்த 'சினிமா சிந்தனை'யைத் தூண்டி விட்டிருக்கின்றன. ஆகையால் அப்படிக் குறைகூறுகிறவர்களும் குற்றம் சாட்டுபவர்களும் யார் யார், அவர்கள் என்ன நிலையிலிருந்து பேசியிருக்கிறார்கள் என்பதை நாம் முதலில் தெளிவு செய்து கொள்ள வேண்டும்.

திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர். தமிழ் மக்களின் நாகரிகம், கலாசாரம், பண்பு ஆகியவற்றைத் தெள்ளத் தெளியக் கற்றுப் பரப்புபவர்.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களும் நம்முடைய இலக்கிய வளத்தில் மட்டற்ற பெருமையும், ஓரளவு கர்வமும் கொண்டவர். அவற்றின் பலத்துடன் மக்களின் நல்வாழ்வுக்குத் தொண்டு செய்து கொண்டிருப்பவர். தாமே கவிதை இயற்றுகிறவர்.

திரு ஆல்பர்ட் பிராங்க்ளின் அமெரிக்கருக்கும் இந்தியருக்கும் இடையில் நல்லெண்ணமும், உறவும் வளர்ப்பதற்காகவே அந்த நாட்டிலிருந்து இங்கு வந்தவர்.

இவர்கள் மூவருக்கும் தமிழ் சினிமாவுடன கலை என்றநிலையில் அல்லாமல், தொழில் வியாபாரம் என்ற நிலைகளில் எவ்விதத் தொடர்பும் இருக்க முடியாது. ஆகையால் அவர்கள் தமிழ்ப் படங்களைப் பற்றிக் குறை சொன்னாலும், குற்றம் சாட்டினாலும், ''நாட்டு மக்கள் மனப்போக்கில் தமிழ்ப் படங்கள் அழுக்கை ஏற்றிக் கொண்டேயிருக்கின்றனவே, இது எங்கேபோய் முடியுமோ? வருங் கால மக்களின் உணர்ச்சித் திறன், அறிவு வளர்ச்சிகளை எப்படிப் பாதிக்குமோ?'' என்ற கவலையினால் மட்டுமே தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

மக்களின் மனப் போக்கில் அன்றாடம் நேரும் சுவை மாற்றம், எரிச்சல்கள், ஏமாற்றங்கள், கசப்புக்களை யெல்லாம் உடனுக்குடன் உணர்ந்து அறியும் வாய்ப்பு ஒரு பத்திரிகைக்கு உண்டு. மற்றவர் களைவிட ஒரு பத்திரிகையின் ஆசிரியக் குழுவினருக்குத்தான் மக்கள் மனத்தில் நிகழும் சலனம் முன்னதாகத் தெரியும். ஆகையால், ''குமுதத்''தின் குற்றச்சாட்டை லட்சக்கணக்கான தமிழ்ப் பத்திரிகை வாசகர்களின் கருத்து வெளியீடு என்று கொள்ள வேண்டும்.

அதே போலத்தான் ''ஸ்டார் அண்டு ஸ்டைல்'' என்ற பத்திரிகையின் குற்றச்சாட்டும்.

திரு ஜாவர் சீதாராமன் அவர்கள் பல ஆண்டுகளாகத் தமிழ்ப் படங்களுக்கு கதை வசனம் எழுதி வருபவர். அவர் கூறும் குறை அனுபவபூர்வமானது.

திருவனந்தபுரம் திரு மணியும் பொன்னமராவதி திருமதி எம். எஸ். லீலாவும் பணம் கொடுத்துப் படம் பார்க்கும் பல லட்சம் சினிமா ரசிகர்களின் இரு பிரதிநிதிகள். இவர்களுடைய அங்கலாய்ப்பும், குற்றச்சாட்டும் முழுக்க முழுக்க தமிழ் சினிமாப் பத்திரிகையான ''பொம்மை''யில் வெளிவந்திருப்பவை.

குறைகூறல் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லியிருப்பவர்களில் ஆறுபேர்கள் தமிழ்ப் படத் தயாரிப்பில் வெவ்வேறு துறைகளில் வெற்றி கண்டு முன்னணியில் இருப்பவர்கள். திருமதி சந்தியா இன்று உச்சியில் நிற்கும் ஒரு நடிகையின் தாய் என்ற முறையில் பதில் சொல்லி யிருக்கிறார். ஆகையால் அதை ஒரு முன்னணி நிலையிலுள்ள நடிகை யின் பதில் என்றே வைத்துக்கொள்ளலாம்.

திருமதி சரோஜினி வரதப்பன் மக்கள் தொண்டில் சிறப்புப் பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். பெண் குலத்துக்குத் தொண்டு செய்து வருபவர். சினிமா தணிக்கைக் குழுவில் அனுபவம் பெற்ற உறுப்பினர்.

பதில் சொல்லி யிருக்கும் இந்த எட்டுப் பேர்களும் என்ன சொல்கிறோம் என்பதை நன்கு உணர்ந்து ஒளிவு மறைவு இல்லாமல் பேசியிருக்கிறார்கள்.

"இப்போது வரும் தமிழ்ப் படங்களில் இயற்கையான வாழ்க்கையை ஒட்டிய சம்பவங்கள் இருக்கின்றனவா என்று பூதக் கண்ணாடியைக் கொண்டுதான் தேடிப் பார்க்க வேண்டும்" என்று குறை கூறுகிறார் திரு கி. வா. ஜகந்நாதன்.

மனித சுபாவம், நடப்பு வாழ்க்கை, அந்தந்தக் காலத்திய மக்களின் நம்பிக்கைகள், கொள்கைகள், லட்சியங்கள், சுவைகள், ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்ட நிகழ்ச்சிகளைத்தான் 'இயற்கையான வாழ்க்கையை ஒட்டிய சம்பவங்கள்' என்கிறார் கி. வா. ஜ. படக் கதை, நிகழ்காலம், புராணக் காலம், அல்லது நாட்டு வரலாற்றில் ஏதாவது ஒரு பகுதிக் காலத்தில் நிகழுவதாக இருக்கலாம். ஆனால் மனிதப் பான்மையும், மனிதத் தன்மையும் என்றும் மாறுதலை. ஆகையால் படங்களில் வரும் பாத்திரங்கள் அந்தக் காலத்திய நடப்பு, வாழ்க்கைக் கொள்கைகள், சுவைகளைப் பிரதிபலிப்பதோடு மனிதப் பான்மையில் மாறாத மனமும், உள்ளமும் கொண்ட மனிதப் பிறவிகளாகத் தோன்ற வேண்டும். ஆனால் இப்போது வரும் படங்களில் பாத்திரங்களின் செயல்களும் அவற்றிற்காகக் கற்பனை செய்யப்படும் நிகழ்ச்சிகளும் பான்மை கெட்டவைகளாக இருக்கின்றன என்பதுதான் திரு ஜகந்நாதன் சுட்டிக் காட்டும் குறை.

இதற்குப் பதில் சொல்லும் திரு எம். எம். ஏ. சின்னப்ப தேவர், "இயற்கையை ஒட்டினாற்போல படம் எடுத்தால் ஓட மாட்டேங்குது. காசு வரமாட்டேங்குது.... நாங்க படம் எடுக்கறதே காசுக்காகத்தானே?" என்று ஒளிவு இல்லாமல் சொல்லியிருக்கிறார்.

கதை என்பது கற்பனைச் சரக்குத்தான். அதாவது செயற்கைப் பண்டம்தான். ஆயினும் அந்தச் செயற்கையிலும் ஒரு வகை தொகை வேண்டாமா?

இப்போது வரும் பெரும்பாலான தமிழ்ப் படங்களில் வரும் கதைத் தலைவன் (ஹீரோ), கதைத் தலைவி (ஹீரோயின்), அவளுடைய தகப்பன் ஆகிய மூன்று பாத்திரங்களை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

அந்த ஹீரோ என்பவனுடைய ஊர் எது? பெற்றோர் யார், சமூகத்தில் அவனுடைய நிலைமை என்ன என்பது யாருக்கும் தெரியாது. அவனைப் பற்றிய அந்த விவரங்களிருந்தால் அதெல்லாம் ஹீரோயினுக்கு இருக்காது. ஹீரோயினுக்கு ஒரு தகப்பன் மட்டும் இருப்பான். அவன் நிச்சயமாகக் கொழுத்த பணக்காரனாக இருப்பான். எங்கிருந்தோ வந்த ஹீரோ அந்தத் தகப்பன் எதிரிலேயே அவனுடைய அந்த அழகான இளம் பெண் மகளைக் காதலிப்பான், சரசமாடுவான், புல் தரையில் அவளுடன் கட்டிப் புரளுவான். இவ்வளவையும் அனுமதித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டு "அப்பன்" ஒருவனை யாவது இயற்கையை ஒட்டிய வாழ்க்கையில் காண முடியுமா?

"இந்த ஹீரோவும், ஹீரோயினும், அவளுடைய தகப்பனும் இயற்கையான வாழ்க்கையை ஒட்டிய மனிதர்கள் இல்லைதான். ஆனால் நாங்கள் படமெடுப்பதே காசுக் காகத்தானே? அதற்காகவே இம்மாதிரி மனித உருவங்களைப் படைத்துப் படமெடுக்கிறோம்" என்று தொனிக்கும் திரு தேவர் பதிலில் "இந்தப் பிதற்றல் கற்பனைப் பாத்திரங்களின் செயல்களைக் கண்டு ரசித்துப் பணத்தைக் கொட்டிக் கொடுக்கும் சினிமாப் பைத்தியங்கள் லட்சக் கணக்கில் இருக்கின்றன தமிழ் நாட்டில்" என்ற கருத்துத் தானே வெளியாகிறது?

"உதாரணமாக விதவா திருமணத்தையே எடுத்துக்குங்க... விதவா விவாகம் வேண்டும் என்று கூறும் நாமே அதைப் படத்தில் பார்க்கும்போது வெறுத்து ஒதுக்குகிறோம். இது ஏன்?" என்று கேட்கிறார் திரு தேவர்.

இது ஒரு அபத்தமான கேள்வி. "குல தெய்வம்" படத்தில் விதவா விவாகம் பனிச்சென்று நடத்திக் காட்டப் பட்டிருக்கிறது. படத்தின் முடிவில் கதைத் தலைவனின் தம்பி ஒரு விதவைப் பெண்ணுக்கு மாலை சூட்டி மணம் செய்து கொள்கிறான். அந்தக் கருத்துக்காக மக்கள் அந்தப் படத்தை வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. படம் பண வசூலில் பெரும் வெற்றியை அடைந்தது. விதவா விவாகத்தைப் பற்றி மக்கள் ஆதரவு பேச்சளவோடு சரி என்பது உண்மையானால் அந்தப் படம் அவ்வளவு பெரிய வெற்றி கண்டிருக்கவே முடியாது.

"எந்தக் கருததானாலும் அதைப் படத்தில் சொல்ல வேண்டிய பக்குவத்தில், மக்கள் மனக் கனிவுடன் ரசிக்கும் பக்குவத்தில் கொடுக்கும் திறமை எங்களிடம் இல்லை. அந்தப் பக்குவ முறையைப் பற்றிச் சிந்திக்க எங்களுக்குப் பொழுதும் பொறுமையுமில்லை. ஆகையால் சட்டுப் புட்டென்று எதையாவது காட்டிக் காசு சேர்ப்பதுதான் எங்கள் குறி" என்று சொல்லி யிருந்தால் திரு தேவரின் பதில் இன்னும் பச்சை உண்மையாக இருந்திருக்கும். திரு தேவர் சுட்டிக் காட்டும் இரண்டொரு நல்ல படங்களின் தோல்விக்குப் பெரும்பாலான ஆபாசப் படங்களும் அவை மக்களிடையே வளர்த்து வரும் ரசனை மட்டமும்தான் காரணம்; பொறுப்பு.




முடிச்சவிக்கி


ஏதோ 'வசவு' என்றுதானே எண்ணி விட்டீர்கள்? அது தான் இல்லே. முடிச்சுக்களை மாயமாக அவிழ்ப்பவன் முடிச்சு அவிழ்க்கி — அதாவது முடிச்சவிக்கி!

மந்திரவாதி மேடை மீது ஒரு காகிதக் குழலுக்குள் வெள்ளைக் கயிறு ஒன்றை நுழைக்கிறார். அதன் ஒரு முனையைக் குழல் மீது கொண்டு வந்து பல முடிச்சுக்களைப் போடுகிறார். பிறகு அந்த முடிச்சுக்களைத் தளர்த்தி நகர்த்திக் கொண்டு வந்து குழலுக்குள் திணிக்கிறார். பல முடிச்சுகள் குழலுக்குள். கயிற்றின் இருமுனைகளும் குழலின் இரு பக்கத்திலும் தொங்கும். பார்வையாளர் இருவரைக் கூப்பிட்டு இரு முனைகளையும் பிடித்து இழுக்கச் சொல்லுகிறார் மந்திரவாதி. நடப்பது என்ன? கயிறு நீளுகிறது. குழல் அதன் மீது குதிக்கிறது. முடிச்சுக்களைக் காணவில்லே! அவர் போட்ட அந்த முடிச்சுகள் எப்படி மாயமாக மறைந்தன?

மந்திரமா? இல்லே, தந்திரம். நீங்களும்கூட மந்திரவாதியாக லாம். ரகசியம் இதுதான்:

படம் ஒன்றில் காட்டியபடி ஒரு குழலினுள் ஒரு நீள மான கயிற்றை நுழையுங்கள். பிறகு படம் 2ல் காட்டியுள்ள படி குழலின் இடப்பக்கத்திலுள்ள கயிற்றைக் குழலின் மீது கொண்டு வந்து அப்படி முடி போடுங்கள். முதல் முடிச்சுக்கு முன்னால் கொஞ்சம் கயிறு தாராளமாக விடப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். இது முக்கியம். இதேபோல, இரண்டு, மூன்று, நான்கு முடிச்சுக்கள் போடவும். (படம் 3) முதல் முடிச்சுக்கு முன்னால் விட்டிருந்த கயிற்றைப் பற்றிக் கொண்டு முதல் முடிச்சை மெல்ல நகர்த்திக் கொண்டு வந்து படம் 4ல் காட்டியுள்ளபடி குழலுக்குள் திணியுங்கள். இப்படியே எல்லா முடிச்சுக்களையும் நீங்கள் பற்றியிருந்த அதிகப்படியான கயிற்றையும் குழலுக்குள் திணித்து விடுங்கள். இப்போது குழலின் வெளியே கயிற்றின் இருமுனைகள் மட்டுமே தொங்கிக் கொண்டிருக்கும். முடிச்சுக்கள் குழலுக்குள் அடைபட்டிருக்கும். (படம் 5) உங்கள் தோழர்களில் இருவரைக் கூப்பிட்டுக் க ?ற்றின் ஒவ்வொரு முனையையும் ஒவ்வொருவரிடம் கொடுத்து இழுக்கச் சொல்லுங்கள். அப்போது மந்திரம் போடுவது போலப் பாசாங்கு செய்ய மறக்க வேண்டாம்! கயிறு நீளும். முடிச்சுக்கள் மறையும். குழலைக் கயிற்றின் இரு பக்கங்களுக்கும் நகர்த்தி முடிச்சு மறைந்த வித்தையைக் காட்டி மந்திர வாதியாகுங்கள்.







தயாரிப்பு:
வாண்டுமாமா

▫ 9 ▫

குடிசைத் தீ


'குடிசைத் தீ' என்று சமீப காலமாகச் செய்திகள் கொழுந்து விட்டு எரிந்ததைப் பார்த்து வருகிறீர்கள். 'தீய சக்திகள்' என்றுதான் வர்ணிக்கப்படுகிறதே தவிர நிச்சயமாகத் தீ விபத்துக்களுக்கான காரணங்களை அறிய முடியவில்லே. இருக்கட்டும். வெட்ட வெளிகளில், காய்ந்த புல் படர்ந்த பிரதேசங்களில் சில வேளே திடீரென்று தீப்பிடித்துக் கொள்ளும். இப்படி ஏற்படும் தீ விபத்துக்கள் சாதாரண ஒரு காலி பாட்டிலால் கூட ஏற்படலாம். எப்படி? கண்ணாடி பாட்டிலின் வளைவான பக்கங்கள் தன்மீது விழும் சூரியனின் நேரான கிரணங்களைச் சற்றே வளைத்து மறு பக்கத்துக்கு அனுப்புகிறது. இப்படி வளைக்கப்பட்ட கிரணங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்று சேருகின்றன. ஒன்று சேரும் போது உஷ்ணம் ஒருமுகப்பட்டுக் குபீரென்று தீப்பிடித்துக் கொள்ளும். நீங்கள் பூதக் கண்ணாடி மூலம் பஞ்சிலே நெருப்பைப் பற்ற வைப்பதில்லேயா? அதே வேலேயைக் காலி பாட்டில் செய்து தீப்பிடிக்க வைக்கிறது. "குடிசைத் தீ கூட இப்படிக் காலி பாட்டிலின் கை வரிசை என்று... உஸ்... நமக்கு ஏன் இந்த வம்பு?" என்கிறான் கிட்டு.




பம்பரம்

நழுவ விட்டதும் ஆடுகிறாய்
நாட்டியம் எல்லாம் அறிவாயோ?
புழுதியில் வேகம் எழுதுகிறாய் -
புத்தகம் எத்தனை அச்சிட்டாய்?
பழுதில் லாமல் இசைக்கின்றாய் -
பண்ணில் பழக்கம் மிக உண்டோ?
அழுதே அடங்கித் தூங்குகிறாய்.
அலுப்போ உனக்கு, பம்பரமே!

— தம்பி




விடை தெரியுமா?



○ ரமணி தன் வீட்டிலிருந்து பிள்ளையார் கோயிலுக்கு நடந்து போய்த் திரும்பி வரச் சரியாக ஒரு மணி நேரமாகும். கோயிலுக்குப் போகும் போது சைக்கிளிலும் திரும்பி வரும்போது நடந்தும் வந்தானானால் நாற்பது நிமிஷங்கள் பிடிக்கும். சைக்கிளிலேயே போய்த் திரும்பினால் எத்தனை நிமிஷங்களாகும்?

○ சப்பாத்தி சாப்பிட்டிருக்கிறீர்களா? சீதா கோதுமை மாவில் சப்பாத்தி சுட்டால் ரொம்ப ருசியாக இருக்கும். அவள் வீட்டில் ஒரே சமயத்தில் இரண்டு சப்பாத்திகள் சுடும்படியானதொரு தோசைக் கல் இருந்தது. சப்பாத்தியை இரண்டு பக்கமும் சுட்டுப்போட வேண்டாமா? ஒரு பக்கம் சுட ஒரு நிமிஷமாகும் என்றால் மூன்று சப்பாத்திகளைச் சுட (மிகக் குறைவாக) எத்தனை நிமிஷங்களாகும்?



விளையாட்டு

நரியும் - சேவலும்

பெரிய மைதானத்தில் நாலைந்து பேர்களாகச் சேர்ந்து விளையாடுவதற்கு ஏற்றது இந்தச் சுவாரசியமான 'கேம்'. இருபது இருபத்தைந்து தப்படி விட்டம் கொண்டதொரு வட்டத்தை - காலால் மண்ணைத் தேய்ப்பதன் மூலம் - உருவாக்குங்கள். சக்கரத்தின் குறுக்குக் குச்சிகளைப் போன்ற ஆறு ஆரைகளை உருவாக்குங்கள். நடுவில் சிறு வட்டம் ஒன்றையும் உருவாக்குங்கள். இனி விளையாட ஆரம்பிக்கலாம். உங்களில் ஒருவர் நரியாகவும் மற்றவர்கள் சேவலாகவும் கருதப்பட வேண்டும். நரி சேவலைத் துரத்திப் பிடிக்க முயலும். பிடிபட்ட சேவல் நரியாகிவிட வேண்டும். பழைய நரி சேவலாகிவிடும். விளையாட்டின் விதிமுறைகள்: சேவல் வட்டப் பாதைகளிலும் ஆரக்கால் வழியாகவும் நரியின் பிடியில் சிக்காமல் நடமாடலாம். இந்த வழியை விட்டு விலக நேரும் சேவல் தானாகவே நரியாகிவிட வேண்டும். ஓர் ஆரக்காலிலிருந்து மற்றொரு ஆரக்காலுக்குத் தாவும் உரிமையும் சேவலுக்கு உண்டு. ஆனால் இப்படித் தாவுவதற்கு நரி இடம் கொடுக்காது. அதற்கு டிமிக்கி கொடுத்துவிட்டே தாவ வேணும். நடு மையத்தில் நிற்கும்போது சேவலுக்கு ஆபத்தில்லை. அப்போது நரியினால் அதை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் ஒரு சமயத்தில் அங்கு ஒரு சேவல் நிற்கத்தான் இந்தச் சலுகை. நடுவில் இரு சேவல் இருக்குமானால் முதலில் அங்கு வந்த சேவலை நரி கௌவிக் கொள்ளலாம். இரண்டுக்கு மேற்பட்ட சேவல்கள் நடு மையத்தில் இருந்தாலும், கடைசியாக மையத்துக்குள் வந்த சேவலைத் தவிர மற்றவைகளை எல்லாமே நரி பிடித்து இழுத்து 'அவுட்'டாக்கலாம். ஆனால் நரி நெருங்குமுன் மற்ற சேவல்களெல்லாம் ஆரக்கால் வழியாக ஓடிப்போய் விடுமே. நரியைக் களைப்படையச் செய்யச் சேவல்களுக்குத் திறமை இருக்க வேண்டும். இது ரொம்ப நல்ல விளையாட்டு.





பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பூர்வ கதை

சுமார் 980 ஆண்டுகளுக்கு முன்னால் தென்னாட்டில் வலிமை பெற்று வளர்ந்து வந்த சோழ சாம்ராஜ்யத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி அரசாண்டு வந்தார். அவர் உடல்நிலை திருப்திகரமாக இல்லை என்று நாடெங்கும் ஒரு வதந்தி பரவியது. சுந்தரசோழருக்குப் பிறகு தஞ்சாவூர் சிம்மாசனத்தில் யார் ஏறப் போகிறார்கள் என்ற பேச்சும் எழுந்தது. சுந்தர சோழரின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலர் அச்சமயம் காஞ்சி நகரில் இருந்தார். அவரிடமிருந்து தஞ்சாவூருக்குச் செய்தி கொண்டு போனான் வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் வாலிபன்.

பழைய வாணர் குலத்தைச் சேர்ந்த இந்த வீரன் வழியில் வீரநாராயண ஏரியை அடுத்திருந்த கடம்பூரில் செங்கண்ணர் சம்புவரையர் என்னும் பிரமுகரின் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கினான். ஆதித்த கரிகாலருக்கு விரோதமாக ஒரு பெரிய சதி நடைபெறுகிறது என்பதை அங்கே தெரிந்துகொண்டான். சோழ ராஜ்யத்தின் தனாதிகாரியும் தானிய பண்டாரத் தலைவருமாகிய பெரிய பழுவேட்டரையர் உள்பட பல பிரமுகர்கள் அச்சதியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் அறிந்தான். பழுவேட்டரையர் தமது முதிய பிராயத்தில் ஒரு இளம் பெண்ணை மணந்திருந்ததுடன் அவளைத் தான் போகுமிடமெல்லாம் மூடுபல்லக்கில் அழைத்துச் செல்லுவது வழக்கம். கடம்பூர் மாளிகைக்கும் மூடுபல்லக்கு வந்திருந்தது. அதில் பழுவூர் ராணி வந்ததாகவே அனைவரும் எண்ணியிருந்தார்கள். ஆனால் நள்ளிரவில் நடந்த சதிக் கூட்டத்தின் முடிவில் பழுவேட்டரையர் மூடுபல்லக்கின் இரகசியத்தை அம்பலப்படுத்தினார். பட்டுத் திரையை விலக்கியதும் உள்ளேயிருந்து இளவரசர் மதுராந்தகத் தேவர் வெளிப்பட்டு வந்தார். இவர் சுந்தர சோழரின் பெரிய தந்தையான சிவஞான கண்டராதித்தரின் புதல்வர். அடுத்த பட்டத்துக்கு உரியவர் மதுராந்தகத் தேவர்தான் என்று அங்கு வந்திருந்த சோழ நாட்டுப் பிரமுகர்கள் ஏகமனதாக முடிவு கட்டி ஜயகோஷம் செய்தார்கள்.

இதையெல்லாம் கடம்பூர் மாளிகையில் ஒரு மறைவான இடத்திலிருந்து வந்தியத் தேவன் கவனித்தது போலவே ஆழ்வார்க்கடியான் நம்பி என்னும் வீர வைஷ்ணவர் ஒருவரும் கவனித்தார். வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியாரும் கொள்ளிடக் கரையில் சந்தித்து ஒரே படகில் ஆற்றைக் கடந்தார்கள். ஒருவரிடம் ஒருவர் உளவு அறிய முயன்றார்கள். முடியவில்லை.

ஆழ்வார்க்கடியார் யோசனைப்படி வந்தியத் தேவன் தஞ்சை போகும் மார்க்கத்தில் பிரசித்தி பெற்ற குடந்தை ஜோதிடரிடம் சென்றான். அவருடைய வீட்டில் இரு உயர்குலப் பெண்களைச் சந்தித்தான். அவர்களில் ஒருத்தி சுந்தர சோழ சக்கரவர்த்தியின் அருமைப் புதல்வியான குந்தவை தேவி. இன்னொருத்தி ஈழத்துப் போரில் இறந்த கொடும்பாளூர்ச் சிறிய வேளானின் மகள். இந்த விவரம் வந்தியத்தேவனுக்கு அப்போது தெரியாது.

குடந்தை ஜோதிடரிடம் வந்தியத்தேவன் புதிதாக எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆழ்வார்க்கடியாருடைய இன்னொரு பெயர் திருமலையப்பன் என்பது மட்டும் தெரிந்தது. பின்னர் அவன் அரிசிலாற்றங்கரையோடு தஞ்சாவூரை நோக்கிச் சென்றபோது குடந்தை ஜோதிடரின் வீட்டில் அவன் பார்த்த இரு பெண்களும் இன்னும் சிலரும் நதிக் கரையில் கலங்கி நிற்பதையும் அவர்களுக்கு அருகில் பயங்கரமான ஒரு முதலை வாயைப் பிளந்து கொண்டிருப்பதையும் பார்த்தான். பாய்ந்து சென்று முதலையின் மீது தன் வேலைப் பாய்ச்சினான். அப்பெண்களின் கேலிச் சிரிப்பு அவனுடைய மனத்தில் குழப்பத்தை உண்டாக்கிற்று. பிறகு அவன் கொல்ல முயன்ற முதலை இறந்த பின் பதப்படுத்திப் பஞ்சு அடைத்திருந்த முதலை என்று தெரிந்து மிகவும் வெட்கினான். இதனால் ஏற்பட்ட கோபத்தைத் தான் ஏறி வந்த குதிரையின் மீது காட்டி அதை விரைந்து செலுத்தினான்.

இனி, மேலே கதையைப் படிக்கலாம்.

பதினெட்டாம் அத்தியாயம் • இடும்பன்காரி •

கொள்ளிடத்துப் பரிசில் துறையில் ஆழ்வார்க்கடியார் நம்பி என்னும் திருமலையப்பரை விட்டு விட்டு வந்து விட்டோம். அந்த வீர வைஷ்ணவரை இப்போது கொஞ்சம் கவனிக்கலாம்.

வந்தியத்தேவன் குதிரை ஏறிக் குடந்தை நகர் நோக்கிச் சென்றதும், திருமலையப்பர் அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டே தமக்குள் சொல்லிக் கொண்டார் :– ''இந்த வாலிபன் மிகப் பொல்லாதவனாயிருக்கிறான். நாம் தட்டியில் நுழைந்தால் இவன் கோலத்தில் நுழைகிறான். இவன் உண்மையில் யாருடைய ஆள், எதற்காக எங்கே போகிறான் என்பதை நம்மால் கண்டு பிடிக்க முடிய



வில்லை. கடம்பூர் மாளிகையில் நடந்த சதிக் கூட்டத்தில் இவன் கலந்து கொண்டானு என்றும் தெரியவில்லை. நல்ல வேளையாகக் குடந்தை ஜோசியரைப் பற்றி இவனிடம் சொல்லி வைத்தோம். நம்மால் அறிய முடியாததைக் குடந்தை ஜோசியராவது தெரிந்து கொள்ளுகிருரா, பார்க்கலாம்!.....''

''என்ன, சுவாமி! அரச மரத்தோடு பேசறீங்களா, உங்களுக்கு நீங்களே பேசிக்கிறீங்களா?'' என்ற குரலைக் கேட்டுத் திருமலையப்பர் திரும்பிப் பார்த்தார். கடம்பூரிலிருந்து வந்து வந்தியத்தேவனுக்குக் குதிரை பிடித்துக் கொண்டு வந்து கொடுத்த பணியாள் பக்கத்தில் நின்ருன்.

''அப்பனே? நீயா கேட்டாய்? நான் எனக்கு நானே பேசிக் கொள்ளவும் இல்லை; அரசமரத்தோடு பேசவும் இல்லை. இந்த மரத்தின் மேலே ஒரு வேதாளம் இருக்கிறது. அதனேடு சிறிது சல்லாபம் செய்தேன்!'' என்ருர் திருமலையப்பர்.

''ஓஹோ! அப்படிங்களா! அந்த வேதாளம் சைவமா? வைஷ்ணவமா?'' என்ருன் அந்த ஆள்.

''அதைத்தான் நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள்ளே நீ வந்து குறுக்கிட்டாய். வேதாளம் மறைந்து விட்டது!... போனல் போகட்டும்! உன் பெயர் என்ன, அப்பனே?''

''எதற்காகக் கேட்கிறீங்க, சுவாமி?''

''நடுக் கொள்ளிடத்தில் படகு கவிழாமல் காப்பாற்றினயே! அப்படிப் பட்ட புண்ணிய வானகிய உன்னை நான் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டாமா?''

''என்பெயர்...என் பெயர்.. இடும்பன்காரி, சுவாமி!'' என்று இழுத்தாற்போலச் சொன்னன்.

''ஓ! இடும்பன்காரியா? எப்போதோ கேட்ட ஞாபகமாயிருக்கிறதே!''



இடும்பன்காரி அப்போது ஒரு விசித்திரமான காரியம் செய்தான். தன்னுடைய விரித்த கைகள் இரண்டையும் ஒன்றின் மேல் ஒன்றைக் குப்புறுத்தி வைத்துக் கொண்டு, இரு ஓரத்துக் கட்டை விரல்களையும் ஆட்டினான். ஆட்டிக் கொண்டே திருமலையப்பரின் முகத்தைப் பார்த்தான்.

''அப்பனே! இது என்ன சமிக்ஞை? எனக்கு விளங்கவில்லையே?'' என்றார் திருமலையப்பர்.

அப்போது இடும்பன்காரியின் கரிய முகம் மேலும் சிறிது கறுத்தது. கண் புருவங்கள் நெரிந்தன.

''நானா? நான் ஒன்றும் சமிக்ஞை செய்யவில்லையே?'' என்றான்.

''செய்தாய், செய்தாய்! நான்தான் பார்த்தேனே? பரத நாட்டிய சாஸ்திரத்தில் திருமாலின் முதல் அவதாரத்துக்கு ஓர் அஸ்தம் பிடிப்பதுண்டு. அது மாதிரி செய்தாயே?''

''திருமாலின் முதல் அவதாரம் என்றால், அது என்ன? எனக்குத் தெரியவில்லை, சுவாமி!''

''விஷ்ணுவின் முதல் அவதாரம் தெரியாதா? மச்சாவதாரம்!''

''மீனைச் சொல்லுறீங்களா!''

''ஆமாம், அப்பனே, ஆமாம்!''

''நல்ல வேளை, சாமி! உங்கள் கண்ணே விசித்திரமான கண்ணாயிருக்கிறதே! வெறும் மரத்தின் மேலே வேதாளம் தெரிகிறது. என் வெறுங் கையிலே மச்சாவதாரம் தெரிகிறது! ஒருவேளை மீன் பேரிலே சாமியாருக்குக் கொஞ்சம் ஆசை அதிகமோ!''

''சேச்சே! அந்த மாதிரியெல்லாம் சொல்லாதே, அப்பனே! அதுபோனால் போகட்டும். நம்மோடு படகிலே ஒரு வீர சைவர் வந்தாரே, அவர் எந்தப் பக்கம் போனார் பார்த்தாயா!''

''பார்க்காமலென்ன? பார்த்தேன். நான் குதிரை வாங்கப் போன பக்கந்தான் அவரும் வந்தார். உங்களைப் பற்றித் திட்டிக் கொண்டே வந்தார்!''

''என்னவென்று என்னைத் திட்டினார்?''

''உங்களை மறுபடியும் அந்த வீர சைவர் பார்த்தால் உங்கள் முன் குடுமியைச் சிரைத்துத் தலையை மொட்டையடித்து....''

''ஓகோ! அந்த வேலைகூட அவருக்குத் தெரியுமோ?''

''உங்கள் திருமேனியில் உள்ள நாமத்தையெல்லாம் அழித்து விட்டுத் திருநீற்றைப் பூசி விடுவாராம்!''

''அப்படியானால் அவரைக் கட்டாயம் நான் பார்த்தேயாக வேண்டும். அவருக்கு எந்த ஊர் என்று உனக்குத் தெரியுமா!''

''அவருக்குப் புள்ளிருக்கும் வேளூர் என்று அவரே சொன்னாருங்க!''

''அந்த வீர சைவரைப் போய்ப் பார்த்து விட்டுத்தான் மறு காரியம், அப்பனே! நீ எங்கே போகப் போகிறாய்! ஒரு வேளை நீயும் அந்த வழி வரப் போகிறாயோ?''

''இல்லை, இல்லை. நான் எதற்காக அங்கே வருகிறேன்? திரும்பிக் கொள்ளிடத்தைத் தாண்டிக் கடம்பூருக்குத்தான் போகிறேன். இல்லாவிட்டால் எஜமானர் என் கண்ணைப் பிடுங்கிவிட மாட்டாரா?''

''அப்படியானால், உடனே திரும்பு அப்பனே! அதோ படகு புறப்படப் போகிறது!''

இடும்பன்காரி திரும்பிப் பார்த்த போது, ஆழ்வார்க்கடியார் கூறியது உண்மை என்று தெரிந்தது. படகு புறப்படும் தறுவாயில் இருந்தது.

''சரி, சாமியாரே! நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் படகுத் துறையை நோக்கி விரைந்து சென்றான் இடும்பன்காரி.

பாதி வழியில் ஒரு தடவை திரும்பிப் பார்த்தான். அதற்குள் ஆழ்வார்க்கடியார் ஒரு விந்தையான காரியம் செய்திருந்தார். மள மளவென்று அந்த அரச மரத்தின் மீது பாய்ந்து ஏறிக் கிளைகள் அடர்ந்திருக்கும் இடத்துக்குப் போய் விட்டார். ஆகையால் இடும்பன்காரியின் கண்ணோட்டத்தில் அவர் விழவில்லை.

இடும்பன்காரி நதியின் பரிசில் துறையை அடைந்தான். படகோட்டிகளில் ஒருவன், ''அக்கரைக்கு வருகிறாயா, அப்பா?'' என்று கேட்டான்.

''இல்லை! அடுத்த படகில் வரப் போகிறேன். நீ போ!'' என்றான் இடும்பன்காரி.

''அடே! இவ்வளவுதானா? நீ வருகிற வேகத்தைப் பார்த்துவிட்டு அல்லவா படகை நிறுத்தினேன்!'' என்று சொல்லி ஓடக்காரன் கோல் போட்டு ஓடத்தை நதியில் செலுத்தினான்.

இதற்குள் அரச மரத்தின் நடு மத்தி வரையில் ஏறி நன்றாக மறைந்து உட்கார்ந்து கொண்ட திருமலையப்பர், ''ஓகோ! நான் நினைத்தது சரியாகப் போயிற்று. இவன் படகில் ஏறவில்லை; திரும்பித்தான் வரப்போகிறான். வந்த பிறகு எந்தப் பக்கம் போகிறான் என்று பார்க்க வேண்டும். இவனுடைய கைகள் மச்சஹஸ்த முத்திரை காட்டி


யதை நான் நன்றாகப் பார்த்தேன். அதன் பொருள் என்ன? மீன்! மீன்! மீன் சின்னம் எதைக் குறிக்கிறது? ஆ! மீன் பாண்டியனுடைய கொடியில் பொறித்ததல்லவா? ஒரு வேளை, ஆஹாஹா!...... அப்படியும் இருக்குமா? பார்க்கலாம்! சிறிது பொறுமையுடனே இருந்து பார்க்கலாம். பொறுத்தவர் பூமி ஆள்வார்; பொங்கியவர் காடாள்வார்... ஆனால், இந்தக் காலத்தில் பூமி ஆள்வதைக் காட்டிலும் காடு ஆள்வதே மேலானது என்று தோன்றுகிறது. ஆனாலும் பொறுத்துப் பார்க்கலாம்!''.... இவ்விதம் அரசமரத்திலிருந்த அருவமான வேதாளத்திடம் திருமலையப்பர் சொல்லிக் கொண்டிருந்தார்.

விரைவில் அவர் எதிர்பார்த்தபடியே நடந்தது. படகு இடும்பன்காரியை ஏற்றிக் கொள்ளாமலே சென்றது. இடும்பன்காரி நதிக்கரையிலிருந்தபடி அரசமரத்தடியை உற்று உற்றுப் பார்த்தான். பிறகு நாலா திசைகளிலும் துளாவிப் பார்த்தான். ஆழ்வார்க்கடியார் எங்குமில்லையென்பதை நன்கு தெரிந்து கொண்டுதிரும்பி அதே அரசமரத்தடிக்கு வந்து சேர்ந்தான். இன்னும் ஒரு தடவை சுற்றுமுற்றும் நன்றாய்ப் பார்த்துவிட்டு அந்த மரத்தடியிலேயே உட்கார்ந்து கொண்டான். எதையோ அல்லது யாரையோ எதிர்பார்ப்பவன் போல் அவனுடைய கண்கள் நாலாபுறமும் சுழன்று நோக்கிக் கொண்டிருந்தன. ஆனால் மரத்தின் மேலே மட்டும் அவன் அண்ணாந்து பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் திருமலையப்பர் நன்றாகத் தம் திருமேனியை மறைத்துக்கொண்டிருந்தபடியால் மரத்தின் மேல் அவர் உட்கார்ந்திருப்பது இடும்பன்காரிக்குத் தெரிந்திராது.

சுமார் ஒரு நாழிகை நேரம் இவ்விதம் சென்றது. திருமலையப்பருக்குக் கால்கள் மரத்துப் போகத் தொடங்கின. இனி வெகுநேரம் மரத்தின் மேல் இருக்கமுடியாதென்று தோன்றியது. இடும்பனோ மரத்தடியிலிருந்து எழுந்திருக்கும் வழியாகத் தோன்றவில்லை. தப்பித்துப் போவது எப்படி? எவ்வளவு ஜாக்கிரதையாக மரத்தின் மறு பக்கத்தில் இறங்கினாலும் ஏதாவது சத்தம் கேளாமல் இராது! கேட்டால் இடும்பன்காரி உடனே பார்த்து விடுவான். அவனோ இடுப்பில் ஒரு கூரிய கொடுவாளைச் செருகிக் கொண்டிருந்தான். அதை இவர் பேரில் அவன் பிரயோகிக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

வேறு என்னதான் செய்வது? பேய் பிசாசைப் போல் பயங்கரமாகச் சத்தமிட்டுக் கொண்டு இடும்பனின் மேலேயே குதிக்கலாமா? குதித்தால் தன்னை வேதாளம் என்று நினைத்துக் கொண்டு அவன் பயத்தினால் மூர்ச்சை அடைந்து விழலாம் அல்லவா! அல்லது தப்பித்து ஓடப் பார்க்கலாம் அல்லவா! அச்சமயம் தானும் தப்பி ஓடிவிடலாம்!.... இவ்விதம் திருமலையப்பர் எண்ணிய சமயத்தில், அவருடைய பொறுமையின் சோதனை முடிவடையும் எனத் தோன்றியது.

ஓர் ஆள் தென்மேற்கிலிருந்து, அதாவது குடந்தைச் சாலை வழியாக, வந்து கொண்டிருந்தான். அவனுக்காகத்தான் இடும்பன்காரி இத்தனை நேரமாய்க் காத்திருக்கிறான் என்று திருமலையப்பரின் உள்ளுணர்ச்சி கூறியது. அவருடைய உள்ளுணர்ச்சி தவறாகக் கூறவில்லையென்பது விரைவிலேயே தெரியவந்தது.



புது ஆள் வந்ததைப் பார்த்ததும் அரச மரத்தடியில் உட்கார்ந்திருந்த இடும்பன் எழுந்து நின்றான்.

வந்தவன், முன்னால் இடும்பன்செய்த சமிக்ஞையைச் செய்தான். அதாவது ஒரு விரித்த புறங்கையின் மேல் இன்னொரு விரித்த கையை வைத்து, இரண்டு கட்டை விரல்களை ஆட்டி, மச்ச ஹஸ்தம் பிடித்துக் காட்டினான். அதைப் பார்த்த இடும்பனும் அதே மாதிரி செய்து காட்டினான்.

''உன் பெயர் என்ன?'' என்று வ. தவன் கேட்டான்.

''என் பெயர் இடும்பன்காரி. உங்கள் பெயர் ?''

''சோமன் சாம்பவன் !''

'' உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''நானும் உன்னைத் தேடிக் கொண்டு தான் வந்தேன்.''

'' நாம் எந்தத் திசையில் போக வேண்டும் ?''

''மேற்குத் திசையில்தான் !''

''எவ்விடத்துக்கு ?''

''பகைவனின் பள்ளிப் படைக்கு !''

''திருப்புறம்பயம் அருகில்....''

''இரைந்து பேசாதே ! யார் காதிலாவது விழப் போகிறது!'' என்று சொல்லிச் சோமன் சாம்பவன் நாலா பக்கமும் பார்த்தான்.

''இங்கே ஒருவரும் இல்லை. முன்னாலேயே நான் பார்த்து விட்டேன்.''

''பக்கத்தில் எங்கும் ஒளிந்திருக்கவும் இடமில்லையே ?''

''இடையவே கிடையாது!''

''அப்படியானால் புறப்படு. எனக்கு அவ்வளவு நன்றாக வழி தெரியாது. நீ முன்னால் போ ! நான் சற்றுப் பின்னால் வருகிறேன். அடிக்கடி நின்று நான் பின்னால் வருகிறேனா என்று பார்த்துக் கொண்டு போ !''

''ஆகட்டும். வழி நல்ல வழியல்ல. காடும் மேடும் முள்ளும் கல்லுமாயிருக்கும். ஜாக்கிரதையாகப் பார்த்து நடந்துவர வேண்டும்!''

''சரி, சரி ! நீ புறப்பட்டுப் போ! காட்டு வழியாயிருந்தாலும் யாராவது எதிர்ப்பட்டால் மறைந்து கொள்ள வேண்டும். தெரிந்ததா ?''


''தெரிந்தது, தெரிந்தது !''

இவர்கள் கங்க மன்னன் பிரிதிவீபதியின் பள்ளிப்படையைத்தான் சொல்லியிருக்க வேண்டும். அந்தப் பள்ளிப் படையைக் கட்டி நூறு வருஷம் ஆகிறது. ஆகையால் பாழடைந்து கிடக்கிறது. சுற்றிலும் காடு மண்டிக் கிடக்கிறது. கிராமமோ சற்றுத் தூரத்தில் இருக்கிறது. அங்கே எதற்காக இவர்கள் போகிறார்கள்? இந்த இரண்டு பேரும் மட்டும் பேச வேண்டிய விஷயமாயிருந்தால், இங்கேயே பேசிக் கொள்ளுவார்கள். செய்ய வேண்டிய காரியமாயிருந்தாலும் இங்கேயே செய்து விடுவார்கள். காட்டு வழியில் ஒரு காத தூரம் போக வேண்டியதில்லையே ? ஆகையால், அங்கே இன்னும் சிலர் வரப் போகிறார்கள் என்பது நிச்சயம். எதற்காக? பிரிதிவீபதியின் பள்ளிப் படையைப் 'பகைவனின் பள்ளிப்படை'யென்று இவர்களில் ஒருவன் சொல்லுவானேன்! பிரிதிவீபதி யாருக்குப் பகைவன்! ஆகா! நாம் நினைத்தது உண்மையாகும் போலிருக்கிறதே ! எதற்கும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இவர்கள் கொள்ளிடக் கரையோடு போகி

இடும்பன் காரி கொள்ளிடக் கரையோடு மேற்குத் திசையை நோக்கிப்போனான். அவனுக்குச் சற்றுப் பின்னால் சோமன் சாம்பவனும் தொடர்ந்து சென்றான்.

இருவரும் கண்ணுக்கு மறையும் வரையில் ஆழ்வார்க்கடியார் மரத்தின் மேலேயே இருந்தார். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தார்.

''ஆஹா! காலம் [பொல்லாத காலம்! என்ன வெல்லாமோ எதிர்பாராத காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. ஏதோ ஒரு பெரிய மர்மமான காரியத்தைத் தெரிந்து கொள்ளப் போகிறோம். தெரிந்து கொள்ளக் கடவுள் அருளால் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இனி நம்முடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது விஷயத்தை அறிவது. கடம்பூர் மாளிகையில் அரைகுறையாகத்தான் தெரிந்து கொள்ள முடிந்தது. இங்கே அப்படி ஏமாந்து போகக் கூடாது. திருப்புறம்பயம் பள்ளிப் படை யென்றால்,



னார்கள். நாம் மண்ணிக் கரையோடு போகலாம். மண்ணிக் கரையில் காடு அதிக அடர்த்தியாயிருந்தாலும் பாதகமில்லை. காடும் மேடும் முள்ளும் கல்லும் நமக்கு என்ன இலட்சியம்? அவைதான் நம்மைக் கண்டு பயப்பட வேண்டும்!....''

இவ்வாறு எண்ணிக் கொண்டும் வாயோடு முணுமுணுத்துக் கொண்டும் திருமலையப்பர் அரச மரத்திலிருந்து இறங்கிச் சற்றுத் தெற்கு நோக்கிப் போனார். மண்ணியாறு வந்தது. அதன் கரையோடு மேற்கு நோக்கி நடையைக் கட்டினார்.

ஜன சஞ்சாரமில்லாத அடர்ந்த காடுகளின் வழியாக ஆழ்வார்க்கடியார் புகுந்து சென்று சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் திருப்புறம்பயம் பள்ளிப் படைக் கோயிலை அடைந்தார்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

ரணகள அரண்யம்

பழந் தமிழ் நாட்டில் போர்க்களத்தில் உயிர் துறந்த மகா வீரர்களின் ஞாபகமாக வீரக் கல் நட்டுக் கோயில் எடுப்பது மரபு. வெறுங் கல் மட்டும் ஞாபகார்த்தமாக நாட்டியிருந்தால் 'நடு கற்கோயில்' என்று வழங்குவார்கள். அத்துடன் ஏதேனும் ஒரு தெய்வத்தின் சிலையையும் ஸ்தாபித்து ஆலயமாக எழுப்பியிருந்தால், அது **'பள்ளிப் படை'** என்று வழங்கப்படும்.

குடந்தை நகருக்கு அரைக்காதம் வட மேற்கில் மண்ணியாற்றுக்கு வடகரையில் திருப்புறம்பயம் என்னும் கிராமத்துக்கருகில் ஒரு பள்ளிப் படைக் கோயில் இருந்தது. இது அந்தப் பிரதேசத்தில் நடந்த ஒரு மாபெரும் போரில் உயிர்நீத்த கங்க மன்னன் பிரிதிவீபதியின் ஞாபகமாக எடுத்தது. உலக சரித்திரம் அறிந்தவர்கள் **வாடர்லூச் சண்டை, பானிபேத் சண்டை, பிளாசிச் சண்டை** போன்ற சில சண்டைகளின் மூலம் சரித்திரத்தின் போக்கே மாறியது என்பதை அறிவார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் திருப்புறம்பயம் சண்டை அத்தகைய முக்கியம் வாய்ந்தது. நமது கதை நடந்த காலத்துக்குச் சுமார் நூறு ஆண்டு காலத்துக்கு முன்னால் அச்சண்டை நடந்தது. அதன் வரலாறு தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.



கரிகால் வளவன், பெருநற்கிள்ளி, இளஞ்சேட் சென்னி, தொடித் தோட் செம்பியன் முதலிய பழைய சோழகுல மன்னர்கள் சீரும் சிறப்புமாகச் சோழ நாட்டை ஆண்டிருந்த காலத்துக்குப் பிறகு ஏறக்குறைய ஐந்நூறு, அறுநூறு வருஷ காலம் சோழர் குலத்தின் கீர்த்தியைநீடித்த

கிரகணம் பிடித்திருந்தது. தெற்கே பாண்டியர்களும், வடக்கே பல்லவர்களும் வலிமை மிக்கவர்களாகிச் சோழர்களை நெருக்கி வந்தார்கள். கடைசியாக, சோழகுலத்தார் பாண்டியர்களின் தொல்லையைப் பொறுக்க முடியாமல் அவர்களுடைய நெடுங்காலத் தலைநகரமான உறையூரை விட்டு நகர வேண்டி வந்தது. அப்படி நகர்ந்தவர்கள் குடந்தைக்கு அருகில் இருந்த பழையாறை என்னும் நகருக்கு வந்து சேர்ந்தார்கள். ஆயினும், உறையூர் தங்கள் தலைநகரம் என்னும் உரிமையை விட்டுவிடவில்லை. 'கோழி வேந்தர்' என்னும் பட்டத்தையும் விட்டுவிடவில்லை.

பழையாறைச் சோழ மன்னர்களில் விஜயாலய சோழர் என்பவர் இணையில்லா வீரப் புகழ் பெற்றவர். இவர் பற்பல யுத்தகளங்களில் முன்னணியில் நின்று போர் செய்து உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை அடைந்தவர்.

"எண்கொண்ட தொண்ணூற்றின் மேலுமிரு மூன்று
புண்கொண்ட வெற்றிப்புரவலன்...."

என்றும்,

"புண்ணுறு தன்திருமேனியிற் பூணுந்
தொண்ணூறும் ஆறுஞ் சுமந்தோனும்"

என்றெல்லாமும் பிற்காலப் புலவர்களால் பாடப் பெற்றவர்.

இவருடைய மகன் ஆதித்த சோழன் தந்தைக்கு இணையான பெரு வீரனாக விளங்கினான். இவனும் பல போர்களில் கலந்து கொண்டு புகழ்பெற்றான்.

விஜயாலய சோழர் முதுமைப் பிராயத்தை அடைந்து மகனுக்குப் பட்டங் கட்டிவிட்டு ஓய்ந்திருந்தார். அச்சமயத்தில் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் பகைமை முற்றி அடிக்கடி சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்தக் காலத்துப் பாண்டிய மன்னனுக்கு வரகுணவர்மன் என்று பெயர்; பல்லவ அரசனுக்கு அபராஜித வர்மன் என்று பெயர். இந்த இரண்டு பேரரசர்களுக்குள் நடந்த சண்டைகள் பெரும்பாலும் சோழநாட்டில் நடைபெற்றன. யானையும் யானையும் மோதிச் சண்டையிடும்போது நடுவில் அகப்பட்டுக் கொள்ளும் சேவல் கோழியைப் போல் சோழ நாடு அவதிப்பட்டது. சோழ நாட்டு மக்கள் துன்புற்றார்கள். எனினும், இப்போர்களை விஜயாலய சோழர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஒவ்வொரு போரிலும் ஏதாவது ஒரு கட்சியில் தம்முடைய சிறிய படையுடன் போய்க் கலந்து கொண்டார். வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்தாலும் சோழ நாட்டில் போர்க் குணம் மிகுந்து வந்தது.

காவேரி நதியிலிருந்து பல கிளை நதிகள் பிரிந்து சோழ நாட்டை வளப்படுத்துவதை யாவரும் அறிவார்கள். அக்கிளை நதிகள் யாவும் காவிரிக்குத் தெற்கே பிரிகின்றன. கொள்ளிடத்திலிருந்து பிரிந்து காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் பாயும் நதி ஒன்றே ஒன்றுதான். அதற்கு மண்ணியாறு என்று பெயர்.

இந்த மண்ணியாற்றின் வடகரையில், திருப்புறம்பயம் கிராமத்துக்கு அருகில், பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இறுதியான பலப் பரீட்சை நடந்தது. இருதரப்பிலும் படைபலம் ஏறக்குறைய சமமாக இருந்தது. பல்லவ அபராஜிதவர்மனுக்குத் துணையாகக் கங்க நாட்டுப் பிரிதிவிபதி வந்திருந்தான். ஆதித்த சோழனும் அபராஜிதவர்மனுடைய கட்சியில் சேர்ந்திருந்தான்.

பாண்டிய சைன்யத்துடனும் பல்லவ சைன்யத்துடனும் ஒப்பிட்டால் சோழ சைன்யம் மிகச் சிறியதாகவே இருந்தது. எனினும், இம்முறை பாண்டியன் வெற்றி பெற்றால், சோழ வம்சம் அடியோடு நாசமாக நேரும் என்று ஆதித்தன் அறிந்திருந்தான். ஆகையால் பெரிய சமுத்திரத்தில் கலக்கும் காவேரி நதியைப் போல் பல்லவரின் மகா சைன்யத்தில் தன்னுடைய சிறு படையையும் சேர்த்திருந்தான்.

காத தூரத்துக்குக் காத தூரம் ரணகளம் பரவியிருந்தது. ரத, கஜ, துரக, பதாதிகள் என்னும் நாலு வகைப் படைகளும் போரில் ஈடுபட்டிருந்தன. மலையோடு மலை முட்டுவது போல் யானைகள் ஒன்றையொன்று தாக்கிய போது நாலா திசைகளும் அதிர்ந்தன. புயலோடு புயல் மோதுவது போல் குதிரைகள் ஒன்றின் மீது ஒன்று பாய்ந்த போது குதிரை வீரர்களின் கையிலிருந்த வேல்கள் மின்வெட்டுகளைப் போல் பிரகாசித்தன. ரதத்தோடு ரதம் மோதிச் சுக்குநூறாகித் திசையெல்லாம் பறந்தன. காலாள் வீரர்களின் வாள்களோடு வாள்களும், வேல்களோடு வேல்களும் உராய்ந்த போது எழுந்த ஜங்கார ஒலிகளினால் திக்குத் திகாந்தங்கள் எல்லாம் நடுநடுங்கின.

மூன்று நாள் இடைவிடாமல் சண்டை நடந்த பிறகு, ரணகளம்

முழுதும் ரத்தக் கடலாகக் காட்சியளித்தது. அந்தக் கடலில் செத்த யானைகளும் குதிரைகளும் திட்டுத் திட்டாகக் கிடந்தன. உடைந்த ரதங்களின் பகுதிகள் கடலில் கவிழ்ந்த கப்பலின் பலகைகளைப் போல் மிதந்தன. இருதரப்பிலும் ஆயிரம் பதினாயிரம் வீரர்கள் உயிரிழந்து கிடந்தார்கள்.

மூன்று நாள் இவ்விதம் கோர யுத்தம் நடந்த பிறகு பல்லவர் சைன்யத்தில் ஒரு பகுதிதான் மிஞ்சியிருந்தது. மிஞ்சியவர்களும் மிகக் களைத்திருந்தார்கள். பாண்டிய நாட்டு வீர மறவர்களோ, களைப்பையே அறியாத வரம் வாங்கி வந்தவர்களைப் போல், மேலும் மேலும் வந்து தாக்கினார்கள். அபராஜிதவர்மனுடைய கூடாரத்தில் மந்திராலோசனை நடந்தது. அபராஜிதன், பிரிதிவிபதி, ஆதித்தன் ஆகிய மூன்று மன்னர்களுடன் படைத் தலைவர்களும் கலந்து ஆலோசித்தார்கள். இனி எதிர்த்து நிற்க முடியாது என்றும், பின்வாங்கிக் கொள்ளிடத்தின் வடகரைக்குச் சென்று விடுவதே உசிதம் என்றும் முடிவு செய்தார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் போர்க்களத்தில் ஓர் அதிசயம் நடந்தது. முதுமையினால் தளர்ந்தவனும், உடம்பில் தொண்ணூற்றாறு காய வடுக்கள் உள்ளவனும், கால்களில் பட்ட கொடிய காயத்தினால் எழுந்து நிற்கும் சக்தியை இழந்தவனுமான விஜயாலய சோழன் எப்படியோ யுத்தரங்கத்துக்கு வந்து விட்டான். பல்லவ சைன்யம் பின் வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடக்கே போய்விட்டால் சோழ நாடு மறுபடியும் நெடுங்காலம் தலையெடுக்க முடியாது என்பதை உணர்ந்திருந்த அந்தக் கிழச் சிங்கத்தின் கர்ஜனை பல்லவர் கட்சியில் எஞ்சியிருந்த வீரர்களுக்குப் புத்துயிர் அளித்தது.

''ஒரு யானை ! எனக்கு ஒரு யானை கொடுங்கள்!'' என்றான்.

''நமது யானைப் படை முழுதும் அதமாகிவிட்டது; ஒன்றுகூடத் தப்பவில்லை'' என்றார்கள்.

''ஒரு குதிரை! ஒரு குதிரையாவது கொண்டு வாருங்கள் !'' என்றான்.

''உயிருள்ள குதிரை ஒன்றுகூட மிஞ்சவில்லை'' என்று சொன்னார்கள்.

''சோழ நாட்டுச் சுத்த வீரர்கள் இருவரேனும் மிஞ்சி உயிரோடிருக்கிறார்களா? இருந்தால் வாருங்கள்!'' என்று விஜயாலயன் அலறினான்.

இருவருக்குப் பதிலாக இருநூறு பேர் முன்னால் வந்தார்கள்.

''இரண்டு பேர், — தோளில் வலிவும் நெஞ்சில் உரமும் உள்ள இரண்டு பேர், — என்னைத் தோள் கொடுத்துத் தூக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்கள் இரண்டு இரண்டு பேராகப் பின்னால் வந்து கொண்டிருங்கள். என்னைச் சுமக்கும் இருவர் விழுந்தால், பின்னால் வரும் இருவர் என்னைத் தூக்கிக் கொள்ளுங்கள்!'' என்றான் அந்தவீராதிவீரன்.

அப்படியே இரண்டு பீமசேனர்கள் முன்னால் வந்து விஜயாலயனைத் தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

''போங்கள் ! போர் முனைக்குப் போங்கள் !'' என்று கர்ஜித்தான்.

போர்க்களத்தில் ஓரிடத்தில் இன்னமும் சண்டை நடந்து கொண்டிருந்தது. தெற்கத்தி மறவர்கள் கீழை நாட்டாரைத் தாக்கிப் பின்வாங்கச் செய்து கொண்டே வந்தார்கள்.

இருவருடைய தோள்களில் அமர்ந்த விஜயாலயன் அந்தப் போர் முனைக்குப் போனான். இரண்டு கைகளிலும் இரண்டு நீண்ட வாள்களை வைத்துக் கொண்டு, திருமாலின் சக்ராயுதத்தைப் போல் சுழற்றிக் கொண்டு, எதிரிகளிடையே புகுந்தான். அவனைத் தடுக்க யாராலும் முடியவில்லை. அவன் புகுந்து சென்ற வழியெல்லாம் இருபுறமும் பகைவர்களின் உடல்கள் குவிந்து கொண்டேயிருந்தன.

ஆம்; இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காகப் பின்வாங்கிய வீரர்கள் பலரும் முன்னால் வந்தார்கள். விஜயாலயனுடைய அமானுஷ்ய வீரத்தைக் கண்டு முதலில் சிறிது திகைத்து நின்றார்கள். பிறகு, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொண்டு தாங்களும் போர் முனையில் புகுந்தார்கள்.

அவ்வளவுதான்; தேவி ஜயலக்ஷ்மியின் கருணை கடாட்சம் இந்தப் பக்கம் திரும்பி விட்டது !

பல்லவர் படைத் தலைவர்கள் பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடகரை போகும் யோசனையைக் கைவிட்டார்கள்.

மூன்று வேந்தர்களும் தத்தமக்குரிய மூலபல வீரர்கள் புடைசூழப் போர் முனையில் புகுந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் பாண்டிய வீரர்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். பிறகு அவர்கள் பாண்டிய நாட்டின் எல்லைக்குச் சென்றுதான் நின்றார்கள்.

கங்கமன்னன் பிரிதிவீபதி அன்றையப் போரில் செயற்கரும் செயல்கள் பல புரிந்த பிறகு தன் புகழுடம்பை அப்போர்க்களத்தில் நிலைநாட்டிவிட்டு வீர சொர்க்கம் சென்றான்.

அத்தகைய வீரனுடைய ஞாபகார்த்தமாக அப்போர்க்களத்தில் வீரக்கல் நாட்டினார்கள். பிறகு பள்ளிப்படைக் கோயிலும் எடுத்தார்கள்.

அத்தகைய கொடூரமான பயங்கர யுத்தம் நடந்த ரண களம் சில காலம் புல் பூண்டுகள் முளையாமல் கிடந்தது. அந்தப் பக்கம் மக்கள் போவதேயில்லை. சிறிது காலத்துக்குப் பிறகு அங்கே காடு மண்ட ஆரம்பித்தது. பள்ளிப்படைக் கோயிலைச் சுற்றிக் காடு அடர்ந்தது. புதர்களில் நரிகள் குடிபுகுந்தன. இருண்ட மரக் கிளைகளில் ஆந்தைகளும் கோட்டான்களும் வாசம் செய்தன. நாளடைவில் அப்பள்ளிப் படைக் கோயிலுக்கு யாரும்போவதை நிறுத்தி விட்டார்கள். எனவே, கோயிலும் நாளுக்கு நாள் தகர்ந்து போய் வந்தது. நமது கதை நடக்கும் காலத்தில் பாழடைந்து கிடந்தது.



இத்தகைய பாழடைந்த பள்ளிப் படைக் கோயிலுக்குஇருட்டுகிற நேரத்தில் ஆழ்வார்க்கடியான் வந்து சேர்ந்தான். அக்கோயிலின் மேல் மண்டப விளிம்பில் அமைத்த காவல் பூத கணங்கள் அவனைப் பயமுறுத்தப் பார்த்தன. ஆனால் அந்த வீர வைஷ்ணவ சிகாமணியா பயப்படுகிறவன்? பள்ளிப் படைக் கோயில் மண்டபத்தின் மீது தாவி யேறினான். மண்டபத்தின் மீது கவிந்திருந்த மரக் கிளையின் மறைவில் உட்கார்ந்து கொண்டான். நாலாபுறமும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் அடர்த்தியான இருளைக் கிழித்துக் கொண்டு பார்க்கும் சக்தியைப் பெற்றிருந்தன. அவனுடைய செவிகளும் அவ்வாறே மிக அற்பமான ஓசையையும் கேட்கக் கூடிய கூர்மை பெற்றிருந்தன.

இருட்டி ஒரு நாழிகை, இரண்டு நாழிகை, மூன்று நாழிகையும் ஆயிற்று. சுற்றிலும் சூழ்ந்திருந்த அந்தகாரம் அவனை அடியோடு அமுக்கி மூச்சுத் திணறச் செய்தது. அவ்வப்போது காட்டு மரங்களிடையே சலசல வென்று ஏதோ சத்தம் கேட்டது. அதோ ஒரு மர நாய் மரத்தின் மேல் ஏறுகிறது. அதோ ஓர் ஆந்தை உறுமுகிறது! இந்தப் பக்கம் ஒரு கோட்டான் கூவுகிறது! மரநாய்க்குப் பயந்து ஒரு பறவை சடசட வென்று சிறகை அடித்துக் கொண்டு மேல் கிளைக்குப் பாய்கிறது. அதோ, நரிகள் ஊளையிடத் தொடங்கி விட்டன.

தலைக்கு மேலே ஏதோ சத்தம் கேட்டது. அண்ணாந்து பார்த்தான். அணிலோ, ஓணானோ, அல்லது அத்தகைய வேறொரு சிறிய பிராணியோ மரக் கிளைகளின் மீது தாவி ஏறிற்று.

மரக் கிளைகளின் இடுக்குகளின் வழியாக வானத்தில் ஒரு சிறு பகுதி தெரிந்தது. விண் மீன்கள் 'முணுக்' 'முணுக்' என்று மின்னிக் கொண்டு கீழே எட்டிப் பார்த்தன. அந்தத் தனிமை மிகுந்த கனத்த காரத்தினிடையே வானத்து நட்சத்திரங்கள் அவனுடன் நட்புரிமை கொண்டாடுவது போல் தோன்றின. எனவே, ஆழ்வார்க்கடியாராகிய திருமலையப்பர் மரக் கிளைகளின் வழியாக எட்டிப் பார்த்த நட்சத்திரங்களைப் பார்த்து மெல்லிய குரலில் பேசினார்: ஓ! நட்சத்திரங்களே! உங்களை இன்றைக்குப் பார்த்தால் பூவுலக மக்களின் அறிவீனத்தைப் பார்த்துக் கேலி செய்து கண் சிமிட்டிச் சிரிப்பவர்களைப் போலத் தோன்றுகிறது. சிரிப்பதற்கு உங்களுக்கு வேண்டிய காரணம் உண்டு. நூறு வருஷத்துக்கு முன்னால் இதே இடத்தில் நடந்த பெரும் போரையும், போர் நடந்தபிறகு இங்கே வெகு நாள் வரை இரத்த வெள்ளம் பெருகிக் கிடந்ததையும் பார்த்திருக்கிறீர்கள். மனிதர்கள் எதற்காக இப்படி ஒருவரையொருவர் பகைக்க வேண்டும் என்று அதிசயித்திருக்கிறீர்கள். எதற்காக இப்படி மனித இரத்தத்தைச் சிந்தி வெள்ளமாக ஓடச் செய்ய வேண்டும் என்று வியக்கிறீர்கள்! இதற்குப் பெயர் வீரமாம்!

ஒரு மனிதன் இறந்து நூறு வருஷம் ஆகியும் அவனிடம் பகைமை பாராட்டுகிறார்கள்! இந்தப் பள்ளிப்படை பகைவனுடைய பள்ளிப் படையாம்! பகைவன் பள்ளிப்படைக்கு அருகில்

கூடி யோசிக்கப் போகிறார்களாம்! செத்துப் போனவர்களின் பெயரால் உயிரோடு இருப்பவர்களை இம்சிப்பதற்கு! வானத்து விண்மீன்களே! நீங்கள் ஏன் சிரிக்கமாட்டீர்கள்? சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்!

கடவுளே! இங்கு வந்தது வீண் தானா? இன்றிரவெல்லாம் இப்படியே கழியப் போகிறதா? எதிர்பார்த்த ஆட்கள் இங்கே வரப் போவதில்லையா? என் காதில் விழுந்தது தவறா? நான் சரியாகக் கவனிக்கவில்லையா? அல்லது அந்த மச்சஹஸ்த சமிக்ஞையாளர்கள் தங்கள் யோசனையை மாற்றிக் கொண்டு வேறிடத்துக்குப் போய் விட்டார்களா! — என்ன ஏமாற்றம்? என்ன ஏமாற்றம்? இன்றைக்கு மட்டும் நான் ஏமாந்து போனால் என்னை நான் ஒரு நாளும் மன்னித்துக் கொள்ள முடியாது .... ஆ அதோ சிறிது வெளிச்சம் தெரிகிறது! அது என்ன? வெளிச்சம் மறைகிறது; மறுபடி தெரிகிறது. சந்தேகமில்லை. அதோ, சுளுந்து கொளுத்திப் பிடித்துக் கொண்டு யாரோ ஒருவன் வருகிறான்! இல்லை; இரண்டு பேர் வருகிறார்கள். காத்திருந்தது வீண் போகவில்லை!

வந்தவர்கள் இருவரும் பள்ளிப் படையைத் தாண்டிக் கொண்டு சிறிது அப்பால் போனார்கள். அடர்ந்த காட்டுக்கு மத்தியில் சிறிது இடைவெளி இருந்த இடத்தில் நின்றார்கள். ஒருவன் உட்கார்ந்து கொண்டான். கையில் சுளுந்து வைத்திருந்தவன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். யாருடைய வரவையோ அவன் எதிர்பார்த்தான் என்பதில் சந்தேகமில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் நல்ல தைரியசாலிகளாயிருக்க வேண்டும். இதற்குமுன் இந்த இடத்துக்கு வந்தவர்களாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த இருளில், அடர்ந்த காட்டில், வழிகண்டு பிடித்துக் கொண்டு வர முடியுமா?

முதலில் வந்தவர்களும் பின்னால் வந்தவர்களும் ஏதோ பேசிக் கொண்டார்கள். ஆனால் ஆழ்வார்க்கடியான் காதில் அது ஒன்றும் விழவில்லை. அடாடா! இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தும் பிரயோஜனம் ஒன்றும் இராது போலிருக்கிறதே! ஆட்களின் அடையாளம்கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லையே?

பிறகு இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். முன்னால் வந்தவர்களும் கடைசியில் வந்தவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். கடைசியாக வந்தவர்களில் ஒருவன் கையில் ஒரு பை கொண்டு வந்திருந்தான். அதை அவன் அவிழ்த்து அதனுள் இருந்தவற்றைக் கொட்டினான். சுளுந்து வெளிச்சத்தில் தங்க நாணயங்கள் பளபள வென்று ஒளிர்ந்தன.

கொட்டிய மனிதன் பைத்தியம் பிடித்தவனைப்போல் சிரித்து, "நண்பர்களே! சோழ நாட்டுப் பொக்கிஷத்தைக் கொண்டே சோழ ராஜ்யத்துக்கு உலை வைக்கப் போகிறோம்! இது பெரிய வேடிக்கை அல்லவா?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் கலகல வென்று சிரித்தான்.

"ரவிதாஸரே! இரைச்சல் போட வேண்டாம். கொஞ்சம் மெதுவாகப் பேசலாம்!" என்றான் ஒருவன்.

"ஆகா! இங்கு எப்படிப் பேசினால் என்ன? கேட்டால், நரிகளும், மர நாய்களும், கூகைகளும், கோட்டான்களுந்தான் நம் பேச்சைக் கேட்கும்! நல்ல வேளையாக அவை யாரிடமும் போய்ச் சொல்லாது!" என்றான் ரவிதாஸன் என்று அழைக்கப்பட்டவன்.

"இருந்தாலும் கொஞ்சம் மெதுவாகப் பேசுவதே நல்லதல்லவா?"

பிறகு அவர்கள் மெள்ளப் பேசத் தொடங்கினார்கள். ஆழ்வார்க்கடியானுக்கு அவர்களுடைய பேச்சைக் கேட்டறியாமல் மண்டபத்தின் பேரில் உட்கார்ந்திருப்பது வீண் என்று தோன்றியது. மண்டபத்திலிருந்து இறங்கிக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு அருகில் நின்று ஒட்டுக் கேட்டே தீர வேண்டும். அதனால் விளையும் அபாயத்தையும் சமாளித்துக் கொள்ள வேண்டும். — இவ்விதம் எண்ணி ஆழ்வார்க்கடியான் மண்டபத்திலிருந்து இறங்க முயன்ற போது, மரக் கிளைகளில் அவன் உடம்பு உராய்ந்ததால் சலசலப்புச் சத்தம் உண்டாயிற்று.

பேசிக் கொண்டிருந்த மனிதர்களில் இருவர் சட்டென்று குதித்து எழுந்து, "யார் அங்கே?" என்று கர்ஜித்தார்கள்.

ஆழ்வார்க்கடியானுடைய இதயத் துடிப்பு சிறிது நேரம் நின்று போயிற்று. அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஓடினாலும் காட்டில் சலசலப்புச் சத்தம் கேட்கத்தானே செய்யும்! அவர்கள் வந்து தன்னைப் பிடித்து விடலாம் அல்லவா?

அச்சமயத்தில், கோட்டான் ஒன்று சப்பட்டையை விரித்து உயர்த்தி அடித்துக் கொண்டதுடன் "ஊம், ஊம்" என்று உறுமியது. **(தொடரும்)**


காஸெல்ஸ்

பஜாஜ்
எலெக்டிரிகல்ஸ்
லிமிடெட்

பொருத்தமான சீதோஷ்ண நிலையை உருவாக்கும்

...உழைப்பதற்கும் சரி- ஓய்வெடுப்பதற்கும் சரி-
ஒவ்வொரு காஸல்ஸ் விசிறியும்
மிக மிருதுவாக இயங்குகின்றது. விசிறியின் பட்டைகள்
காற்றை வீசித்தள்ளும் சப்தம்கூட ரகசியம் பேசுவதுபோல
நிசப்தமாக விளங்குகிறது.
மிகச் சிக்கனமாக இயங்கி ஒவ்வொரு யூனிட் மின் சக்தி
உபயோகத்திலும் அதிகமான அளவு காற்று வீசச்செய்கிறது!
மிகத் திறமையுடன் வேலைசெய்து ஆயுட்காலத்திற்கும்
உழைக்கின்றது.
இன்றே ஒரு காஸல்ஸ் விசிறியில் முதலீடு செய்து ஆண்டு
முழுவதிலும் சௌகரியமான சீதோஷ்ண நிலையில் வாழ்க.

**காஸல்ஸ் விசிறி ஒவ்வொருவர் தேவைக்கும்
உகந்த வகையில் கிடைக்கின்றது.**



heros'-BE-25 TAM

மகாபாரதம்

ராஜாஜி

தேவர்கள் நஹுஷனுடைய கோபத்துக்குப் பயந்து பிருஹஸ்பதியிடம் சமாதானம் சொல்லி இந்திராணியை எப்படியாவது நஹுஷனிடம் சேர்த்து விடுவது என்று நிச்சயித்தார்கள். எல்லாரும் சேர்ந்து அவளிடம் போனார்கள். போய் நஹுஷனுடைய பிரதாபத்தைச் சொல்லி இந்திராணியைத் தேவராஜனுடைய விருப்பத்துக்கு இசைய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பதிவிரதையான சசிதேவி நடுங்கினாள்.

''ஐயோ! என்னால் முடியாது. உம்மைச் சரண் அடைகிறேன்! பிராமணரே! என்னைக் காப்பாற்றும்!'' என்று பிரஹஸ்பதியிடம் அலறினாள்.

பிருஹஸ்பதி அவளைத் தேற்றி, ''சரணம் அடைந்தவர்களைச் சத்துருவிடம் காட்டிக் கொடுக்கிறவன் நசித்துப் போவான். பூமியில் அவன் நட்ட விதையும் கூட முளைக்காமல் நசித்துப் போகும். உன்னை நான் கைவிட மாட்டேன். நஹுஷனுக்கு விநாச காலம் நெருங்கி விட்டது. நீ பயப்படாதே. கால விசேஷத்தால் உண்டான சங்கடமானது, கால விளம்பத்தால் தீர்த்துக் கொள்ளப் படும்'' என்று பொருள் செறிந்த சொல்லைச் சொல்லிக் கஷ்டத்தினின்று தப்புவதற்கு வழியைக் குறித்தார். மகா புத்திசாலியான சசிதேவியும் அதைத் தெரிந்து கொண்டு தைரியமடைந்து நஹுஷனிடம் போனாள்.

சசிதேவியைக் கண்டதும் கர்வத்தினாலும் காமத்தினாலும் மதியிழந்து விட்ட நஹுஷன் இந்திராணி தன்னிடம் வந்துவிட்டாள் என்ற தாங்காத களிப்பு அடைந்து, ''ஹா! அழகியே! மூன்று லோகங்களுக்கும் நான் அதிபதி. நீ பாபத்துக்குப் பயப்பட வேண்டாம். என்னைப் பதியாக அடைவாயாக!'' என்றான்.

துஷ்டனுடைய சொல்லைக் கேட்டுப் பதிவிரதையான இந்திராணி மறுபடியும் நடுங்கினாள். பிறகு மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு, ''தேவராஜனே! நான் உம்மை அடைய வேண்டியவளே. ஆயினும் ஒரு விண்ணப்பம். இந்திரன் இருக்கிறானா? இல்லை, மாண்டானா? இருந்தால் அவன் இருப்பிடம் எங்கே? இதை நான் விசாரித்துத் தேடிப் பார்த்தும் அவன் அகப்படாமற் போனால் பிறகு என்மேல் தோஷம் இருக்காது. உம்மைச் சேருவேன்'' என்றாள்.

நஹுஷன் மகிழ்ச்சியடைந்தான். ''நீ சொல்வது சரியே, தேடிவிட்டு அவசியம் வந்துவிடு. வாக்கு தத்தத்தைத் தவறாதே'' என்றான்.

இவ்வாறு ஒப்புக் கொண்டு சசிதேவியைப் பிருகஸ்பதியின் வீட்டுக்கு அனுப்பினான்.

தேவர்கள் மகா விஷ்ணுவிடம் சென்று நஹுஷனைப் பற்றிச் சொல்லி, ''நாதனே! விருத்திராசுரனை சம்ஹரித்த வீரியம் உம்முடையது. ஆனால், இந்திரன் பிரம்மஹத்தி தோஷம் அடைந்து பீடிக்கப்பட்டு உலகத்தாரின் அபவாதத்துக்குப் பயந்து, மறைந்து கிடக்கிறான். அவனுக்கு விமோசனம் சொல்லும்'' என்று பகவானை வேண்டினார்கள்.

''என்னை ஆராதிக்கட்டும். அவன் பரிசுத்தனாவான். துஷ்டபுத்தியடைந்த நஹுஷன் நாசமடைவான்'' என்றான் நாராயணன்.

இந்திராணி கற்புக் கடவுளை வேண்டிக் கொண்டு அந்தத் தேவதையின் அருளால் இந்திரனுடைய இருப்பிடத்தை அடைந்தான். மானஸஸரோவரத்தில் ஒரு தாமரைக் கொடியின் தண்டினுக்குள் ஒரு நூலில் தன் தேகத்தை அணு மாத்திரமாகச் செய்து கொண்டு வாசம் செய்து கொண்டிருந்தான். எப்போது பாவம் தீர்ந்து நல்ல நாள் வரும் என்று தவம் செய்து கொண்டு காத்திருந்த தன் பதியின் நிலைமையைப் பார்த்த சசிதேவி, துக்கம் பொறுக்க முடியாமல் அழு



தாள். தனக்கு உண்டான கஷ்டங்களைத் தெரியப்படுத்தினாள்.


இந்திரன் அவளுக்குத் தைரியம் சொல்லி, ''பாபம் செய்யத் துணிந்த நஹுஷனுடைய காலம் வெகுவாக நெருங்கி விட்டது. நீ ஏகாந்தமாக நஹுஷனிடம் சென்று அவனுடைய விருப்பத்துக்கு இணங்கினதாகவே அவனிடம் சொல். ரிஷிகள் தூக்கிய பல்லக்கில் அவனை உன்னுடைய இருப்பிடத்துக்கு வரச் சொல்லு. நஹுஷன் அழிவான்'' என்று சொல்லி அனுப்பினான்.

அவளும் இந்திரன் சொன்னவாறு நஹுஷனிடம் சொன்னாள்.

சொன்னபடி தவறாமல் வந்துவிட்டாள் என்று நஹுஷன் மிக மகிழ்ந்து ''ஹே ! கல்யாணி! நீ என்ன விரும்புகின்றாயோ, அதைச் செய்ய நான் காத்திருக்கிறேன். சத்தியப் பிரதிக்ஞை தவறாமல் நீ வந்திருக்கிறாய்'' என்றான் மூடன்.

''ஆம், வந்து விட்டேன். நீரே எனக்குப் பதியாகப் போகிறீர். ஜகத்துக்கு நீர் அதிபதியல்லவா? எனக்குப் பிரியமான ஒரு காரியம் செய்ய வேண்டும். மகாவிஷ்ணுவுக்கும் ருத்திரனுக்கும் தேவாசுரர்களுக்குமில்லாத ஒரு வாகனத்தை அமைத்துக் கொண்டு நீர் கம்பீரமாக என் இருப்பிடம் வர வேண்டும். பிரபுவே ! சப்த ரிஷிகள் உம்மைப் பல்லக்கில் தூக்கி வர வேண்டும் ; நான் எதிர் கொண்டு அழைத்துக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

''கற்பனா சக்தியில் சிறந்த அழகியே, நல்ல யோசனை சொன்னாய். நீ விரும்பும் வாகனம் மிகவும் அபூர்வமான வாகனமாகும். எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. யாரைப் பார்க்கிறேனோ அவனுடைய தேஜஸ் என்னை வந்து சேரும் என்கிற வரத்தை அடைந்திருக்கும் என்னை மகரிஷிகள் தூக்கிச் செல்வது நன்றாகப் பொருந்தும். நீ சொன்னவாறே செய்கிறேன்'' என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு மதோன்மத்தனாக நஹுஷன் மகரிஷிகளை அழைத்துத் தன் பல்லக்கைச் சுமக்கச் சொன்னான். இந்தப் பாபச் செயல்களைக்



கண்டு மூன்று உலகங்களும் பயந்து நடுங்கின.

பல்லக்கில் ஏறிச் செல்லச் செல்லப் பாபத்தின் வேகம் அதிகரித்தது. சசி தேவியின் அழகிய தோற்றத்தை மனத்தில் சிந்தனை செய்து கொண்டு அவளைச் சீக்கிரம் அடைய வேண்டும் என்று நஹுஷன் ஆத்திரப்பட்டான். பல்லக்கைத் தூக்கிய முனிவர்களை வேகமாக நடக்கும்படி அடிக்கடி சொன்னான். தூக்கிச் சென்ற ரிஷிகளில் ஒருவரான அகஸ்தியரைக் காலால் உதைத்து, ''ஸர்ப்ப! ஸர்ப்ப!'' என்று அதட்டினான்.

''ஸர்ப்ப! ஸர்ப்ப!'' என்றால், ''நட! நட!'' என்று பொருள்படும் படியான வேகக் குறிப்பு. ரிக்ஷா ஓட்டுபவர்களைப் ''போ, போ!'' என்று சிலர் சொல்வது போல. அகஸ்தியரை உதைத்ததும் நஹுஷனுடைய பாப பாரம் பூரணமாயிற்று.

''அதமனே ! நீ சுவர்க்கத்திலிருந்து வீழ்வாய் ! 'ஸர்ப்ப ! ஸர்ப்ப' என்று முனிவர்களை அதட்டிய நீ ஒரு மலை ஸர்ப்பமாகிப் பூமியில் விழக் கடவாய்!'' என்று சபித்தார் அகஸ்தியர்.

அந்தக் கணமே நஹுஷன் தலை கீழாக வீழ்ந்தான். மலைப் பாம்பாகப் பிறப்பெடுத்துச் சாப விமோசனத்துக் காகப் பல்லாண்டு காத்துக் கொண்டு கிடந்தான்.

இந்திரன் மறுபடி தேவராஜ பதவியில் அமர்ந்தான். சசிதேவியும் அறுதல் அடைந்தாள். இவ்வாறு இந்திரனும் இந்திராணியும் பட்ட கஷ்டங்களை யுதிஷ்டிரனுக்கும் திரௌபதிக்கும், மாமனை சல்லியன் உபப்பிலாவிய நகரத்தில் சொல்லி அவர்களுடைய துயரத்தை ஆற்றினான்.

''பொறுத்தார்க்கு வெற்றி உண்டு. செல்வப் பெருக்கினால் மதம் கொண்டவர்கள் நாசமடைவார்கள். இந்திரனும் அவனுடைய பத்தினியும் துக்கம் அடைந்தது போல் நீயும் திரௌபதியும் உன் சகோதரர்களும் சொல்லொணாத கஷ்டங்களை அடைந்தீர்கள். அவையெல்லாம் தீர்ந்து ராஜ்யத்தைச் சீக்கிரம் அடைவாய். துஷ்ட புத்தியுள்ள கர்ணனும் துரியோதனனும் நஹுஷனைப் போல் நாசமடைவார்கள்'' என்றான் சல்லியன்.

54. சஞ்சயன் தூது

விராடனுடைய ராஜ்யத்தில் உபப்பிலாவிய நகரத்திலிருந்து கொண்டு பாண்டவர்கள் தங்களுடைய நண்பர்களாகிய அரசர்களுக்கெல்லாம் தூதர்களை அனுப்பிப் பெருஞ்சேனை திரட்டினார்கள். ஏழு அக்குரோணிகள் சேர்ந்தன. எதிர்க்கட்சியில் கௌரவர்கள் இவ்வாறே தங்கள் சேனையைத் திரட்டினார்கள். அவர்களுடைய படை பதினொரு அக்குரோணிகளாயிற்று.

ஒரு அக்குரோணி என்பது தற்காலத்தில் ஒரு 'டிவிஷன்' என்பதைப் போல் எல்லாவிதப் படைகளும் விதாசாரபடி சேர்ந்து கூடிய ஒரு கணக்கு. ஒரு தேர், ஒரு யானை, மூன்று குதிரைகள், ஐந்து காலாட்கள் — இந்த விகிதப்படி சேனை திரட்டுவது அந்தக் காலத்து ராணுவ முறை. ஒரு அக்குரோணியில் 21,870 தேர்கள் இருக்கும். இதை அனுசரித்து மற்ற அங்கங்களின் கணக்கு. இவைகளுடன் எல்லாவித ஆயுதங்களும் மற்ற யுத்த சாமக்கிரியைகளும் இருக்கும். இந்தக் காலத்து 'ஆர்மர்கார்'கள் செய்யும் வேலையை அந்தக் காலத்தில் தேர்கள் செய்தன. இக்காலத்திய யுத்தங்களில் டாங்கிகள் செய்யும் வேலையை அந்தக் காலத்தில் யானைகள் செய்து வந்தன.

துருபதன் அனுப்பிய புரோகிதர் திருதராஷ்டிரனிடம் போய் வழக்கப்படி முதலில் கேட்க வேண்டிய குசலப் பிரச்னைகள் தீர்ந்ததும் சபையில் பாண்டவர்களின் சார்பில் பேசலானார்.

''தருமம் அறுதியானது. உங்களுக்குத் தெரியாததல்ல. திருதராஷ்டிர ராஜனும் பாண்டுராஜனும் விசித்திர வீரியனுடைய குமாரர்கள். பிதாவின் சொத்து இருவருக்கும் பொதுவானது. அப்படியிருக்கத் திருதராஷ்டிர புத்திரர்கள் ராஜ்ய பதவியை அடைந்து, பாண்டு புத்திரர்கள் அதை அடையாமல் இருக்கிறார்கள். இது நியாயமல்ல. குரு வம்சத்தில் பிறந்த பாண்டுவின் குமாரர்கள் தாங்கள் பட்ட துன்பங்களையெல்லாம் மறந்து விட்டுச் சமாதானத்தை விரும்புகிறார்கள். யுத்தம் உலகத்துக்கு நாசம் உண்டாக்கும். அவர்கள் அந்த வழியை வெறுக்கிறார்கள். தர்மத்துக்கும் முன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கும் இசைய அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடுங்கள். தாமதம் வேண்டாம்'' என்றார்.

அறிவும், வீரமும் பொருந்திய பீஷ்மர் பேசினார் :

"தெய்வானுகூலத்தால் பாண்டவர்கள் க்ஷேமமாக இருக்கிறார்கள். பல அரசர்களுடைய சகாயத்தை அவர்கள் பெற்றுப் பலவான்களாயிருந்த போதிலும் போர் புரிவதில் அவர்கள் மனம் செலுத்தவில்லை. சமாதானத்தையே கோருகிறார்கள். அவர்களுக்குக் கொடுத்துவிடுவதே தர்மம்" என்றார்.

இவ்வாறு பீஷ்மர் பேச ஆரம்பித்ததும், கர்ணன் கோபம் கொண்டவனாய், அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே தூதரைப் பார்த்து, "பிராம்மணரே! நீர் சொன்னதில் என்ன புது விஷயம் இருக்கிறது? பழைய கதையைச் சொல்வதில் என்ன பயன்? ஆட்டத்தில் யுதிஷ்டிரன் இழந்த சொத்தை இப்போது அவன் எவ்வாறு கேட்கலாம்? யுதிஷ்டிரன் தன்னுடைய பிரதிக்ஞையைச் சரியாக நிறைவேற்றி விட்டு எதையேனும் யாசகமாகக் கேட்கட்டும். மத்ஸ்ய தேசத்து அரசனுடைய சேனையையும் பாஞ்சால ராஜனுடைய பலத்தையும் நம்பியல்லவோ இப்போது ராஜ்யம் கேட்கிறான்? பயமுறுத்தித் துரியோதனனிடமிருந்து எதையும் பெற முடியாது என்பதை அறிந்து கொள்ளும். பதின்மூன்றும் ஆண்டு முடிவதற்குள் பிரதிக்ஞை தவறி விட்டபடியால் அவர்கள் மறுபடி பன்னிரண்டு வருஷங்கள் காட்டிலிருந்துவிட்டுத் திரும்ப வேண்டும்" என்றான்.

பீஷ்மர், "ராதையின் மகனே! பயனற்றப் பேச்சுப் பேசுகிறாய்! இந்தத் தூதர் சொன்னபடி நாம் செய்யாமற் போனால் யுத்தத்தில் தோல்வியடைந்து துரியோதனனும் எல்லாரும் வீழ்த்தப்பட்டு மடிந்து போவது நிச்சயம்" என்றார்.

சபையில் ஏற்பட்ட கலவரத்தைக் கவனித்து, திருதராஷ்டிரன் குறுக்கிட்டான்.

"உலக நன்மையைக் கருதியும் பாண்டவர்களுடைய நலனைக் கருதியும் பாண்டவர்களிடம் சஞ்சயனை அனுப்புவது என்று நான் தீர்மானித்திருக்கிறேன். தூதரே! நீர் உடனே திரும்பிப் போய் இதை யுதிஷ்டிரனிடம் சொல்ல வேண்டும்" என்று திருதராஷ்டிரன் சொன்னான்.

பிறகு திருதராஷ்டிரன் சஞ்சயனை அழைத்து அவனுக்கு கட்டளையிட்டான்.

"சஞ்சயனே, நீ பாண்டு புத்திரர்களிடம் போய்க் கிருஷ்ணன், சாத்யகி, விராடன் முதலியவர்களை நான் அன்புடன் விசாரித்ததாக நல்ல வார்த்தைகளைச் சொல். அவ்விடம் குடியிருக்கும் அரசர்களுக் கெல்லாம் என்னுடைய விநயத்தைச் சொல். யாருக்கும் கோபம் உண்டாகாதவாறு யுத்தத்தை தவிர்க்கும் முறையில் எனக்காக நீ போய்ப் பேசுவாய்" என்றான்.

சஞ்சயன் யுதிஷ்டிரனிடம் சென்றான். உபப்லாவியத்தில் அனைவரையும் முறைப்படி வணங்கி விட்டுச் சபையில் நின்று சஞ்சயன் சொன்னான்:

"தரும புத்திரரே! மறுபடி உம்மை நான் என் கண்ணால் பார்த்தது என் பாக்கியம். அரசர்கள் சூழ இந்திரனைப் போல் காட்சி தருகிறீர். இந்தக் காட்சி என் உள்ளத்துக்கு ஆனந்தமாக இருக்கிறது. திருதராஷ்டிர மகாராஜா உம்முடைய க்ஷேமத்தை விசாரிக்கிறான். அம்பிகாபுத்திரன் யுத்தம் என்கிற பேச்சை வெறுக்கிறான். ஸ்நேகத்தை விரும்புகிறான். சமாதானத்துக்காகவே ஆசைப்படுகிறான்."

இவ்வாறு சஞ்சயன் சொன்னதைக் கேட்டுத் தருமபுத்திரன் மகிழ்ச்சியடைந்து, "அப்படியாயின் திருதராஷ்டிரனுடைய மக்கள் பிழைத்தார்கள். நாம் அனைவரும் பெரும் துக்கத்தினின்று தப்பினோம். நானும் சமாதானமே விரும்புகிறேன். யுத்தம் என்பதை நினைத்தால் என் உள்ளம் வெறுப்பு அடைகிறது. எங்களுடைய ராஜ்யத்தைத் திரும்பக் கொடுத்து விட்டால் நாம் பட்ட துன்பங்களையெல்லாம் மறப்போம்" என்றான்.

சஞ்சயன், "திருதராஷ்டிர புத்திரர்கள் மூடர்கள். பிதாவின் பேச்சையும் பிதாமஹர் பீஷ்மர் பேச்சையும் அவர்கள் தள்ளிவிட்டு மூர்க்கர்களாகவே நடந்து கொண்டு வருகிறார்கள். ஆனாலும் நீ பொறுமை இழக்கலாகாது. யுதிஷ்டிரரே! நீர் எப்போதும் உயர்ந்த தருமத்தில் நிற்கிறவர். யுத்தம் வேண்டாம். யுத்தத்தினால் அடைந்த செல்வத்தைக் கொண்டு என்ன சுகம் பெற முடியும்? பந்துக்களைக் கொன்று அடையக்கூடிய பாக்கியத்தினால் என்ன நன்மையைப் பெற முடியும்? ஆகையால் போரைத் தொடங்க வேண்டாம். சமுத்திரத்தை எல்லையாகக் கொண்ட ராஜ்யத்தை அடைந்தாலும் முதுமையும் மரணமும் யாராலும் விலக்க முடியாதவை. துரியோதனாதிகள் மூடர்கள். அதற்காக நீர் உம்முடைய தருமத்தையும் பொறுமையையும் இழக்கலாகாது. அவர்கள் உங்களுக்கு ராஜ்யத்தைத் தராவிட்டாலும் மேலான தரும நெறியை நீர் விட்டுவிடலாகாது" என்றான்.

(தொடரும்)

எழுத்தில் புதுமை

சத்யாக்ரகி

வாராது போல் வந்து நமக்குக் கிடைத்த சுதந்திரம் இந்த நூற்றாண்டின் உலக சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். 1920ல் தொடங்கி 1948ல் முடிவுற்ற காந்தியுகத்தின் இறுதியில் நம் நாடு விடுதலை பெற்றது. மகாத்மாவின் தலைமையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கத்தியின்றி, ரத்தமின்றிப் போராடி வென்றோம். இந்த அஹிம்சைப் போரைச் செய்ய காந்திஜி கொடுத்த ஒரே ஆயுதம் சத்தியாக்கிரகம் என்பதுதான்.

பிரார்த்தனை, அந்நியத் துணி பகிஷ்காரம், கள்ளுக்கடை மறியல், சிறைவாசம் எல்லாமே சத்தியாக்கிரகப் போரின் பல பிரிவுகள். தேசிய இயக்கத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ள திரு சி. சு. செல்லப்பாவின் சிறுகதைகள் பல சத்தியாக்கிரக தத்துவ அடிப்படையில் உருவானதில் அதிசயமில்லை. அத்தகைய கதைகளில் பன்னிரண்டின் தொகுப்புதான் 'சத்யாக்ரகி'.

சுதந்திரம் பெற்ற வரலாறு இலக்கியத்தில் பிரதிபலிக்கு மாறு எழுதப்பட்ட சிறுகதைகளும் நாவல்களும் தமிழில் மிகக் குறைவு. தமிழ் எழுத்தாளர்களில் பலர் காந்தி இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் இந்த நூலைப் போல 'காந்தியுகக் கதைகள்' என்று அழைக்கும்படியான தனித் தொகுதி ஒன்றும் வெளியாகவில்லை. அந்த வகையில் சி. சு. செல்லப்பாவின் 'சத்யாக்ரகி' ஒரு பாராட்டத் தக்க புது முயற்சி.

இந்தத் தொகுதியில் உள்ள கதைகளில் பாதிக்கு மேல் பிரிட்டிஷ் காலத்துச் சிறை அனுபவங்களை விவரிப்பவை. 'சிறைச்சாலை என்ன செய்யும்?' என்று கேட்பவர்களும் உண்டு. செல்லப்பாவைப் பொறுத்தவரையில் சிறைச்சாலை அவருக்கு அரை டஜன் நல்ல கதைகளை உருவாக்கித் தந்துள்ளது. முதல் கதையான 'வந்தே மாதர'மும் கடைசிக் கதையான 'சத்யாக்ரகி'யும் ஊர்வலம், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் பற்றித் தத்ரூபமான வர்ணனைகள் கொண்டவை. 'சரித்திர தினம்' மதுவிலக்கு அமுலுக்கு வந்ததும், மறுமலர்ச்சியடைந்த ஒரு மாஜி குடியனைப் பற்றியது. 'குற்ற பரம்பரை' பிரிட்டிஷ் காலத்தில் கடுமையாக அமுல் நடத்தப்பட்டு, நாடு சுதந்திரம் பெற்றவுடன் எடுத்து எறியப்பட்ட 'குற்ற பரம்பரைச் சட்ட'த்தின் கொடுமைகளை விளக்கும் கதை. இந்தக் கதைகளில் 'அன்றைய பொங்கல்' 'கனவு' 'சட்டத்துக்கு மீறி', 'சத்யாக்ரகி' ஆகிய நான்கும் வாசகர்கள் நினைவில் நிலைத்து நிற்கக் கூடியவை. செல்லப்பாவுக்கே உரிய, பண்டிதர்கள் ஒப்புக் கொள்ளாத, பாமரர்களுக்குச் சில இடங்களில் புரியாத நடையில் தான் இக்கதைகள் எல்லாமே எழுதப்பட்டுள்ளன. ''அளிவகுப்பு கிட்டத்தில் வருகிற சமிக்ஞையே இல்லை'', ''மிருகங்கள் கையில் இதைவிட இன்னும் நாம் அதிகம் எதிர்பார்க்கத் தயாராக இருக்க வேண்டும்'', ''பேச்சு வாய்க்கால் விட்டது'' என்ற வரிகளில் ஆங்கிலபாஷையின் 'பாதிப்பு' தலைதூக்கி நிற்பதைக் காண்கிறோம்.

திரு சி. சு. செல்லப்பா அபூர்வமாக இயற்கையின் அழகில் மனத்தைப் பறிகொடுத்துச் செய்திருக்கும் ஒரு புதுப் பாணி வர்ணனை இங்கு கவனிக்கத் தக்கது. ''வெளியே வானத்தில் அரை நிலா. தொலைவில் தெரியும் ஒரு பெரிய காட்டின் விளிம்போடு ஒட்டிக் கொண்டு, பிணத்தின் விழித்த கண் மாதிரி அசைவற்றுக் கிடந்தது. அந்த அரை நிலவின் மங்கின ஒளியிலே அதன் கீழே தரையில் கிடப்பவையெல்லாம் அசடு வழிந்தன.'' பழமையில் ஊறின பண்டிதர்களுக்கு இந்த அரை நிலா வர்ணனை முழு அதிர்ச்சியல்லவோ அளிக்கும்?

ஜெயிலில் கிடைப்பவை பற்றி அவர் கூறுவதைப் படியுங்கள்: ''அந்தப் பழைய கோணிப் படுக்கையும், நாற்றக் கந்தல் கம்பளிப் போர்வையும், புழுவும் மணலும் கை கையாக இருக்கும் துர்நாற்றக் கட்டிச் சோறும், வேகாத முள்ளங்கியும் நன்கு கொதிக்காத பச்சைப் புளி வேகம் வீசும் உப்பில்லாத கருநிறக் குழம்பும்..''

தொண்டர்களை ஊக்குவிக்கும் கோஷம் பற்றிக் கிண்டலும் கேலியுமாக அவர் கூறு





வதைப் பாருங்கள்: "இப்போதுஎன்னென்லாமோ மெட்டிலே — சினிமா மெட்டிலே— பாட்டுக்கள் அரசியல் கட்சி மேடைகளில் பாடுகிறார்களே, வாய்க்கு வந்தது நாராயணா என்றபடி. அப்போ வாழ்க கோஷம் ஓங்கி நிற்கும். இப்போ வீழ்க கோஷம்தான் தூக்கிக் கேட்கிறது. அப்போ ஒரே வீழ்க கோஷம்... 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வீழ்க' இப்போ, 'நீ வீழ்க, நான் வீழ்க'!" நையாண்டி நன்றாகவே விழுந்திருக்கிறதல்லவா?

மதுரை ஜில்லா சின்னமனூரைச் சேர்ந்த ஆனால் வத்தலகுண்டில் 29–9–1912ல் பிறந்த திரு சி. சு. செல்லப்பா, அப்போது சுதந்திர இயக்கத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்கிய தூத்துக்குடியிலும், மதுரையிலும் படித்தவர். இளம் வயதிலேயே லாலா லஜபத்ராய், சரோஜினி தேவி, வல்லபாய் படேல் போன்ற தலைவர்களின் பேச்சைக் கேட்டுத் தனக்குள்ளே சுதந்திரக் கனலை வளர்த்துக் கொண்டார். இவருக்கு வெள்ளைக்காரன் மீது இருந்த வெறுப்பை ஆங்கில மொழியானது தன்மீது கொண்ட வெறுப்பாகக் கருதி தோ என்னவோ, பி. ஏ. பரீட்சையில் இவர் காலை வாரிவிட்டு விட்டது!

இவருடைய முதல் கதை 'மார்கழி மலர்' 1934ல் 'சுதந்திரச் சங்கு'வில் வெளிவந்தது. இவருடைய பிரபலமான 'சரசாவின் பொம்மை' 1935ல் பி. எஸ். ராமையாவின் மணிக் கொடியிலும், 'நொண்டிக் குழந்தை' கலைமகளிலும் வெளியாயின. தமிழ் நாட்டின் பல பத்திரிகைகளில் இவர் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சிறு கதைகளையும் சில நாவல்களையும் எழுதியிருக்கிறார். 'ஜெய பாரதி', 'தமிழ் நாடு', 'பாரத தேவி', 'சந்திரோதயம்', 'தினமணி கதிர்' ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக இருந்தவர். 1959 முதல் 'எழுத்து' என்ற இலக்கிய விமரிசனப் பத்திரிகைக்கு ஆசிரியராகஇருந்து வருகிறார்.

'வாடி வாசல்', 'ஜீவனாம்சம்' என்ற நாவல்களின் ஆசிரியர் இவர். 1941ல் தனி நபர் சத்யாக்ரகம் செய்து ஆறு மாதம் கடுந் தண்டனை அனுபவித்த திரு செல்லப்பா, மணிக்கொடி கோஷ்டி எழுத்தாளராகக் கருதப்படுவதில் பெருமை கொள்கிறார்.

"உங்களுடைய இந்த 'சத்யாக்ரஹி' உங்கள் சிறை வாழ்க்கையின் பல அம்சங்களின் பிரதிபலிப்பாகத்தானே அமைந்திருக்கிறது?"

"ஆமாம். அதே சமயத்தில் தமிழ் நாட்டில் முப்பதுகளிலும், நாற்பதுகளிலும் மக்களிடையே இருந்த சுதந்திர ஆவேசத்தையும் பிரதிபலிக்கிறது" என்றார் சி. சு. செல்லப்பா.

"உங்கள் சொந்த வாழ்க்கை எந்தக் கதைகளில் தூக்கலாக இருக்கிறது?"

"'அன்றைய பொங்கல்' என் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டது. சத்யாக்ரகம் செய்த என்னைக் கைது செய்து கொண்டு இரண்டு கைகளிலும் விலங்கிட்டு மதுரை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள்" என்று பெருமிதத்தோடு சொன்னார் செல்லப்பா தம் கைகளைப் பார்த்தவாறே!

"எந்த எந்த ஊர் ஜெயில்களில் 'அச்சடித்த சோற்றையும், அவுன்சு குழம்பை'யும் சாப்பிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"வேலூர் பாதி, அலிபுரம் (பல்லாரி அருகில்) பாதி. வேலூரிலிருந்து அலிபுரத்துக்கு 'கமான் எடுத்துப் போகும்'போது பாகாலா ஸ்டேஷனில் வெள்ளைக்கார சார்ஜெண்ட் நடத்திய கெடுபிடிகளைத்தான் 'கந்தசாமி' என்ற கதையில் விவரித்திருக்கிறேன். 'சத்யாக்ரஹி' கதையில் ஒருவருக்குக் கால் போனதாக நான் எழுதி யிருக்கிறேன். ஆனால் உண்மையில் அந்தக் கதை தடியடியினால் கேட்கும் சக்தி பாதிக்கப்பட்டுள்ள நண்பர் திரு கே. எஸ். ஜம்புநாதனை வைத்துக் கொண்டு எழுதியதுதான்" என்றார் திரு செல்லப்பா.

தொடர்ந்து, "'மருதநாயகம்' கதையில் வரும் 'ஏ' கிளாஸ் கைதி காலம் சென்ற திரு சி. என். முத்துரங்க முதலியார்தான். அவர், 'சி' வகுப்புக் கைதிகளாகிய எங்களைப் பார்க்க வந்தபோது நாங்கள் இருந்த அவல நிலையைக் கண்டு பொல பொலவென்று கண்ணீர் வடித்த காட்சி என் மனத்தில் அப்படியே நின்றுவிட்டது" என்றார்.

"உங்கள் ஜெயில் அனுபவங்களில் வேறு ரசமான தகவல் உண்டா?"

"உண்டு. நான் திருடிவிட்டு ஜெயிலுக்குப் போகவில்லை. ஆனால் ஜெயிலிலேயே திருடிவிட்டு வெளிவந்திருக்கிறேன்! கைதிகளின் பெயர், நம்பர், தண்டனை விவரம் அடங்கிய சயத்தினாலான தகட்டை விடுதலை தினத்தன்று ஜெயில் உடைகளுடன் கீழே போட்டுவிட்டு வந்துவிட வேண்டும். ஆனால் நான் அதைத் தைரியமாகக் கையோடு கொண்டு வந்துவிட்டேன்!" என்று சொல்லிப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்தத் தகட்டை எடுத்துக் காண்பித்தார் திரு செல்லப்பா!

"'எழுத்து' பத்திரிகையை எந்த நோக்கத்தோடு தொடங்கினீர்கள்?"

"இலக்கிய விமரிசனம்தான் 'எழுத்து'வின் நோக்கம். சிறுகதைகளும், நாவல்களும் நிறைய எழுதப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆனால் வெள்ளத்தை ஒழுங்கு படுத்தும் அணை, கரை போன்ற விமரிசனத்துக்கு என்று ஒரு பத்திரிகையும் இல்லையே என்றுதான் தொடங்கினேன்."

"'எழுத்துவில்' என்று எழுதுகிறீர்களே அது சரியான பிரயோகமாகுமா?"

"நன்றாய்க் கேளுங்கள். விளக்கம் தருகிறேன். நவமணிகளில் ஒன்றான 'முத்தைப் பார்த்தேன்' என்று சொல்லும் நாம், முத்து என்ற நபரைக் குறிக்கும்போது 'முத்துவைப் பார்த்தேன்' என்று சொல்லுகிறோம். அதே மாதிரிதான் 'எழுத்துவைப் பார்த்தேன்' என்பதும்" என்றார் எழுத்துவின் ஆசிரியர்.

— மகரம்


கிடைக்குமிடம்: எழுத்து பிரசுரம், சென்னை - 5; விலை: ரூ. 4.00





மேனி எழிலை அள்ளி அளிக்கும்

மேட்டூர் சந்தன சோப்



மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-1133



இது போன்ற அழகான பன்னிரண்டு படங்களை எடுங்கள்
Agfa
க்ளிக் III
...வாங்கிய நாளன்றே
12 பெரிய (6x6cm) படங்களை, அளிக்கிறது ஒவ்வொரு 120 சுருளும்.
AGIL
ஆக்பா–கேவார்ட் இந்தியா லிமிடெட்
CHAG-106-300 TM



மலர் சிரித்தது

— எல்லார்வி —

வனஜா ஜன்னல் வழியே வானவெளியை நோக்கிக் கொண்டிருந்தாள். திடீரென்று வந்த மழை வந்த வேகத்திலேயே நின்று போயிற்று. மழை நின்றும் தூவானம் நிற்கவில்லை. உடைத்த தேங்காய் சிரித்தது போலப் பளிச்சென்ற வெய்யில் எங்கும் பரவியது. அழுது கொண்டிருந்த குழந்தை வேடிக்கை ஒன்றைக் கண்டதும் களுக்கென்று களங்கமற்றுச் சிரிப்பது போன்ற அந்நிலையை வனஜா இப்போது ரசிக்கவில்லை.

அவள் உள்ளத்தில் எண்ணங்கள் பல புரண்டு புரண்டு அலைமோதிக் கொண்டிருந்தன. கடந்த ஒரு வார காலமாக நிகழ்ந்த சம்பவங்கள் அவள் நெஞ்சத்தைக் கசக்கிப் பிழிந்தன. பல நாளைய முயற்சியில் உருவான ஒரு சிறந்த பொருளைக் கணப்போதில் தரையில் அடித்து உடைப்பது போல் அவளது ஆசைக் கோட்டை — நெடுநாட்களாக அவள் மனத்தடத்தில் நிர்மாணமாகிவந்த அழகு மாளிகை — ஒரே வினாடியில் தவிடு பொடியாகி விட்டதை அவளால் சகிக்க முடியவில்லை.

கடந்த வெள்ளியன்று அவளைப் பெண் பார்க்க வந்தார்கள். வரவேற்பு, உபசாரம் யாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. பார்த்தன் — அவளது ஆசை மனோகரன் — எவ்வளவு வசீகரமாகத் தோற்றமளித்தான்! அவனது கம்பீர நடையும், சொக்கும் பார்வையும் மயக்கும் சிரிப்பும் அவள் மதியைக் கிறுகிறுக்கச் செய்தன. அவனது பெற்றோரும்தான் எவ்வளவு பெருந்தன்மையுள்ள மனிதர்கள்! எத்தனை கண்ணியமாக நடந்து கொண்டார்கள்! தன்னுடைய திட்டம் வெற்றி பெறுவதை எண்ணி எண்ணிப் பூரித்தாள் வனஜா. ஆனால்...

வந்தவர்கள் விடைபெற்றுச் சென்ற பின்.. நிலைமை தலைகீழாக மாறிப் போயிற்று... அவள் தந்தை மகாலிங்கத்தின் முகத்தில் ஈயாடவில்லை. யாருடனும் எதுவும் பேசாமல் முன்புற ஹாலில் மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தார். அவர் நிலை கண்டு விவரம் புரியாமல் வனஜா திகைத்தாள்.

பெண் சுதந்திரம் போன்ற சில முன்னேற்றக் கொள்கைகளே மூச்சுக் காற்றாக வாழ்ந்து வருபவர் புரொபஸர் மகாலிங்கம். அந்த நம்பிக்கையிலேதான் பார்த்தனிடம் பறிகொடுத்த உள்ளத்தை மீட்க வகையின்றித் திருமணப் பேச்சு வீட்டில் தொடக்கமானதும் தகப்பனார் மகிழ்ச்சியோடு இருக்கும் நேரம் பார்த்து தன் உள்ளக் கிடக்கையை அவரிடம் மெல்ல வெளியிட்டாள் வனஜா. வாத்சல்யத்தோடு மகளின் முகம் பார்த்து அவள் சொற்களைச் செவிமடுத்த தந்தை. அனைத்தையும் கேட்டபின் மென்னகை புரிந்தார்.

அந்தச் சிரிப்புக்கு என்ன பொருள்? அவளுக்கு ஐயம் ஏற்பட்டது. மேலும் தொடர்ந்து பேசினாள்:

''...அப்பா, உங்கள் பெண் தப்புக் கணக்குப் போடமாட்டாள், அப்பா. 'வெண்முகில்' இதழ்களில் தொடர்ந்து வரும் கதைகள் அவரது சிறந்த அறிவைப் பறைசாற்றுகின்றன. பரிசு பெற்ற கதையோடு பிரசுரமான அவர் படம் அவரது தோற்றத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. சிறந்த பரம்பரை என்பதை என் தோழி பத்மா வீட்டார் சொல்கிறார்கள். நல்ல படிப்பு, உயர்ந்த உத்தியோகம், நிறைந்த வருவாய்; அப்புறம் என்ன அப்பா?... குணம் — அதுவும் உயர்வாகத்தான் இருக்கும்...''

''ஆகட்டும், அம்மா! பார்க்கிறேன். வாழ வேண்டியவள் நீ. உனக்குத் திருப்தி என்றால் சரி. சுயம்வரமாகவே நடக்கட்டும்'' என்று சிரித்தார் மகாலிங்கம்.

மறுநாளே அவர் பார்த்தனின் தந்தையிடம் சென்று பேசினார். இரு தரப்பிலும் கண்ணியமான போக்கு. குறித்த நாளில் அவர்கள் பெண் பார்க்க வந்ததிலோ, சம்பந்தம் பேசியதிலோ குறை இல்லை. ஆனால்... அவர்கள் சென்ற பின் மகாலிங்கத்திடம் ஏற்பட்ட இம் மாற்றத்துக்குக் காரணம்?

எட்ட இருந்தபடி தந்தையை நோக்கியவாறு தவித்துக் கொண்டிருந்த வனஜாவை அவள் தந்தையின் குரல் அழைத்தது. குழம்பியபடி அருகில் சென்றாள்.

''அம்மா, வனஜா! நீ போட்ட கணக்கில் உன்னையும் மீறி ஒரு பிழை இருக்கிறது. மற்ற அனைத்தும் சரிதான். பையனிடம் குறை இருக்கிறது. அதைச் சிறு குறை என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. மூளையில் ஏதோ கோளாறு. பிரமை பிடித்த நிலையில் இருக்கிறான். அதை நாம் பிரகடனப்படுத்துவதும் முறை அன்று. நம்வரையில் பேசுவோம்;

நமக்கு இந்த இடம் வேண்டாம்; நீ அவனை மறந்துவிடு.''

இவ்வாறு நயமாக எடுத்துக் கூறினர் மகாலிங்கம். மின் தாக்குதல் ஏற்பட்டாற்போல் இருந்தது வனஜாவுக்கு. சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை. வேரோடிப் போய்க் கப்பும் கிளையுமாக வளர்ந்துவிட்ட மரத்தை லேசாக ஆட்டி அசைத்துப் பிடுங்கி எறிந்து விட முடியுமா? வனஜா தந்தையின் முடிவுக்கு அத்தனை எளிதில் இணங்கிவிடுபவளாக இல்லை. நாலைந்து மாதங்களுக்கு முன் பரிசளிப்பு விழாவில் கருத்துச் செறிவுடைய சொற்பொழிவாற்றிய பார்த்திபனைப் பிரமை பிடித்தவன் என்று தந்தைக்காக ஒப்புக்கொள்ளவும் தயாராக இல்லை. எனவே நயமாகவும் மரியாதையாகவும் தகப்பனுர் கருத்தை மாற்றலானுள்.

அன்றைப் பொழுது சென்றது. மறுநாள் முதலே அவளது தந்தை அவள் திருமண விஷயத்தில் மிகத் தீவிரமாக இருப்பதை அவள் உணர்ந்தாள். அவர் பல்வேறு இடங்களில் முயன்று சடசடவென்று ஜாதகங்களை வாங்குவதும், பரிசீலனை செய்வதுமாக இருந்தார். ஒன்று பொருந்திஞல் ஒன்று பொருந்தவில்லை. இதற்கிடையில் பார்த்தனின் தந்தையிடமிருந்து சம்மதம் தெரிவித்துக் கடிதம் வந்தது. அதைப் பார்த்தபோது வனஜாவின் உள்ளம் குழைந்தது. நெகிழ்ந்தது. மகிழ்ந்தது. அதைப் படித்துவிட்டு அவளது தந்தை ஒரு புறமாகத் தூக்கி எறிந்ததைக் கண்டபோது அந்த உள்ளம் குமைந்தது; வெந்தது; சிதைந்தது.



பயன் ஏதும் இன்றி நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. வனஜாவும் தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுப்பதாக இல்லை; மகாலிங்கமும் தம் முயற்சிகளை நிறுத்துவதாக இல்லை.

நினைவலைகளில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்த வனஜாவைத் தொலைபேசியின் மணி ஓசை தட்டி எழுப்பிற்று.

''...ஓ... வனஜாதான் பேசுகிறேன், சிற்றப்பா! அம்மாவும் அப்பாவும் சந்தானத்தின் குழந்தை ஆண்டு நிறைவு விழாவுக்காகக் கரூர் போயிருக்கிருர்கள். நீங்கள் எப்போது பங்களூரிலிருந்து வந்தீர்கள்?... ஓகோ...சரி...நாளைக்கா?...சரி; ஆகட்டும்.''

நீண்ட பெருமூச்சுடன் திரும்பிய வனஜாவின் கண்ணில் அவள் சிற்றப்பா நாகசாமியின் புகைப்படம் பட்டது. சற்று நேரம் அதையே உற்றுப் பார்த்தபடி நின்ருள்.

நாகசாமி தனி மனிதர். மகாலிங்கத்தின் ஒன்றுவிட்ட தம்பி. இளமையிலேயே தாரமிழந்து, இல்வாழ்க்கைப் பற்றைத் துறந்து ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு உழைத்து வருபவர். சிறந்த மனத் தத்துவ நிபுணர். சொந்த முயற்சியில் பல அரிய சாதனங்கள் நிறைந்த ஆராய்ச்சிக் கூடத்தை நிர்மாணித்து இரவு பகலாய் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டு வருபவர். பொறுமையும் அன்புமே உருவானவர்.

தமக்குக் குழந்தை இல்லை என்று அவர் குறைப்பட்டதே யில்லை. தமையனின் மக்களைத் தம் மக்களாகவே பாவித்தார். அதிலும் வனஜாவிடம் அவருக்கு உயிர். பெற்றோரை விட அவரிடம் அவளுக்குச் சலுகை மிகுதி.

அவர் படத்தையே பார்த்து நின்ற வனஜா, திடீரென்று ''ஆகாகா!...'' என்ருள். ''நான் பெரிய முட்டாள். இவ்வளவு நேரம் பேசினேனே, நிலைமையை அவருக்குச் சொன்னேனு?...'' என்று முணுமுணுத்தாள். தொடர்ந்து அவளிடம் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. தொலை பேசியை இயக்கினுள்; ''உங்களைப் பார்க்க வேண்டும் சிற்றப்பா. இதோ வருகிறேன்'' என்ருள்; உடனே புறப்பட்டாள்.

ஃ ஃ ஃ

''வா, நாகசாமி. எப்போது பங்களூரிலிருந்து வந்தாய்?'' என்று தம்பியை வரவேற்ருர் மகாலிங்கம்.

''நேற்று வந்தேன். வந்ததும் நல்ல செய்தியைக் கேள்விப்பட்டேன்'' என்ருர் நாகசாமி. மகாலிங்கத்தின் புருவங்கள் மேலும் உயர்ந்தன.

வனஜா இருவருக்கும் காப்பி கொண்டு வந்தாள்.

''இவன் திருமணம் விஷயம்தான் சொல்கிறேன். பையனின் அப்பா என் பழைய நண்பர். பையனும் நல்ல அறிவாளி, குணசாலி, படிப்பாளி. வனஜாவுக்கு ஏற்ற வரன்!''

''எந்தப் பையனைச் சொலகிருய் நாகசாமி?''

''பார்த்தன் என்ற பையனைப் பற்றித்தான்.''

மகாலிங்கம் ஏளனமாகச் சிரித்தார். ''அவனைப் பற்றி உன் செல்லப் பெண் வருணித்த வருணனையோ?''

''அவனை நான் இப்போதுதானே அண்ணா பார்க்கிறேன்?'' என்று ஒரு சிறு பொய் சொன்னார் நாகசாமி.

''பின் எப்படி உனக்குத் தகவல் தெரியும்?''

''பையனின் தகப்பனார் சொன்னார்.''

''ம்! ம்... சரிதான்!''

''ஏன் அண்ணா, ஏன் என்னவோ போல் பேசுகிறாய்? உனக்கு... இந்த இடம் பிடிக்கவில்லையா?''

''பையன் பைத்தியம் என்றால் என்ன செய்வது? அவனை விட்டுவிட வேண்டியதுதானே?''

''பைத்தியமா?'' என்று வாயைப் பிளந்தார் நாகசாமி.

''ஆமாம்; தானாக ஒரு சொல் பேசலை.''

''அது அவனது இயல்பாக இருக்கலாம்.''

''எல்லாரும் கலகலவென்று சிரித்தபோது அவனிடம் சிறு நகைகூட இல்லை.''

''அதுவும் அவனது இயல்பாக இருக்கலாமே!''

''ஓ!...இப்போதுதான் புரிகிறது. நீ எங்கோ செய்தி கேட்டு வரவில்லை; உன் செல்லப் பெண்ணுக்காக வக்காலத்து வாங்கி வாதமிடும் திட்டத்தோடு வந்திருக்கிறாய் என்று.''

''சேசே. அப்படியெல்லாம் இல்லை, அண்ணா. பொதுவாக கதை எழுதுபவர், பாட்டு இயற்றுபவர், படம் போடுபவர் இவர்களெல்லாம் விசித்திரப் பிறவிகள். ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு தனி இயல்பு அமைந்திருக்கும்.''

''ஆம். நீ ஒரு மனத்தத்துவ நிபுணன் என்பதை இந்நேரம் மறந்து போனேன். நீ சொல்வது சரி. அப்பேர்ப்பட்ட தனிப் பிறவி நமக்கு என்னத்துக்கு என்பதுதான் என் கேள்வி.''

''வாழ்நாள் முழுதும் ஈடு கொடுப்பவள், வனஜா தானே!''

''மிகவும் நன்றாக இருக்கிறது நீ பேசுவது! பொறுப்புள்ள தந்தையின் கடமை?... இதைக் கேள் நாகு. எல்லாரும் சரளமாகப் பேசிக் கொண்டிருக்கையில் அந்தப் பையன் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்து கிடந்தான். எனக்குச் சந்தேகம் தட்டியது. மெல்ல அருகே சென்று பேச்சுக் கொடுத்தேன். 'நீங்கள் சிறு கதைகள் மட்டும்தான் எழுதியிருக்கிறீர்களா, நாவல்களும் எழுதியிருக்கிறீர்களா?' என்று கேட்டேன். உடனே அவன் குனிந்த தலை நிமிராமலேயே, 'மலர் சிரித்தது' என்றான். அதைத்தொடர்ந்து 'இப்பொழுது ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன்' என்றான்.''

''இதில் என்ன அண்ணா? 'மலர் சிரித்தது' என்று இப்பொழுது ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன்' என்பதில் 'என்று' என்ற தொடர் சொல் உன் காதில் விழாமல் இருந்திருக்கலாமல்லவா?''

''ம். சரி; 'உங்களுக்கு உத்தியோகம், எழுத்துத் துறை இவை இரண்டில் எதில் மிகுதியான பிடிப்பு?' என்று அடுத்தபடியாக ஒரு கேள்வி கேட்டேன். 'மலர் சிரித்தது... மிகுதியான பிடிப்பு, எழுத்துத் துறையில்தான்' என்றான்.''

''ஓகோ...?'' என்று மோவாயைத் தடவிக் கொண்டார் நாகசாமி. மகாலிங்கம் அவரைப் பார்த்து பரிகாசமாகத் தலையசைத்து ''இப்பொழுது என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''உம்; அப்புறம்?''

''அப்புறம் என்ன நாகு? அவனுகப் பேசுவில்லை; நாம் பேச்சை வரவழைத்தால் 'மலர் சிரித்தது' என்ற சொற்களை முன்னேடியாகக் கொண்டு பேசுகிறான். பேசத் தொடங்கி விட்டால் தங்கு தடையின்றி, சாதாரணமாக, சரளமாகப் பேசுகிறான்.''


நாகசாமி மௌனமாக எழுந்து உலாவலானார்.

''அண்ணா அவனைப் பைத்தியம் என்று சொல்வது பொருந்தாது; அவ்வாறு சொல்வது தவறுங்கூட.''

''ஆம் நாகு. அவ்வாறு சொல்ல இன்னும் சில காலம் போகவேண்டும். இல்லையா?''

''அவனுடைய மனத்தில் ஏதோ சிறு கோளாறு இருக்கிறது. அதைக் கண்டு பிடித்துச் சீர்செய்து விடலாம். இந்த யுகத்தில் முடியாததும் ஒன்று உண்டா?''

''நமக்கு ஏன் தலைவலி? உனக்கு ஓர் ஆராய்ச்சி கிடைத்தது என்று வேண்டுமானால் வைத்துக் கொள். வனஜாவை அவனுக்கு நான் தர மாட்டேன்'' என்று கூறி விட்டுச் செய்தித் தாளைக் கையில் எடுத்துக் கொண்டார், மகாலிங்கம்.



நொடிப் பொழுதில் பளிச்சிடும் தூய்மைக்கே...



நுரைவளமோங்கும் விம்

கடுமை வாய்ந்த, மலிவான தேய்ப்புச் சாதனங்களை நம்பியிருக்க முடியுமா? கண்டிப்புடன் பெற்றிடுவீர் நுரைவளமோங்கும் விம். பேசின், தொட்டி, பீங்கான் பாண்டங்கள், பாத்திரங்கள், எதுவாயினும் சரி—விம் பட்ட இடமெல்லாம் ஒளிப் பிழம்பே. துப்புரவாக்குவதில் அதிக ஆற்றல் வாய்ந்த விம், விடாப்பிடியான பிசுக்குக்கும் விடைகொடுக்கும். துப்புரவான இல்லங்களுக்கு அடையாளம் ஒப்பிலாத விம் ஒளி.
ஓங்கிய ஒளிபெறவே—வாங்குவீர் விம்.

பாங்கான இல்லங்களிலே—விம், பளிச்சிடும் இல்லங்களிலே விம்

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

நாகசாமி புறப்பட்டார். "அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிட வேண்டாம் அண்ணு" என்ற அவரது வார்த்தைகளை மகாலிங்கம் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

வராந்தாவில் நின்றிருந்த வனஜா அவரைக் கண்டதும் விம்மி விம்மி அழுதாள். வாத்சல்யத்தோடு அவள் கூந்தலைக் கோதிவிட்ட நாகசாமி மெல்லிய குரலில் "என்னிடம் நம்பிக்கை இருந்தால் அழுகையை நிறுத்து" என்ருர். வனஜா கண்களைத் துடைத்துக் கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்தாள். "நான் வருகிறேன்" என்று அவர் சென்ருர்.

நாட்கள் சென்று கொண்டே இருந்தன. நாகசாமி வரவே இல்லை. வனஜா தணல் பரப்பின்மீது இருப்பவளைப்போல் தவித்தாள். வரவர நம்பிக்கை தளரலாயிற்று.

'நாமாவது போய் அவரைப் பார்த்து வரலாம்' என்று ஒரு நாள் சென்ருள். அவர் ஆராய்ச்சிக் கூடத்தில் இருந்தார். "வா, அம்மா" என்று அன்பு கனிய வரவேற்ருர். "நல்ல செய்தியோடு வரவேண்டும் என்றிருந்தேன். அதற்குள் நீயே வந்துவிட்டாய். பார்த்தனைப் பார்த்தேன். பேசிப் பழகினேன். மிகவும் நல்ல பிள்ளை. சிறந்த அறிவு. எல்லாம் சரிதான். ஆனுல் அப்பா சொன்னது போல் அவன் பேச்சின் தொடக்கத்தில் 'மலர் சிரித்தது' என்ற சொற்களை உச்சரிக்கத் தவறுவதில்லை. அதைப் பற்றிக் கேட்டால் நிமிர்ந்து பார்த்துத் தலை குனிகிறான். பேசத் தொடங்கி விட்டால் பொருளில் ஒன்றிச் சிறப்பாகப் பேசுகிறான். இடையில் அச்சொற்கள் இடம் பெறுவதே இல்லை. இது பற்றி நுணுகி ஆராய்ந்து உண்மையைக் காண வேண்டும். பிறகு பரிகாரம் தேட வேண்டும்; அதில் வெற்றி கிட்ட வேண்டும்" என்ருர்.

நிலத்தை நோக்கி முகத்தைத் தாழ்த்தியபடி சிலையாய் அமர்ந்திருந்த வனஜா திடீரென்று "சிற்றப்பா!" என்று கூவினள். "சில மாதங்களுக்கு முன் அவர் 'மலரின் சிரிப்பு' என்று ஒரு கதை எழுதினுர் சித்தப்பா. இப்போதுதான் நினைவு வருகிறது: அதன் பின்னர் அவர் கதை எதுவும் பிரசுரமானதாகத் தெரியவில்லை" என்ருள்.

நாகசாமி சற்றே சிந்தித்தார். பிறகு, "அந்தக் கதையின் பிரதி உன்னிடம் இருக்கிறதா?" என்று வினவினர்.

"ஓ!...இருக்கிறதே! இப்போதே போய்க் கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினள் வனஜா.

நாகசாமி தீவிரமான சிந்தனையில் லயித்தார். ஒரு நல்ல ஆராய்ச்சி கிடைத்ததில் மகிழ்ச்சி; அதிலே வெற்றிகிட்டினல் குழந்தை வனஜாவின் வாழ்வு சிறக்கும் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

அவரைக் காண யார் யாரோ வந்தார்கள். அவர்களிடம் ஏதோ ஒருவாறு பேசி அனுப்பினர்.

வனஜா வந்தாள். அவள் கையில் 'வெண்முகில்' இதழ் இருந்தது. அதை அவர் வாங்கிப் பார்த்தார். திடீரென்று அவர் முகம் மலர்ந்தது.

"என்ன சிற்றப்பா?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் வனஜா. அவர், 'மலரின் சிரிப்பு' என்ற கதையின் முதல் வரியை அவளுக்குக் காண்பித்தார். 'மலர் சிரித்தது' என்பதுதான் முதல் வரி.

"துப்புக் கிடைத்து விட்டது வனஜா! இது போதும் எனக்கு"

நாகசாமி எழுந்தார்; வனஜா விடை பெற்றுப் புறப்பட்டாள்.

ஃ ஃ ஃ

நாட்கள் கரைந்து கொண்டே போயின. வனஜாவின் உள்ளத்தில் மறுமலர்ச்சி பெற்ற நம்பிக்கைத் தளிர் மீளவும் வாடத் தொடங்கியது. 'இப்போதெல்லாம் இந்தச் சிற்றப்பா தேடிச் சென்ருலும் கிடைப்பதில்லையே!' என்று ஏங்கினள்.

ஒரு நாள் மாலை. திருமண வரவேற்பு ஒன்றுக்குச் சென்றுவிட்டு மகாலிங்கமும் வனஜாவும் திரும்பிக் கொண்டிருந்தனர். வழியில் நாகசாமியின் ஆராய்ச்சிக் கூடம். வனஜாவுக்குச் சபலம் தட்டியது. அதை அறிந்தவர் போல் மகாலிங்கம் உள்ளே சென்ருர். வனஜா பின் தொடர்ந்தாள்.

உட்புறமிருந்து பேச்சும் சிரிப்பும் அமளிப்பட்டன. தமையனைக் கண்டதும் நாகசாமி



" ஆபீஸ் நேரத்தில் அவரவர்கள் வேலையைத் தான் கவனிக்க வேண்டுமென்று புது மானேஜர் உத்தரவு."

எழுந்தார். அவரோடு பேசிக் கொண்டிருந்த வாலிபனும் எழுந்தான். மகாலிங்கத்தைப் பார்த்ததும், "நமஸ்காரம் ஸார்" என்று கரம் கூப்பினான். அவரே அவனது மாறு பட்ட நிலை கண்டு திகைத்துப் போனார் என்றால் வனஜாவைப் பற்றி என்ன சொல்ல?

எல்லாரும் அமர்ந்தார்கள். "என்னை நினைவிருக்கிறதா ஸார்? ஒரு மாதத்துக்கு முன் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தேனே!... எதற்காக வந்திருந்தேன்?..." என்று சொல்லிக் கொண்டே வனஜாவின் பக்கம் திரும்பினான். அவன் கண்களில் விளையாடிய குறும்பு அவள் உள்ளத்தில் குறுகுறுப்பை உண்டு பண்ணிற்று.

'இது என்ன?... மாய ஜாலமா, மந்திர வித்தையா!' என்ற வியப்பிலிருந்து மகாலிங்கம் விடுபடுவதற்குள் கைக்கடிகாரத்தைப் பார்த்த வாலிபன், "மன்னிக்க வேண்டும். நீங்கள் பேசிக் கொண்டே இருங்கள் இதோ சில நிமிடங்களில் நண்பன் ஒருவனிடம் போய் வந்துவிடுகிறேன்" என்று கிளம்பினான். போகிற போக்கில் ஒரு மோகனப் பார்வையினால் வனஜாவின் நெஞ்சத்தைச் கண்டி இழுத்துவிட்டுப் போனான்.

மகாலிங்கம் தெளிவு பெற்று நாகசாமியின் பக்கம் திரும்பினார். அவர் வெற்றிப் பெருமிதத்தோடு தமையனைப் பார்த்தார். "அண்ணா, பார்த்தனைப் பற்றிய கருத்து..." என்றார்.

"ஆச்சரியம் என்றால் இதுதான் ஆச்சரியம்! என்ன நடந்தது? எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது?"

"சுருக்கமாகச் சொல்கிறேன். பார்த்தனின் நண்பன் சிங்காரவேலன் அற்புதமான 'பிளாட்' ஒன்றைச் சொல்ல இவன் அதைக் கதையாக எழுத, அது 'வெண் முகில்' இதழில் பிரசுரமாயிற்று. கதையின் பெயர் 'மலரின் சிரிப்பு' அதன் முதல் வார்த்தை 'மலர் சிரித்தது' என்பது."

"ஓகோ! அப்படியா?" என்று தலை அசைத்தார் மகாலிங்கம்.

"அதற்கு ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்தன. அவற்றுள் 'இது திருட்டுக் கதை; அயல் நாட்டுப் பத்திரிகையில் வெளி வந்ததன் நகல்' என்றும் ஒரு கடிதம்வந்தது. 'வெண்முகில்' ஆசிரியர் எல்லாக் கடிதங்களையும் வெளியிட்டார். பாராட்டுக் கடிதங்களைப் படித்து மகிழ்ந்த பார்த்தனின் உள்ளம். 'இது திருட்டுக் கதை' என்று கூறிய கடிதத்தைப் படித்ததும் அதிர்ச்சி கொண்டது. நரம்புகள் பலவீனப்பட்டன; காய்ச்சல் கண்டது. தேறி எழுந்தபோது மூளையிலே சிறு மறையின் நெகிழ்ச்சி; பிரமை பிடித்த நிலை."

"அடடா! நேரில் சென்றோ கடிதம் எழுதியோ..."

"அதற்கு வாய்ப்பு? கடிதத்தைப் படித்த உடனே 'ஷாக்'; வீழ்ச்சி. தேறி எழுந்த பின் தெளிவற்ற ஒரு நிலை. அவனால் எதையும் செய்ய முடியவில்லை. பிறருக்கும் விவரம் தெரியாது.

"ஆராய்ச்சி மூலம் உண்மையைக் கண்டறிந்து பார்த்தனிடம் இது பற்றிப் பேசின போது அவன் எரிமலையானான். அப்போது அவன் உதிர்த்த சில சொற்களைத் தொகுத்து, இது சிங்கார வேலனால் வந்தது என உணர்ந்தேன்.

"'வெண்முகில்' ஆசிரியரிடம் சென்றேன். அவரும் உண்மை அறிந்து பச்சாதாபப்பட்டார். என்றாலும் பத்திரிகை தர்மத்தை ஒட்டி என் வேண்டுகோளை மறுத்தார். வாழ வேண்டிய பார்த்தனும் வனஜாவும் அவர் பிடிவாதத்தால் பாழ்படுவதாக நான் இடித்துக் கூறியதும் அவர் ஒருவாறு இணங்கினார்.

"பார்த்தனின் கதை ஒன்று அவர் வசம் இருந்தது. அதை அவனுடைய படத்துடன் அடுத்த இதழில் வெளியிட்டார். குறிப் பொன்றும் கொடுத்தார்.

"'தலைசிறந்த எழுத்தாளர் பார்த்தன் தம் நண்பர் கூறிய 'பிளாட்' ஒன்றைப் புதிய பிளாட் என்று நம்பிக் கதையாக எழுதினார். 'மலரின் சிரிப்பு' என்ற அக்கதை 'வெண் முகில்' இதழில் வெளியாகி அமோகமான பாராட்டுக்களைப் பெற்றது. 'அது திருட்டுக் கதை' என்று அன்பர் ஒருவரின் கடிதம் கூறிற்று. ஆனால் திரு பார்த்தன் இதற்குப் பொறுப்பல்ல என்று அறிந்தோம். அதன் சான்றாகப் பார்த்தனின் சிறந்த கதை ஒன்றை வாசகருக்கு நல் விருந்தாக அளிக்கிறோம். இனி அவருடைய அற்புதப் படைப்புக்களை வாசகர்கள் தொடர்ந்து எதிர்பார்க்கலாம்.'

"இதைப் படித்தபோது பார்த்தன் துள்ளிய துள்ளல்! அக்கணமே அவன் பிரமை தெளிந்தது. இதுதான் கதை."

"கதை போலத்தான் இருக்கிறது" என்று நெட்டுயிர்த்தார் மகாலிங்கம்.

வனஜாவின் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. "நீங்கள் கண் கண்ட தெய்வம் சித்தப்பா!" என்றாள்.

"சந்தேகம் என்ன?" என்றபடி உள்ளே வந்தான் பார்த்தன்.

வனஜாவின் முகமலரில் சிரிப்பு மலர்ந்தது.



செல்வி : மஞ்சுளா

செல்வன்: வெங்கட சுப்பா ராவ் M.SC.

ஹிந்துஸ்தான் தாம்ஸன் அஸோஸியேட்ஸ் லிமிடெடைச் சேர்ந்த எள். வெங்கடேச ராவ் அவர்களின் குமாரத்தி மஞ்சுளாவுக்கும், காங்கிரீட் அஸோஸியேஷனைச் சேர்ந்த என். சஞ்சீவி ராவ் அவர்களின் குமாரர் N. S. வெங்கட சுப்பா ராவ் (சர்சில்க்-ஸிர்பூர்) அவர்களுக்கும் சமீபத்தில் திருச்சானூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தது. வாழ்க மணமக்கள்

26. நெஞ்சின் சுடர்

ஹெல்த் இன்ஸ்பெக்டருக்கு வசந்தனைப் பற்றி எங்கேயாவது பேசச் சந்தர்ப்பமேற்பட்டால் போதும். ஒரே புகழ்மாலைகளாகத் தொடுத்துவிடுவார். சொல்லலங்காரங்களைக் குழைத்துக் கேட்பவர் மனத்தில் வசந்தனைப் பற்றிய புகழை ஒரு பளிங்கு நினைவாக பிரகாசிக்கச் செய்துவிடுவார்.

''இப்போது பாருங்களேன். நேற்றெல்லாம்தான் உடம்பு சரியில்லையே, இன்று ஆஸ்பத்திரிக்கு வராமல் போனால்தான் என்ன? நீங்களும்தான் இருக்கிறீர்கள். பார்த்துக் கொள்ள மாட்டீர்களா? அவருக்கு அப்படி வீட்டிலேயே இருந்துவிடப் பிடிக்காது. கடமையைச் செய்தாக வேண்டும். 'லீவை' அனுப்பும்படி சொல்லி அனுப்பியுள்ளார்...'' என்று அவர் சீலியாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது வசந்தன் வந்துவிடவே, அத்துடன் அந்தப் பேச்சு அறுந்தது. ஹெல்த் இன்ஸ்பெக்டர் எழுந்து சென்றுவிட்டார்.

''நீங்கள் இரண்டு தினங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு வந்திருக்கலாமே. நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?'' என்று ஏதேனும் பேச வேண்டுமே என்பதற்காகக் கேட்டு வைத்தாள் சீலியா.

வசந்தன் மெல்லச் சிரிக்க முயன்றான். ''அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா என்று உங்கள் வரவுக்காகக் காத்திருந்தாற் போலிருக்கும்!'' என்றான்.

''அப்படி நீங்கள் நினைக்குமளவுக்கு என் நினைவு அத்தனை பவித்திரமானதா, பாவனமானதா? நான் லட்சியங்களையே நாடும் பைத்தியக்காரியாக ஓடி வந்தேன். மற்றவர் மனத்தில் என்ன இருக்கும் என்று நினைத்துப் பார்த்திருந்தால் நான் இங்கு வந்திருக்கவே முடியாது'' என்றாள் சீலியா.


அவன் திகைத்து விட்டான். சீலியாவிடமிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவில்லை. காரணம் அவன் தப்புக் கணக்குப் போட்டு விட்டதுதான். உள்ளத்தில் கனலும் தீயுமாகத் தகித்துக் கொண்டிருக்கும் உத்வேகம் காலப்போக்கில் குறையும் என்று அவன் எதிர்பார்த்தது எத்தனை தப்பு! அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மகிழ்ச்சி காணும் வாய்ப்பும்தான் அவனுக்கு ஏது? அந்த நிராசையின் வேதனையோடு,

''நான் வேறு ஏதோ பேசினேன். உங்களுக்கு வேறு விதமாகப் பொருள் தொனித்து விட்டது, டாக்டர்!'' என்றான்.

அவள் வேதனையோடு அவனைப் பார்த்தாள். பெண்மையின் அமுத நிலை, பேதமையின் வண்ணம் தாங்கி நின்றது. படிப்பின் புத்திசாலித்தனமோ, தொழிலறிவின் சாமர்த்தியமோ, அழகின் அளவான பூரிப்போ ஏதுமின்றி, வெறும் பெண்ணாய் அவள் தோற்றமளித்தாள். கொட்டும் மழைக்கு ஏங்கும்போது ஒரு துளி பனித்துளி கிடைத்தாலும் அதையும் ஏற்று முகம் மலரும் சாந்தியின் லயம் குமுறியது. திரிந்து தேயும் நினைவா அவை? இப்போது வாழ்வு சுமையானாலும், அப்போது இனிப்பும், சொகுசும் மிகுந்திருந்த வாழ்வை மறக்க முடியுமா?

இனிக்கும் நினைவுகள்

கோமகள்



நெஞ்சின் ஏக்கம் இப்போது வசந்தனின் 'உங்கள் வரவிற்குக் காத்திருந்தாற் போலிருக்கும்' என்ற சொற்களால் உடைப்பெடுத்துக் கொண்டது. 'உங்கள் வரவுக்கு நான் காத்திருக்கவில்லை' என்றல்லவா கூற முயல்கிறான் என்றமோதி அவளைச் சூழ்ந்தது. இன்றையக் கோட்பாடுகளும், நெறிகளும் அவனை அப்படிப் பேச வைத்திருக்கும் என்பதை அவளால் ஒப்புக் கொள்ள முடிய

வில்லை. அவள் கோபுரமாகக் கட்டிக் காக்கும் உணர்வுகளை எல்லாம் அவன் அலட்சியப்படுத்தி விட்டாற் போன்ற தாபமே இயங்கி நின்றது. அவளது படபடப்பான பதிலுக்குக்கூட அவன் எதுவுமே கூறாது சாந்தமாக அமர்ந் திருந்தது வேறு அவளைக் குத்திக் கிளறி யது. கடுமையாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டி வந்து விட்டது. அவளுக்கே தான் இப்படிப் பேச முனைவதை எண்ணி ஆச்சரியமும் திகிலும் ஏற்பட்டன. ஆனாலும் தயக்கம் தடை விதிக்கவில்லை.

''எல்லாவற்றையும் என்னால் வருத் தத்தோடு உணர முடிகிறது. இதில் நான் மடிய வேண்டும் என்று உணர் கிறேன். நமக்குள் ஒரு காலத்தில் ஓர் அபூர்வ உறவு பூத்திருந்தது. அன் பென்னும் அந்தச் செழுமலர் சுக்கு நூறாகப் பிய்ந்து விழுந்து விட்டது. இந்த நினைவிலேயே, கடந்து போன இனிமையை எண்ணியே நான் வாழ்ந்து மடிய வேண்டிய விதியும் வாய்த்து விட்டது. நான் அவ்வாறு மடிந்த பிறகுதான் உங்கள் இரு கைகளையும் விரித்துத் 'திரும்பி வா' என்று கூப்பிடு வீர்களா? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவும் நிரந்தரமாகத் தங்கிவிட உங்கள் சூன்யமான இதயத்தில் இடம் தருவீர்களா? உங்கள் கூவலைக் கேட்க நான்தான் இருக்க மாட்டேன்...''

வசந்தன் பதறினான். ''உஷ்!... சீலியா, இது மருத்துவமனை இல்லையா? எல்லோரும் வரும் பொது இடத்தில் இத்தகைய பேச்சுக்கள் அவசியமா? நான் கூறிய எந்த வார்த்தையும் தவறான பொருள் கற்பிப்பதில்லை.. மனத்தில் இத்தனை கசப்பும் விரக்தி யும் கொண்டு விட்டால் எல்லாமே



தவருகத்தான் புரியும்.... யோசித்துப் பாருங்கள் சீலியா! மூலகாரணம் என்று எடுத்துக் கொண்டால் முதலில் துறந்தது யார்? நான், என்னையே சமாளிக்க உலகையே எதிர்த்து நிற்கத் தயாராக இருந்தேன். எத்தனையோ முறை உங்களை வேண்டி நின்றேன். தேடி நின்றேன். ஒன்றுக்கும் நீங்கள் சுடுகொடுக்கவில்லை. அதெல்லாம் பழைய கதை அல்லவா? அதைக் கிளறுவதால் வேண்டாத துன்பங்கள்தான் எஞ்சும். என் முடிவு நிராகரிக்கப் பட்டதால் நான் மற்றவர் முடிவுக்குப் பொம்மையாகிவிட்டேன். இல்லாவிட்டால் இன்று இந்த நிலை வந்திருக்காது...'' வசந்தன் மெல்லிய குரலில் அழுத்தமாகக் கூறியதைக் கேட்டுச் சீலியா திகைத்தாள்.

வசந்தனுக்கு மட்டுமே கேட்கக்கூடிய புரியக்கூடிய சன்னக் குரலில் உணர்ச்சிக் குமுறலோடு சீலியா மறுபடி பேச்சைத் தொடர்ந்தாள். ''மெய்தான். முதலில் துறந்தவள் நான். என்றாலும் முதலில் என் தோல்வியை அறிவிப்பதும், ஒப்புக் கொள்வதும் கூட நான்தான். எனக்குத் தோல்விதான் வசந்த். தோல்விதான்! மீண்டெழ வழி புரியாத் தோல்வி! இதை ஒப்புக் கொள்வதில் எனக்கு வெட்கமே இல்லை. இதற்கு மாற்றுத் தேடுவதில் எனக்குச் சளைப்பே இல்லை. இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில் எனக்குக் கிலேசமே இல்லை.'' அவள் முகத்தில் நெருப்புக் கங்குகள் பளபளப்பது போன்ற தகிப்பு.

''ஆனால்... சீலியா!'' என்று அருமையோடு அழைத்தான் அவன்.

தன் இதயத்தில் வெகு அருகில் நின்றுகொண்டு, தனக்காகவே காலம் காலமாய்க் காத்திருந்த ஓர் உள்ளத்தின் இனிய குரலாகப் புரிந்தது அவனுக்கு. இத்தனை நேரமும் எங்கோ லயித்திருந்த பிரமையில் மனம் துள்ளியது. இரவின் கரிய நிழல்களாக மனத்தில் கவிந்து கிடந்த அச்சங்களெல்லாம் ஒளி பாய்ந்த தன்மையால் ஒன்றுமில்லாமலாகி விட்டாற்போலிருந்தது. மேலே அவள் என்ன சொல்லப் போகிறாள்? இறக்கை முற்றாத குஞ்சுகளின் பரபரப்புப் போல அவன் தவித்தான்.

''உங்களைப் பார்த்தால் ஒரு புதிராகவே படுகிறது, எனக்கு! எதற்குமே சட்டென ஓர் எல்லைக்குப் போய் முடிவு காண முயன்று விடுகிறீர்கள்.''

''நான் ஒரு புதிர்தான். நான் நினைக்காமலே அழுகிறேன். நினைக்காமலே சிரிக்கிறேன். எனக்கே நான் விளங்காத புதிராக இருக்கும்போது...''

''உங்களாலேயே உங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால்...?''

''உங்கள், நீங்கள் போன்ற சம்பிரதாயப் பதப் பிரயோகங்களால் என்னை ஏன் சாடுகிறீர்கள்?''

வசந்தன் அதிர்ந்தான்.

''நாமிருவரும் பொதுப் பணி புரியும் டாக்டர்கள், இல்லையா? ஒருவரையொருவர் அப்படி மரியாதையாக அழைப்பதுதான் கௌரவமும், கண்ணியமும் மிகுந்த செயல். பிறர் காதுகளுக்கும் கர்ண கடூரமாக ஒலிக்காமல் சுநாதமாகக் கேட்கும்.''

''பிறரைப் பற்றிய பேச்செல்லாம் ஏன்? நமது சுகத்தை அப்படியே விட்டுக் கொடுக்க முடியுமா!''

''சீலியா! இதென்ன பேச்சு? இப்படி நினைப்பதே பாவமில்லையா? உங்கள் கல்விக்கும் தகுதிக்கும் பொருந்தாத வார்த்தைகள் இல்லையா, இவை? பண்பும் நாகரிகமும் அமையப்பெற்ற நீங்களே இப்படிப் பேசலாமா?''

''ஏன் பேசக் கூடாது? எனக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா? கடைசியில் நானும் ஒரு பெண்தானே? எனக்கு மட்டும் உள்ளமும், உணர்ச்சிகளும், ஒன்றையே போற்றும் பண்பும் ஒன்றையே தொழும் பக்தியும் இல்லையா? என்னை விட்டுக் கைநழுவி விட்டது என்பதால், அந்தப் பொருளின் மீது நான் வெறுப்பைக் கொட்ட வேண்டுமா? இனிமை சுரக்கப் பார்க்கக் கூடாதா? இதயம் மகிழப் பேசக் கூடாதா?'' அவள் நெஞ்சு விம்மித் தணிந்தது.

''தன்னால் முடிந்த எதையும் செய்யவும், எதையும் பேசவும் யாராலும் முடியும்தான். ஆனால் அதற்காக எல்லோரும் எதையும் செய்து விடுவதில்லையே! தனக்கு இனிமை பயப்பதானாலும்கூட மற்றவர்களின் மனப்போக்கை அனுசரித்து, சூழ்நிலைகளின் நோக்கத்தைப் புரிந்தே ஒருவன் செயல்படவேண்டும். அதுதான் நாகரிகம். அதுதான் பண்பாடு. அதுவேதான் சமூகக் கட்டுப்பாடும்கூட...''

தனக்காகப் போராடும் தீவிரம் மிகுந்துவிட்டதைப் போன்ற பரபரப்பும், நெஞ்சத் துடிப்பும் போட்டியிட்டன. அவளும் கண்கள் கலக்கத்தையும், முகம் சோகத்தையும் காட்டின. அவற்றை அவள் மறைத்துக் கொள்ள விரும்பினாள். உதடுகளைக் கடித்தவாறே எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

''நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள்?'' என்று விழுங்கி வெய்துயிர்த்தான் அவன்.

பழம்பெருமை படைத்திருந்தும் நவீனமாக இருப்போர் யார்?



அது நாங்கள். துணி உற்பத்தியே எங்கள் தொழில் — இந்த நூற்றாண்டு துவங்கிய முதலே இயங்கி வந்துள்ளவர்கள். அது நாங்கள்தான் லால்பாய் க்ருப். எங்கள் ஏழு நெசவாலைகளின் ஒருமித்த அனுபவம் 322 ஆண்டுகள். தரமான துணிகளை உங்களிடம் வந்தடையச் செய்வதுதான் எங்கள் பரம்பரைப் பணியாகத் திகழ்கிறது. மரபை மதிப்போர் நாங்கள், ஆனால் பழைய கர்நாடகம் அல்ல. அதற்கு நேர்மாறாக, எங்கள் ஆலைகள் அதி நவீனமான உத்திகளையும் எந்திர சாதனங்களையும் பயன்படுத்தி எல்லாவகைத் துணிகளையும் உற்பத்தி செய்து வருகின்றன. பாரம்பரைத் தர உயர்வோடு காலைய நாகரீகப் பண்பையும் இணைத்துத் தரும் துணிகள்.

எப்போது துணி வாங்கினாலும் அதன் மீது லால்பாய் டிரேடு மார்க் இருக்கிறதா பாருங்கள்.


லால்பாய் க்ருப்

- தி அரவிந்த் மில்ஸ் லிமிடெட்.
- தி ராய்ப்பூர் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
- தி அசோகா மில்ஸ் லிமிடெட்.
- தி ஸர்ஸ்பூர் மில்ஸ் லிமிடெட்.
- தி அருணா மில்ஸ் லிமிடெட்.
- தி அகமதாபாத் நியூ காட்டன் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
- தி நூதன் மில்ஸ் லிமிடெட்.

INTERPUB/LG 3 TM

காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச் சூழ்ந்துள்ளவர்களை மகிழவைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க் —
மென்மை மிக்க மகோன்னத டால்க்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

P-6986



எனது நண்பனின் குரலில் ஏமாற்றமும் கோபமும் பிரதிபலித்தன.

சொன்னார் : ''முன்பு ஏசுநாதர். பிறகு காந்தி. இப்போது மார்டின் லூதர் கிங். இதற்கு முன்னும் பின்னும் மற்றும் பலர் பலியாகிவிட்டார்கள். இம்சை — அறியாமை அரக்கனுக்குச் சாவே கிடையாதோ?''

கொஞ்சம் யோசித்துப் பதில் சொன்னேன் : ''இந்த அரக்கனுக்குச் சாவு இல்லைதான்.''

துடிப்புடன் நண்பன் கேட்டான் : ''ஏன் அப்படி ?''

''ஏனென்றால், இம்சை அரக்கனும் அழியா வரம் பெற்றிருக்கிறான்.''

''அப்படியானால் புனித ஆத்மாக்கள் இவ்வுலகில் பிறவி எடுப்பது வீண் என்று சொல்லுங்கள்.''

''மகாபுருஷர்களின் அவதாரம் வீண் என்று நான் சொன்னேனா? இல்லையே!''

''அப்படி வியக்தமாகச் சொல்லாவிட்டாலும் அறியாமை — கொடுமை அரக்கனுக்குச் சாவு கிடையாது என்றீர்கள். மகாபுருஷர்கள் பிறந்து என்ன பிரயோஜனம் ? கடைசியில் அரக்கன் தானே வெற்றியடைகிறான் ?''

எண்ணங்களின் சிக்கல்களிலிருந்து நண்பனை விடுவிக்க முயன்றேன். சொன்னேன். ''அப்பனே, வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒளி இருளைப் போக்குகிறது. இருளும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதனால் ஒளி தோற்று விட்டதா ? இல்லவே இல்லை.''

'காதம்பினி'யில் ராமானந்த தோஷி.
தமிழாக்கம்: லக்ஷ்மி தேவதாஸ் காந்தி

''நானா உங்களை ஏமாற்றுகிறேன்? நீங்களே உங்களை ஏமாற்றிக் கொள்கிறீர்கள், சீலியா !''

''இல்வாழ்க்கை என்னும் இனிய நிழலில் இடம் பெற்றுவிட்ட மமதையில் பேசுகிறீர்கள்.''

வசந்தன் சிரித்துக் கொண்டான்.

''நீங்கள் என்ன நினைத்து என்னிடம் இப்படியெல்லாம் பேச முனைகிறீர்கள் என்பது எனக்குவிளங்கவில்லை, சீலியா !''

''நானும்தான் கேட்கிறேன், நமக்குள் பூத்த உறவு பொய்க் கனவுதானா?''

வசந்தன் சீலியாவின் உணர்ச்சிக்கு மதிப்பு அளித்துக் கொஞ்ச நேரம் மௌனம் சாதித்தான்.

''முந்திய பந்தம் பெரிதாக விரியாமல் விடுபட்டுவிட்டாலும் நம்முள் இப்போது ஒரு புத்தம் புதிய உறவு இல்லையா ? நீங்கள் என் மனைவியின் சகோதரி....''

வசந்தனின் ஒவ்வொரு சொல்லும் சீலியாவைச் சாடுவது போலிருந்தது. 'என் மனைவி' என்று அவன் உரிமையாகச் சொல்லிக் கொண்ட சொற்களை எண்ணி ரகசியப் பதைப்பும், மீட்டுக் கொள்ள முடியாத பரிதவிப்பும், பறிகொடுத்துவிட்ட தவிப்புமாக அவள் திண்டாடினாள். என்ன உரிமை அவனுக்குக் குழலியிடம்? எத்தனை அன்பு தன் மனைவியிடம்? இதற்கெல்லாம் கொடுத்து வைத்திராத அவள் நெஞ்சம் பொறாமையில் கனன்றது. அன்று அவன் கண்மூடி வீசியெறிந்த இன்பத்தை இதோ கண்ணெதிரே இன்னொருத்தி அனுபவிக்கிறாள். அன்று தாரை வார்த்துத் தந்த அன்புக்குரியவனை இன்று மீட்டுக் கொண்டு வர முடியாதபடி தனையால் தனக்கு உரிமை

யாக்கிக் கொண்டு விட்டாள் வேறு ஒருத்தி. சீலியாவின் உள்ளே உஷ்ண நீரோட்டம் கொதித்து ஓடியது.

''நீங்கள் இப்படித்தான் என்னை ஏமாற்றி விடுகிறீர்கள். அதுவும் வெறும் வார்த்தைகளால்....'' சூடு என்னவோ சொற்களில் கொதிக்க வில்லை. அது வெறும் பிரலாபமாகவே வெளிப்பட்டது.

''என்னால் உங்களை ஏமாற்ற முடியுமா சீலியா? நான் தற்போது ஏற்பட்டிருக்கும் கண்ணியமான உறவை மதித்தே உங்களை என் மைத்துனி என்றேன்.....''

''மைத்துனி !'' அவள் கசப்போடு தூர நோக்கினாள். ''எல்லாம் மறந்து விட்டது உங்களுக்கு. உங்கள் மனைவியை வைத்து, அந்தக் கோணத்தில் தோன்றும் உறவு ஒன்றே பெரிதாக, கண்ணியமாகப் புலப்படுகிறது இன்று.... அன்று பேசிய மொழிகள், அந்தக் கூட்டுறவில் இனித்த கற்பனைகள், செயல்கள் வெறும் தோற்றங்கள்.... முயன்று முயன்று பேச முனைந்ததும், உரிமையோடு கைப் பற்றியதும், ஓடோடி வந்து சந்தித்ததும் அர்த்தமற்றவையாகக் கூடுமென்றால்.... இந்த உலகில் எதுதான் நிலையானது ? எதுதான் உயர்ந்தது ?''

''அதை.... அதையெல்லாம் அர்த்தமில்லாதவையாக ஆக்கியது யார் ? நினைத்துப் பாருங்கள். நீங்கள் வெட்டிய தொடர்பை ஒட்ட முயன்றேன். துண்டித்த பேச்சைத் தொடர முயன்றேன். நம்பிக்கையின் கடைசி முனை வரை காத்திருந்தேன். ஏமாந்த அதிர்ச்சியில் மனம் விட்டு, மானம் விட்டு நான் கேட்ட போது, 'நட்பாகவே முடிந்துவிட வேண்டிய நட்புத்தான்' என்று சாடினீர்கள். 'கரைந்து நீராகிவிட்ட நினைவுகள் கிளைத்துத் தழைப்பதில்லை' என்று முகத்திலடித்தாற் போல் கூறினீர்கள். அப்பப்பா ! அந்தக் கொடுமையை என்னால் தாங்கிக் கொள்ள முடிந்ததா ? என் உள்ளத்தையோ உணர்ச்சிகளையோ கொஞ்சமேனும் மதித்திருந்தால் அப்படியெல்லாம் பேசியிருக்க மாட்டீர்கள். 'நீ' என்று அழைக்க அப்புறம் எனக்கு என்ன உரிமை ? கொடுத்த உரிமைகளை யெல்லாம் பறித்துக் கொண்ட பின்.....? அப்புறம்.... அப்புறம்....'' ஆத்திரத்தில் சீறிய அவனுக்கு மேற்கொண்டு பேச வார்த்தைகள் கிடைக்க வில்லை.

''அப்புறம்.... அப்புறம் என் உயிருக்குயிரான அன்னை இறந்த போது என் தவிப்பில் பங்கு கொள்ளத் தோன்றியதா உங்களுக்கு ? ஆறுதலான மொழிகளுக்கே பஞ்சம் வந்து விட்டதே ! உங்கள் பிரேமை நிஜமானதாக இருந்திருந்தால், அதன் கரங்கள் என் கண்ணீரை ஒரு முறையாவது துடைத்திருக்க வேண்டாமா? உலகத்தின் ஆறுதல் எல்லாம் ஒன்று திரண்டு வந்திருந்தாலும் அதற்கு ஈடாகுமா ?'' எப்படியோ பேசி முடித்தான் வசந்தன்.

''வசந்த் ! தயவுசெய்து என்னைக் குத்திக் கிளறுகிறீர்கள். இன்று நான் நொந்த புறு. மனப் போரில் தோற்று விட்ட புண்பட்ட பறவை நான். நான் தியாகம் என்று நினைத்து விட்டுக் கொடுத்ததெல்லாம் பேதைமை என் பதை இப்போதுதான் உணர முடிகிறது. காலம் தாழ்ந்துவிடவில்லை என்று மனம் மோதுகிறது......''

''சீலியா ! இதென்ன பிதற்றல் ? உங்கள் கம்பீரமும், ஆற்றலும் இத்தனை பலமிழக்க அநுமதிக்கலாமா? என்னையே நீங்கள் மறுத்தொதுக்கியபோது இது பொய்யான நடிப்பாக இருக்கலாகாதா என்று நான் ஏங்கியிருக்கிறேன். இதோ மறுபடியும் அதே போன்ற ஒரு சந்தர்ப்பத்தைத் தருகிறீர்கள். உங்கள் பிறப்பின் மேன்மை என்ன? உயர்ந்த பண்பென்ன? உயரிய கல்வி என்ன? அதை எல்லாம் மறந்து இப்படிப் பேசலாமா? உங்கள் தகுதியையும், பெருமையையும் எந்தச் சந்தர்ப்பத்துக்கும் இத்தனை இலேசாக விட்டுக் கொடுக்கலாமா ?'' அவன் வார்த்தைகளில் குற்றச் சாட்டுக்குப் பதில் போதனையே நிறைந்திருந்தது.

ஆனால் சீலியா ஆடவில்லை, அதிரவில்லை. மெல்லிய புன்னகை மணக்க விற்றிருந்தாள்: ''என் மனத்தின் ஆசைகளை அவிழ்த்துக் காட்டக் கூடாது என்கிறீர்கள். சரமாகக் கோத்து உங்களிடம் சமர்ப்பிக்க வேண்டாம் என்கிறீர்கள். என் ஆற்றலைக் கொண்டு அவைகளை மறைத்துக் கொள்ளச் சொல்கிறீர்கள். உங்கள் எதிரில் நான் தியாகம் செய்த மேனியாக நிற்பது போல் பாவனை செய்யச் சொல் கிறீர்கள். இல்லையா ? இப்படி நான் என்னையே வெளியிடா திருந்தால், நானும் ஒரு காவியத் தலைவியின் சிறப்பை எய்தலாம். மனத்தின் உயர்ந்த பீடத்தில் கொலுவீற்றிருக்கலாம். எப்படி? சோக பாத்திரமாக ! கதைக்கும், காவியத்துக்கும் சிறப்பளிக்கும் சோகம் வாழ்க்கையில் இதமாக இல்லையே ! எனக்குரிய சுகங்களை



இன்னுமொரு புதுப் புடவை உடுத்திக் கொண்டிருக்கிருய் போலிருக்கிறதே. நானும் என் கணவரிடம் புதுப் புடவை ஒன்று வாங்கித் தரச் சொல்லி எவ்வளவு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!
பிரஸ்டிஜ் உபயோகிப்பதனுல மிச்சமாகும் வீட்டுச செலவுப் பணத்திலிருந்து நானே சுயமாக வாங்கியவைதான் இவை!
Prestige
Prestige
பிரஸ்டிஜ் எல்லா வகையான, சைவ, அசைவ உணவுகளையும் தயாரிக்க உதவுகிறது.
பிரஸ்டிஜ் பிரெஷர் குக்கரில் சமைப்பதினுல், உங்கள் எரி பொருள் செலவில் 80% மிச்சமாகிறது; ஊட்டமுள்ள உணவு கிடைக்கிறது; சமையல் நேரம் பாதியாகக் குறைகிறது மேலும், சீராகவும் தயாராகும் சமையல் ஆரோக்கியமான சமையல்!
பிரஸ்டிஜ் பிரெஷர் குக்கர் வாங்குங்கள்: குடும்பத்தின் அளவுக்கேற்றபடி தேர்ந்தெடுக்க 4 மாடல்கள் உள்ளன.
தயாரிப்பாளர்கள்:
டி.டி. (ப்ரைவேட்) லிமிடெட்
பெங்களூர்-16.
PREETT ப்ரீத் பாத்திரங்கள் உங்கள் சமையலறைப் பொக்கிஷம்



It's the cloth that matters!

Buying an umbrella? Make sure it works!
(and is colour-fast, strong, keeps its shape)
It's easy—make sure the cloth is Century's!

Century's umbrella cloth is used for all the best
umbrellas made in India because umbrella
manufacturers know that it is the cloth that matters.
Century's umbrella cloth starts right with superior
cotton and a special construction which makes
the fabric strong and not only water-proof but
shower-proof. The fabric is dyed with a special
process which makes it guaranteed colour-fast.
it is finally mercerized and schreiner
calenderized to give that smart silky finish.
At every stage of manufacture, the fabric
goes through rigid quality control tests.
The result is a cloth that really protects you
from rain or sun.

Umbrella shops everywhere stock umbrellas made with Century's cloth: buy one of these—they are the best.

Century's
UMBRELLA CLOTH
your guarantee
for quality

யும், சொகுசுகளேயும் இழந்தபின் அந்த வெறும் பதவியோ, மற்றவரின் வாய் உரைகளோ எனக்குத் தேவையா? நான் ஒரு செல்வந்தரின் மகளாக இருக்கலாம். சிறந்த கதாசிரியையாக இருக்கலாம். டாக்டராக இருக்கலாம். இவை எல்லாவற்றுக்கும் ஒரு தனித்துவத்தை நான் ஆண்டு கொண்டிருக்கலாம். எல்லாவற்றுக்கும் கீழே எனக்கென ஓர் இதயம் இருக்கிறது. அது எனக்காக மட்டும், என் இன்ப துன்ப உணர்வுகளுக்காக மட்டும் துடித்த வண்ணமே இருக்கிறது.... நான்தான் முன்பே கூறினேனே, நான் ஒரு பெண். என் கொதிப்பையும் கொந்தளிப்பையும் ஆற்றிக் கொள்ள எனக்கே உரிமையில்லையா? எதற்காக நான் என்னேயே மறைத்துக் கொண்டு, பதுக்கிக் கொண்டு வாழ முற்படவேண்டும்...?''

சீலியா அமைதியாக, தனக்கெனத் தானே வாதாடும் ஒரு சிறு குழந்தை போல் அவனேப் பார்த்தாள். சிறு பூவாய், சிற்றலேயாய் அலேந்தன அவள் கண்கள். முகவாயின் நளினம் மோன முறுவலில் பளீரிட்டது. வசந்தன் இதைக் கவனிக்கவில்லே. அவளது சர்ச்சைக்கு ஆதாரமான விடைகளே யோசித்துக் கொண்டிருந்தான்.

''உங்கள் பிரச்னேகள் மற்றவர்களேயும் சார்ந்ததாக இருந்தாலோ உங்கள் முடிவுகள் மற்றவர்களேயும் பாதிப்பதாக இருந்தாலோ நீங்கள் நிதானிக்க வேண்டும், பதுங்க வேண்டும். களங்கம் என்பது மையைப் போன்றது. தொட்டதும் ஒட்டிக் கொள்ளும். பிறர் பார்வைக்குத் தப்பி அதைப் போக்கிவிட முடியாது. உங்களுக்கே எட்டாதஅளவு நீங்கள் முயன்ருலும் முடியாத அளவு வேறு பாதையில் விலகிவிட்ட பிரச்னேயை ஊடுருவிப் பார்ப்பதில் பயன் வரப் போகிறதா?''

'' 'களங்கம்' என்ற கற்பனேக்காக உலகத்துக்கு ரொம்பவும் பயப்படுகிறீர்களா? உலகத்தோடு இப்படி மண்ணுக, மரமாகச் சுற்றிக்கொண்டே இருந்தால் நமக்காக ஒரு நிமிடமேனும் வாழ வேண்டாமா?''

''நமக்காக எத்தனேயோ நிமிடங்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறோம்.''

''குழுவி பேச்சுப் போட்டியில் பரிசு வாங்கியிருக்கிருள் என்பது இப்போது தான் ஞாபகம் வருகிறது. நீங்கள் முன்பு போல் இல்லே. ரொம்பவும் கற்றுக் கொண்டு விட்டீர்கள்....''

''நான் ஒரு பொறுப்புள்ள குடும்பத் தலேவன்......''

''அதிலும் தந்தையாகப் போகும் தலேவன்'' — சீலியாவின் குரலின் உணர்வு என்ன என்பது புரியவில்லே.

''உண்மைதானே?'' என்று ஒப்புக் கொண்டான் வசந்தன்.

சீலியாவின் நெஞ்சு கனத்தது. கடைக் கண்ணேரம் இலேசாக மை கரைந்தது. அவளால் எதுவுமே பேச இயலவில்லே. வெளியே சொல்லத் தெரியாத உணர்வு நெஞ்சில் தக்கையாக அடைத்துக் கொண்டது.

''வாழ்வென்னும் முடிச்சுக்கு ஒரே ஒரு அர்த்தம்தான் உண்டு. இரண்டு முடிச்சுக்கள் ஒன்று சேருவதில்லே.''

''இரண்டு முடிச்சுக்களேயும் பிரித்தால், அதன்பின் ஒரே முடிச்சு போடலாம்.''

''சீலியா! அதீதமான கனவு! பொய்க் கனவு!''

''பொற்கனவு பொய்க் கனவாகி விட்டது.'' — அவள் மிகவும் சமாளித்த குரலில் கூறிஞள். ''ஆனல் நம்மால் பிறப்பிக்கப்படும் கனவுகள் சந்தோஷங்களேயே பிறப்பிக்கின்றன.'' திடீரென திசை மாறி ஒலித்த அவள் குரலின் மிருதுத் தன்மை அவனுக்கு விந்தையூட்டியது. அவனுக்குப் பதிலளிக்கவும் தோன்றவில்லே. அவளே தொடர்ந்தாள்.

''நான் கூறுவதற்கெல்லாம் இப்படியே ஏதோ ஒரு மறுப்பைக் கூறி விடுவதில்தான் உங்களுக்குத் திருப்தி. அதுவே உங்கள் பிரியம். நான் இந்த நெடூர் கிராமத்துக்கு வர எத்தனே தூங்காத இரவுகள் வழி கூறின, தெரியுமா? எத்தனே உண்ணுத வேளேகள் பாதை காட்டின, தெரியுமா? உங்களிடமிருந்து குறைந்தபட்ச அளவிலாவது இரக்கத்தை எதிர்பார்த்துத்தான் இவ்விடம் வந்தேனென்ருல் அதுமிகையில்லே. இதை உங்களுக்கு உணர்த்தும் தருணத்தை நான் எதிர்நோக்கிக் காத்திருந்தேன். இன்று எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. அதில் வெற்றி கிட்டவில்லே என்ருல்.... பரவாயில்லே..... என்ன செய்வது? எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பெட்டகத்தைவிட்டுத் தூக்கி எறிந்துவிட்ட வைரத்தை முறைப்படிதான் பெற வேண்டும்.......''

''சீலியா! இதென்ன நம்பிக்கை உங்களுக்குள்?'' வசந்தன் இடைவெட்டிஞன். ஒவ்வொரு சொல்லாக மிகவும் நிதானித்து, வரிசைப்படுத்தி அவள் கூறியவற்றை அவன் உணர்ந்து கொண்டு உள்ளம் பதறிஞன். **(தொடரும்)**

ராமலிங்கத்தின் வீட்டில் அன்றிரவு ஒரு பத்துப் பேருக்குச் சாப்பாடு. ஆபீஸ் சகாக்கள் மூவரையும், சபா நண்பர்கள் ஏழெட்டுப் பேரையும் அழைத்திருந்தான். மத்தியானம் மதுரையிலிருந்து வந்த நண்பன் சிதம்பரத்தின் விஜயத்தை முன்னிட்டுத்தான் இந்த விருந்து ஏற்பாடு. கல்யாணத்துக்கு வாங்குவது போல் ஏராளமான சாமான்களை வாங்கிக் குவித்திருந்தான் ராமலிங்கம். அவன் மனைவி மீனு இரண்டு வயதுக் குழந்தையையும் வைத்துக் கொண்டு தன்னந் தனியாகச் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

சிதம்பரம் அப்போது அங்கே இல்லை. ஆறு ஆறரை மணிக்குத் திரும்பி விடுவதாகச் சொல்லி விட்டுச் சொந்தக் காரியங்களைக் கவனிக்க ஊருக்குள் போயிருந்தான். அவன் வருவதற்குள் தானும் வெளியே போய்த் தன் நண்பர்களுக்கெல்லாம் நினைவூட்டிவிட்டுத் திரும்பிவிட ராமலிங்கம் நினைத்தான். மணி ஐந்து அடித்ததும் மனைவியிடம் சொல்லி விட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

ராமலிங்கமும் சிதம்பரமும் பள்ளித் தோழர்கள். இன்று சிதம்பரம் மதுரையில் ஒர்க்ஷாப் வைத்துப் பெரிய செல்வந்தனாக இருக்கிறான். அடிக்கடி பிஸினஸ் விஷயமாய் கோவை வருவான். ஒருதடவை மதுரை சென்றிருந்த ராமலிங்கம் அங்கு நண்பன் சிதம்பரத்தின் வீட்டில் கிடைத்த ஆசார உபசாரத்தில் மயங்கிப் பரவசமாகிப் போனான். அவனோடு ஒப்பிடத் தான் தகுதியற்றவன் என்ற நினைப்பிலே மயங்கி இருந்தான் ராமலிங்கம்.

வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு சிதம்பரம் வந்து சேர மணி ஏழாகிவிட்டது. சிறிது நேரத்தில் பெட்ரோல் பங்க் உரிமையாளரும் மற்றும் இரண்டு நண்பர்களும் வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து மற்றவர்களும் சீக்கிரத்திலேயே வந்துவிட்டார்கள். பக்கத்து வீட்டில் இரவல் வாங்கிய ஜமக்காளங்களையும் தன் வீட்டு விரிப்புக்களையும் திண்ணையில் போட்டுத் தன் நண்பர்கள் ஒன்பது பேரையும் சிதம்பரத்தையும் உட்கார வைத்து ஒவ்வொருவரையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான் ராமலிங்கம்.

எட்டு மணிக்கு எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். விருந்தின் தடபுடல் எல்லோரையுமே பிரமிக்க வைத்துவிட்டது.



சிறப்புச் சிறுகதை

புன்னகை

கு. அழகிரிசாமி

'இந்த ஒரு நாள் விருந்தில் ராமலிங்கம் தன் சம்பளத்தில் பாதியைச் செலவழித்திருப்பான்' என்று நினைக்கும்படி இருந்தது.

பத்துமணிக்கெல்லாம் எல்லோரும் விடைபெற்றுப் போய் விட்டார்கள். சிதம்பரம் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு, பெட்ரோல் பங்க் உரிமையாளரைக் குறிப்பிட்டு, ''பெரிய பெரிய இடங்களிலெல்லாம் சிநேகம் பிடிச்சிருக்கீங்களே!'' என்றான்.

அதைக் கேட்டதும் ராமலிங்கத்துக்குச் சந்தனம் பூசியதுபோல் இருந்தது. உடம்பு சிலிர்த்தது; பிறகு பூரித்தது. ''எல்லோருமே எனக்கு ரொம்ப வேண்டிய சிநேகிதர்கள் — உங்களைப் போல!'' என்று வாய் கொள்ளாமல் சொன்னான்.



சிதம்பரம் புன்னகையோடு அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான். ராமலிங்கத்திற்கு அதிலும் ஒரு பூரிப்பு ஏற்பட்டது.

மறுநாளே சிதம்பரம் மதுரைக்குத் திரும்பி விட்டான்.

சரியாக இரண்டு மாதங்கள் கழித்தபிறகு ராமலிங்கத்துக்குக் குடும்பத்தோடு குற்றாலம் சீஸனுக்குப் போய் வரவேண்டும் என்று ஓர் ஆசை எழுந்தது. முன்பு சேமிப்பில் போட்டு வைத்திருந்த இரண்டு மாத போனஸ் பணமும் இருந்தது. தன் குடும்பத்துடன் மட்டுமின்றி, சிதம்பரத்தையும் குடும்பத்தோடு அழைத்துக் கொண்டு குற்றாலத்துக்குப் போக வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். உடனே அவனுக்குக் கடிதம் எழுதினான். இரண்டு குடும்பங்களும் ஒரு பத்து நாட்களாவது குற்றாலத்தில் தங்கியிருந்து சந்தோஷமாகப் பொழுது போக்கிவிட்டு வரவேண்டும் என்று அவன் எழுதியிருந்தான். அதற்கு உடனே பதிலும் வந்தது. ஆனால் தன் மனைவி மக்களை அழைத்துக் கொண்டு வருவது பற்றி நிச்சயமாக எதுவும் சொல்வதற்கில்லை என்றும், தான் மட்டும் எப்படியும் வர முயல்வதாகவும் சிதம்பரம் எழுதி யிருந்தான். இது ராமலிங்கத்துக்குக் கொஞ்சம் ஏமாற்றம் அளித்தாலும், நேரில் போய் வற்புறுத்தினால் சிதம்பரம் கட்டாயம் தன் குடும்பத்தோடு வருவான் என்று நம்பிக்கையும் ஆறுதலும் பெற்றான்.

குற்றாலத்தில் சீஸன் தொடங்கி விட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. உடனே அவன் காலதாமதம் செய்யாமல் ஆபீஸில் பதினைந்து நாட்கள் லீவு வாங்கினான். அவன் ஏற்கனவே கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பெட்ரோல் பங்க் உரிமையாளர் தம்முடைய கார் ஒன்றையும் அவனுக்குக் கொடுத்து உதவினார். தன் செலவில் பெட்ரோல் போட்டுக் கொள்வதுடன், டிரைவருக்கும் அன்றாடச் செலவுக்குப் பணம் கொடுத்து விடுவதாக அவன் சொன்ன போது, அவர், ''ஏகப்பட்ட செலவாகுமே! உங்களுக்குக் கட்டுப்படியாகுமா? பார்த்துக்கோங்க!'' என்று சொன்னார். தன்னால் சமாளித்துக் கொள்ள முடியும் என்று அவன் சொல்லவே, அவர் காரைக் கொடுத்து விட்டார்.

ராமலிங்கம் இந்தப் பிரயாணத்தை முன்விட்டு, மனைவிக்கு விலை உயர்ந்த ஒரு புடவையும், குழந்தைக்குச் சில நவீன உடைகளும் வாங்கினான். மற்றும் புதுப் பெட்டிகள், புதுப் படுக்கை, அலங்காரப் பொருள்கள், மிட்டாய் டின்கள், பிஸ்கட் டப்பாக்கள் போன்றவற்றையும் வாங்கிக் காரில் போட்டுக் கொண்டான். கணவன் செய்யும் செலவுகளைப் பார்த்து மீனுவுக்குப் பயமே உண்டாகிவிட்டது. தனக்கு அந்த உயர்ந்த விலைப் புடவையை வாங்கியிருக்க வேண்டிய இல்லை என்றுகூட ஒரு தடவை வாய் விட்டுச் சொன்னாள்.

''மீனு! நாம்ப சிதம்பரத்தோட வீட்டுக்குப் போகிறோம் என்கிறதை மறந்துட்டே! அப்பேர்ப்பட்ட லட்சாதிபதிகள் வீட்டிலே நாம்ப தரித்திரக்கோலத்திலே

போய் இறங்கினு, நமக்குத்தான் என்ன மதிப்பு? அவங்களுக்குத்தான் என்ன மதிப்பு? ஏதோ, ஆயுஸிலே ஒரு நாள் இப்படிச் செல வழிக்கிறோம். ஒரு நாள் ஒரு பொழுதாவது நல்லா உடுத்தி, நல்லாச் சாப்பிடாவிட்டால், அப்புறம் இந்த ஜன்மம் எடுத்து என்ன பிரயோஜனம், மீனு?'' என்று கேட்டான் ராமலிங்கம்.

''நம்ம சக்தியையும் பார்த்துக்கிடணு மில்லே'' என்றாள் மீனு. ஆனால் அப்புறம் எதுவும் பேசவில்லை.

மாலையில் மதுரை வந்து சேர்ந்தார்கள்.

சிதம்பரத்தின் வீட்டுக்கு முன்னால் கார் போய் நின்றது. எல்லோரும் இறங் கினார்கள். டிரைவரும் இறங்கி, சற்று எட்டப் போய் நின்று கொண்டான். ராம லிங்கம் தன்னந் தனியாகப் பெட்டி, படுக்கை, கூடை முதலியவற்றை இறக்கி, ஒவ்வொன்றாக வீட்டுக்குள்ளே கொண்டு போய் வைக்கத் தொடங்கியபோது, சிதம் பரத்தின் தாயாரும், மனைவியும், குழந்தை களும், சமையற்காரனும் வாசலில் வந்து நின்றார்கள்.

''வாருங்கோ !'' என்று சொல்லி வர வேற்றாள் தாயார்.

சாமான்களை யெல்லாம் எடுத்து உள்ளே கொண்டு போய் வைத்தபின், ''சிதம்பரம் எங்கே ?'' என்று கேட்டான் ராமலிங்கம். சிதம்பரத்தின் அப்பாவையும் எங்கே என்று கேட்டான்.

''அவன் ஒர்க்ஷாப்பிலிருந்து வீடு திரும்ப ஆறு மணியாகும். அவர் வழக்கம்போல் எட்டரை மணிக்குத்தான் வருவார் '' என்றாள் அந்த அம்மாள். பிறகு, ''உட்கா ருங்கோ'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள். அவளைத் தொடர்ந்து மருமகளும் போய் விட்டாள்; பேரன் பேத்திகளும் போய் விட்டார்கள். போனவர்கள் வெகு நேரம் வரையில் கூடத்துக்குத் திரும்பவில்லை. மீனுவுக்கு என்னவோ போல் இருந்தது. முன்பின் தெரியாத ஓர் ஊரில் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் பெட்டி படுக்கை களுடன் உட்கார்ந்திருப்பது போன்ற ஓர் உணர்ச்சியே அவளுக்கு ஏற்பட்டது. மெல்ல வும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவள் தவித்த போது, ராமலிங்கம் எழுந்து நின்றான். அதே நேரத்தில் சமையற்காரன் அவர்களுக்குக் காப்பி கொண்டு வந்து வைத் தான். அந்தக் காப்பியோடு உயிருமே வந்தது போலிருந்தது மீனுவுக்கு.

''குழந்தைகள் எங்கே?'' என்று சமையற் காரனைப் பார்த்து ராமலிங்கம் கேட்டான்.

''எல்லாம் மாடிக்குப் போயிட்டது.''

''கூப்பிடுங்களேன்.....''

அப்போது சிதம்பரத்தின் தாயாரும் அங்கே வந்து விட்டாள்.

ராமலிங்கம் அவளைப் பார்த்து, ''குழந் தைகள் கையிலே குடுங்க'' என்று சொல்லி, மிட்டாய், பிஸ்கட், பழக்கூடை முதலியவற் றைத் தனியாக எடுத்து வைத்தபோது, அந்த அம்மாள், ''இவ்வளவு வாங்கி வந் திருக்கீங்களே ! எதுக்கு?'' என்று சொல்லி விட்டு, மேலே பார்த்து, ''டேய், பிரகாஷ்! டே, ஜெயராஜ்! அடியே, மாலினி!'' என்று ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத் தாள். மூன்று பேரும் போட்டி போட்டுக் கொண்டு கீழே ஓடி வந்தார்கள்.

அப்புறம் மீனுவின் பிறந்த ஊரைப் பற்றியும், பெற்றோர்களைப் பற்றியும், உடன் பிறந்தவர்களைப் பற்றியும் அந்த அம்மாள் விசாரித்துக் கொண்டிருந்தபோது, பழனி யப்பபிள்ளை — சிதம்பரத்தின் தந்தை — வழக்கத்துக்கு மாறாக அப்போதே வீட்டுக்கு வந்து விட்டார். வந்ததும் வராததுமாக ராமலிங்கத்தை ஒரு வார்த்தையில் வர வேற்றுவிட்டு, ''வாசலிலே கார் நிற்குதே!'' என்றார், முகத்தில் பெருந் திகைப்போடு.

ராமலிங்கம் சிரித்துக் கொண்டே, ''ஆமாம்; நான்தான் கொண்டு வந்திருக்கி றேன். நம்ப சிநேகிதரோட கார்!'' என்றான்.

''ஓஹோ!''.... சிதம்பரம் இன்னும் வரல்லியா?'' என்று அவர் கேட்டார்.

''வரல்லியே !''

''வந்துடுவான். வர்ற நேரம்தான்!'' என்று சொல்லிவிட்டு அவர் உள்ளே போனார். அப்பொழுதுதான் அந்த அம்மாவும் மீனுவை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

சிறிது நேரத்தில் சிதம்பரம் வந்துவிட் டான். அவனும் ராமலிங்கத்தை வரவேற்ற மாத்திரத்தில் அந்தக் காரைப் பற்றித்தான் கேட்டான். பிறகு புதுப் பெட்டிகளையும், புதுப் படுக்கையையும் ஒரு முறை ஆராய்ந் தான். அவன் முகத்தில் உடனே சிரிப்பு மலர்ந்தது. உள்ளே போய்ச் சாவியை எடுத்துக் கொண்டு வந்து, கூடத்தை ஒட்டி யிருந்த ஓர் அறையைத் திறந்து அதில் பெட்டி படுக்கைகளை வைக்கச் சொல்லி ராமலிங்கத்தையும் குளிப்பதற்கு அழைத்துக் கொண்டு போனான்.

இரவு எட்டு மணிக்குச் சாப்பாடு முடிந்த பின் நண்பர்கள் கூடத்துக்கு வந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, சிதம் பரம், ''நாளை என்னாலே குத்தாலத்துக்குப் புறப்பட முடியாது! கொஞ்சம் வேலை இருக்கு. நாளைக் கழிச்சுப் போவோம்'' என்று சொல்லவே, ராமலிங்கமும், ''நானும் அப்படித்தான் நினைச்சேன். நாளை மீனாட்சியம்மனைத் தரிசனம் பண் ணிட்டு, அழகர் கோயிலுக்கும் திருப்பரங் குன்றத்துக்கும் மீனுவைக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு யோசனை. அவள் பார்த் ததே இல்லை '' என்றான்.

''அப்படியே செய்யுங்க. காரோட வந் திருக்கிறீங்க! போய்ப் பார்க்க எவ்வளவு நேரம் ஆகும்? அது சரிதான்!.... குத்தாலப் பிரயாணம் பண்ணி முடிய ஏகப்பட்ட செல வாயிடும் போல் இருக்கே! ஏது இப்படிப் பெரிய பிளானு போட்டுட்டீங்க ?''

''என்னமோ, வாழ்நாளிலே ஒரு தடவை யாவது கொஞ்சம் தாராளமாகச் செலவு பண்ணி இப்படி ஒரு பிரயாணம் போயிட்டு வரலாமென்னு வந்தேன்.''

''அப்படியா!'' என்று கேட்டு விட்டுப் புன்னகை செய்தான் சிதம்பரம்.

''என்னைப் போல் உள்ளவங்க கணக்குப் பார்த்தால், குற்றாலப் பிரயாணம் கட்டிவராத சங்கதிதான். ஏன், வயிறு நிறையச் சாப்பிடக்

மகிழ்ச்சிகரமாக

தீபாவளி

கொண்டாட

தரத்தில் சிறந்த

பின்னி

துணிகள்

பின்னி - துணி உலகிலே புகழ் பெற்ற பெயர்



பக்கிங்ஹாம் & கர்நாடிக் கம்பெனி லிமிடெட். பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட். பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ் ஸ்தாபனத்தின் கிளைகள்.

by-4373

கூட முடியாதுதான். அதனுலேதான் ஆகிற செலவு ஆகட்டும்னு துணிஞ்சிட்டேன்!''

சிதம்பரத்தின் புன்னகை நீங்கவேயில்லே.

2

மதுரையில் மறுநாள் இரவும் தங்கினுர்கள். பார்க்க வேண்டிய இடங்களையும் பார்த்து முடித்து விட்டார்கள். அன்றிரவு சிதம்பரத்தைப் பார்த்துப் பழனியப்ப பிள்ளை, ''ராமலிங்கத்துக்கு இப்போ என்ன சம்பளம்?'' என்று கேட்டார். அது அறைக்குள் உட்கார்ந்திருந்த ராமலிங்கத்துக்குத் தெளிவாகக் கேட்டது.

''இருநூற்றி நாற்பது!'' என்று சொன்ன சிதம்பரம், ''அவ்வளவுதான்!'' என்று ஒரு வார்த்தையைச் சேர்த்தும் சொன்னுன்.

''அந்தச் சம்பளத்திலே இப்படிச் செலவு பண்ணுறனே! அவன் பெஞ்சாதி உடுத்தியிருக்கிற சீலையைப் பார்த்தியோ? பெரிய செலவாளியாயிருப்பான் போலிருக்கே!''

''வாழ்நாளிலே ஒரு தடவையாவது தாராளமாச் செலவழிக்க சந்தோஷமா இருக்கணும்னு சொல்றர்!''

''அதுக்குக் காசைக் கரியாக்கிறதா..... என்ன சந்தோஷம் இதிலே?'' என்று ஏளனமாகச் சொன்னுர் பழனியப்பபிள்ளை.

அடுத்த நாள் காலையில் பயணமாகுமுன் மீணுவும் ராமலிங்கமும் சில நிமிஷ நேரம் தனியாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவன் கேட்டான்: ''இங்கே யாருமே கலகலப்பாய்ப் பேசமாட்டேங்கிறுங்களே! நாம்பதான் வலிய வலியப் போய்ப் பேச வேண்டியிருக்கு. பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தை பதில் சொல்லிவிட்டுக் கம்முன்னு இருக்கிறுங்க.''

''அவங்க சுபாவம். சில பேர் சில மாதிரி இருப்பாங்க.''

''இன்னும் ஒரு சங்கதி. நீங்க போன மாசம் இங்கே வந்திருந்தப்போ தடபுடலாச் சாப்பாடு போட்டதாச் சொன்னீங்க. இப்போ அப்படிப் போடாட்டாலும், நாம்ப தினமும் சாப்பிடுகிற மாதிரிகூட இல்லையே! ரொம்பச் சிக்கனக்காரங்களோ?''

''நானும் கவனிச்சேன். வீட்டிலே என்ன அசந்தர்ப்பமோ?....''


காலை ஆறரை மணிக்குக் கார் குற்றாலத்தை நோக்கிப் புறப்பட்டது. ராமலிங்கம் எவ்வளவோ வற்புறுத்தியும் சிதம்பரம் தன் குடும்பத்தை அழைத்து வரவில்லை. தனியாகவே வந்தான். முன்சீட்டில் டிரைவரின் அருகே உட்கார்ந்து கொண்டான்.

''மூணு நாளிலே திரும்பிடு. வேலை கெடக்கு'' என்று மகனுக்கு ஞாபகமூட்டினுர் பழனியப்பபிள்ளை.

ராமலிங்கம் திகைத்துப் போய்விட்டான். கார் ஊரைவிட்டு வெளியே வந்ததும், ''மூணு நாளிலே எப்படித் திரும்பிடுவீங்க? பத்து நாள் குத்தாலத்திலே இருக்கணும்னு எழுதியிருந்தேனே?'' என்று கேட்டான்.

''கொஞ்சம் அவசர வேலைகள் இருக்கு. இல்லேன்னு அப்பா அப்படிச் சொல்லமாட்டார். ஏன், நீங்க பத்து நாட்கள் இருந்து விட்டு வாருங்க! நான் மூணு நாளிலே திரும்பி வந்துடறேன்.''

நட்பை அறியாத காந்தி!



காந்தியடிகளை ஒரு மேல் நாட்டு நிருபர் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவர், ''நட்புக்குத் தாங்கள் அநுபவபூர்வமான ஓர் இலக்கணத்தைக் கூறுங்கள். அதை மக்களிடம் பரப்புகிறேன். அதனுல் ஏராளமான மக்கள் அதிக நண்பர்களைப் பெறும் இரகசியத்தை உணர்வார்கள்'' என்றுர்.

''நட்பைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே'' என்றுர் காந்தியடிகள்.

''அப்படியானுல் உங்களுக்கு நண்பர்களே கிடையாதா?'' என்று நிருபர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''எனக்கு விரோதிகள் யாருமே இல்லை. விரோதிகள் இருந்தால்தானே நட்பின் பெருமை விளங்கும்? நான் என் கண் முன் படும் யாரையும் எதையும் நேசிக்கிறேன். அது போலவே எல்லோரும் என்னை நேசிக்கிறுர்கள்'' என்றுர் காந்தியடிகள்.

தகவல்: வி. ஆதாரம்: வாழ்க்கை நிகழ்ச்சிகள்

ராமலிங்கம் மிகவும் கஷ்டப்பட்டான். மூன்று நாள் தங்கலுக்கா இத்தனை ஏற்பாடுகள்? இவ்வளவு தூரப் பிரயாணம்?

''ஒரு வாரமாவது இருப்போம்'' என்று சொல்லிப் பார்த்தான்.

''ஊஹூம். அப்பா சொல்லி விட்டால் அதுக்கு அப்பீலே கிடையாது. நீங்க இருந்துட்டு வாருங்கன்னு சொல்றேனே!''

''நீங்க திரும்பிட்டா நாங்களும் திரும்பிட வேண்டியதுதான்'' என்று ராமலிங்கம் சொன்னதற்கு அவன் எதுவும் சொல்லவில்லை.

கார் விருதுநகரை அடைந்தது. ஒரு ஹோட்டலில் இறங்கிச் சாப்பிட்டார்கள். ''நான்தான் குடுப்பேன். நீங்க என் விருந்தினர்'' என்று சொல்லி ஐந்து ரூபாய் பில்லையும் ராமலிங்கமே கொடுத்தான். வெளியே வந்து பீடாக்களை வாங்கி விநியோகித்தான். நண்பனுக்கு ஒரு சிகரெட் பாக்கெட்டும் வாங்கிக் கொடுத்தான்.

மத்தியானம் ஸ்ரீவில்லிபுத்தூரில் சாப்பிடுவதாக இருந்தது. ஆனால் சிதம்பரமோ ராஜபாளையத்துக்குப் போய்விடலாம் என்றும் அங்கேதான் நல்ல சாப்பாடு கிடைக்கும் என்றுசொல்லவே, நேரே அங்கே போனுர்கள். அங்கும் சிதம்பரமே விருந்தினனுக இருந்தான்.

மாலையில் தென்காசிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். காப்பிக்கு அங்கே நிற்காமல் நேரே குற்றாலத்தை நோக்கி வண்டியை விட்டார்கள். சிற்றுற்றின் ஆனைப் பாலத்தைத்

தாண்டிக் கார் போய்க் கொண்டிருந்தது: அப்போது மணி ஐந்து இருக்கும். மேல கரத்தை நெருங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென்று காரின் வேகம் குறையத் தொடங்கியது. அப்போது டிரைவரின் முகத்தில் ஒரு திகைப்புக் குறியும் தென்பட்டது. எல்லோருமே திகைத்து நோக்கினார்கள். அவன் நிறுத்தினானோ; தானாக நின்றதோ, வண்டி மேற்கொண்டு நகரவில்லை.

டிரைவர் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் பரிசோதனை செய்துவிட்டு, ''காயில் கெட்டுப் போச்சுங்க'' என்றான்.

ராமலிங்கம் அதிர்ச்சிக்குள்ளாகி, ''பெரிய ரிப்பேரா ?'' என்று புரியாமல் கேட்டான்.

''வேறே 'காயில்' போட்டால் போதுங்க'' என்றான் டிரைவர்.

''அது போடல்லேன்னா வண்டி போகாதோ?''

அவன் அறியாமையைக் கடிந்து கொள்பவனைப் போல், ''போகாது'' என்று கொஞ்சம் கோபத்துடனேயே சொன்னான் டிரைவர்.

இந்தச் சமயத்தில் சிதம்பரம் சிரிக்கத் தொடங்கி விட்டான். அதைப் பார்த்து ராமலிங்கம் மிகவும் கஷ்டப்பட்டான்.

''இப்ப என்ன பண்ணறது?'' என்று கேட்டான் ராமலிங்கம் டிரைவரை நோக்கி.

''புதுக் காயில் வாங்கிப் போடணும். இருபது ரூபாய் ஆகும்.''

''தென்காசியில் கிடைக்குமோ ?''

''போய்த்தான் கேட்கணும்.''

''சரி, அப்படின்னா போய் வாங்கிட்டு வந்துடுங்க'' என்று சொல்லி அவன் கையில் முப்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தான். அவனும் கால்நடையாகத் தென்காசியை நோக்கிச் சென்றான்.

''நீங்க சொன்னது போல் ரயிலிலேயே வந்திருக்கலாம் போலே இருக்கு!''

''அதுதான் சரி.... அதிலேயும் இது இன்னொருத்தரோட காருன்னும் சொல்றீங்க ! கோளாறு பெரிசா இருந்தால் நாம்பதானே சுமக்கணும்!''

''நல்ல வேளை. முப்பதோட போச்சு. முந்நூறு, நானூறுன்னு எங்கே போறது?''

இப்படிச் சொன்னானே ஒழிய, அவனுக்கு உள்ளூறக் கவலை பெரிதாகிக் கொண்டுதான் வந்தது. மீனாவும் கலங்கிப் போய்விட்டாள். இருவரும் செயலற்று நின்ற இந்தச் சமயத்தில் குழந்தை அழுதது. அவனைப் பக்கத்தில் உள்ள ஒரு கடைக்குத் தூக்கிக் கொண்டு போனான் ராமலிங்கம். இருபது காசுக்கு மிட்டாய் வாங்கிக் கொண்டு, ஒரு ரூபாய் நோட்டைக் கடைக்காரனிடம் நீட்டினான். அவனிடம் சில்லறை இல்லை. குழந்தை அதற்குள் ஒரு மிட்டாயை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு விட்டது. எனவே, சில்லறைக்காகச் சிதம்பரத்திடம் வந்து நின்றான் ராமலிங்கம். அவன் அப்பொழுதும் சிரித்தான்; ஆனால் புன்சிரிப்புத்தான்.

''ஒரு ரூபாய்க்கா கடையில் சில்லறை இல்லை ?'' என்று கேலியாகச் சொல்லிவிட்டு ராமலிங்கத்திடமிருந்து நோட்டை வாங்கிக் கொண்டு பல்வேறு காசுகளாகச் சில்லறையைக் கொடுத்து அனுப்பினான்.

டிரைவர் ஆறரை மணிக்கு ஒரு மெக்கானிக்கையும் அழைத்துக் கொண்டு காயிலோடு வந்து சேர்ந்தான். சீக்கிரத்திலேயே காரைக் கிளப்புவது சாத்தியமாகிவிட்டது. மெக்கானிக் ஐந்து ரூபாயை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

குற்றாலம் போய்ச் சேருமுன்பே ராமலிங்கத்துக்குக் குற்றாலப் பிரயாணம் முக்கால் வாசி சலித்துவிட்டது. நாள் ஒன்றுக்கு இருபது ரூபாய் வாடகையில் ஓர் அறையை எடுத்தார்கள். அருவியில் குளித்து விட்டுச் சாப்பிட்டார்கள். விளக்கு எரிந்து கொண்டிருக்கும்போதே களைப்பின் மிகுதியால் மீனாவும் நிர்மலாவும் தூங்கிவிட்டார்கள். சிதம்பரம் ஒரு பக்கத்தில் குறட்டைவிட்டுத் தூங்கினான். தூக்கம் வராமல் உட்கார்ந்து கொண்டிருந்தவன் ராமலிங்கம் ஒருவன் தான். அவனும் சும்மா உட்கார்ந்திராமல் கையில் உள்ள பணத்தையெல்லாம் முன்னால் போட்டுக் கொண்டு எண்ணினான். பிறகு, இதுவரையில் செய்தசெலவுகளையும் இனிமேல் செய்ய வேண்டிய செலவுகளையும் ஒரு காகிதத்தில் எழுதிக் கூட்டிப் பார்த்தான்.

வாடகை மட்டுமே ஒரு நாளைக்கு இருபது ரூபாய். மற்றச் செலவுகளுக்கும் அன்றாடம் அவ்வளவு ரூபாய் வேண்டும். இந்த விகிதத்தில் செலவழித்தால் நான்கு நாட்களில் கையில் உள்ளதெல்லாம் காலியாகி விடும். சிதம்பரமோ மூன்று நாட்களில் திரும்பிவிடுவான். கூட ஒரு வாரம் தங்கினால், பற்றாக் குறைக்கு அவன் கையை எதிர்பார்க்கலாம். இந்தப் பிரயாணத்துக்குத் திட்டம் போட்டதே, அவனுடைய நியாயமான பங்கையும் எதிர்பார்த்துத்தான். அவன் மூன்று நாட்களில் கிளம்பிவிட்டால் மீதிநாட்களுக்குப்பணம் கொடுத்து விட்டுப் போவானா? கொடுக்காவிட்டால் அவனை எப்படிக் கேட்பது?

ராமலிங்கம் நீள யோசித்தான். நண்பன் திரும்பும் போது கூடவே திரும்பி விடுவது தான் மரியாதை என்று முடிவுகட்டி விட்டுப் படுத்தான்.

அவன் போட்ட கணக்கு சரியாகவே இருந்தது. நான்காம் நாள் ஜாகை வாடகையைக் கொடுத்துவிட்டுக் குற்றாலத்திலிருந்து கிளம்பும்போது அவன் கையில் மிஞ்சியிருந்தது பதினைந்து ரூபாய்தான்.

''திடீர்னு பிளானை மாத்திப்பிட்டு என் கூடக் கிளம்பிட்டீங்களே !'' என்று சிதம்பரம் புன்னகை பூத்தபோது, ''நீங்க இல்லேன்னு சுவாரசியப்படாது'' என்று ராமலிங்கமும் புன்னகை பூத்தான்.

சூரியோதயத்துக்கு முன்பே குற்றாலத்தை விட்டுப் புறப்பட்ட கார், மத்தியானத்துக்குள் மதுரைக்கு வந்துவிட்டது. நடுவில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் காப்பி சாப்பிட அரை மணி நேரம் நிறுத்தியதுதான். மதுரைக்கு வந்து சேரும் போது ராமலிங்கத்தின் கையில் பத்து ரூபாய்தான் இருந்தது. மத்தியானம் சாப்பிட்டதுமே கோயமுத்தூருக்குப் பயணமாகிவிட அவன் தீர்மானித்தான். 'அதுதான் நல்லது' என்று அவன் மனைவியும் ஆமோதித்தாள்.

கோயமுத்தூருக்குச் செல்லக் காரில் ஏறப் போகும் தருணம். அப்போது ராமலிங்கத்

ஸிரிடோன்காஃபி

நீங்கள் காஃபியைத்தான்
விரும்புகிறீர்கள்-

இதை அறிந்தே இப்பொழுது
ஸிரிடோன் காஃபி மணத்திலும்
தயாரிக்கிறோம்!

ஒரு கோப்பை பாலில் ஸிரிடோன்
காஃபியை கலந்து அதன் சுவையான
காஃபி மணம் உங்களை எப்படி
கவருகிறது என்று பாருங்கள்



ஸிரிடோன்
கொக்கோ
மணத்திலும்
கிடைக்கிறது

ajanta, siris/502

துக்கு ஒரு இளைப்பும், ஒரு யோசனையும், அதைத் தொடர்ந்து ஒரு தயக்கமும், கடைசியில் ஒரு துணிவும் ஏற்பட்டன. 'வேறு வழியில்லே' என்று முடிவு செய்து கொண்டு சிதம்பரத்தை ஒரு நிமிஷம் தனியே அழைத்தான். இருவரும் வெளியே தெருவில் இறங்கி, ஒரு பக்கம் ஒதுங்கிப் போய் நின்றார்கள்.

''சிதம்பரம், ஒரு சின்ன உதவி : இப்போ என் கையிலே பத்து ரூபாய்தான் இருக்கு. கோயமுத்தூர் போய்ச் சேருகிறதற்குள்ளே ஒரு தடவை பெட்ரோல் போட வேண்டியிருக்கும்னு நினைக்கிறேன். அதோட கார் பழையபடியும் ஏதாவது தகராறு பண்ணினால் இருபது முப்பதுன்னு செலவாகலாம். எனக்கு இப்போ நீங்கதான் குடுத்து உதவணும். ஒரு அம்பது ரூபா குடுத்தீங்கன்னு போதும். கோயமுத்தூர் போனதும் அனுப்பிடறேன்'' என்றான் ராமலிங்கம்.

''சரி'' என்று சிதம்பரம் வீட்டுக்குள்ளே போய், அடுத்த நிமிஷமே திரும்பி வந்தான்; ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களையும் ராமலிங்கத்தின் கையில் கொடுத்தான். அவன் சந்தோஷமாகப் பணத்தை வாங்கிக் கொண்டு எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டதும் காரும் புறப்பட்டு விட்டது.

3

கோயமுத்தூருக்குத் திரும்பிய ராமலிங்கம் தனது லீவில் மீதியிருந்த நாட்களை ரத்துச் செய்துவிட்டு மறுநாளே ஆபீசுக்குப் போய் விட்டான். சிதம்பரத்துக்கு ஐம்பது ரூபாயை உடனே அனுப்பி விடுவதா, இல்லே, முதல் தேதி சம்பளம் வாங்கி அனுப்பலாமா என்று யோசிக்க வேண்டியதாகிவிட்டது. அன்றே ஒரு முடிவுக்கு வர முடியவில்லே. மறு நாளும் யோசித்தான். அன்றும் அதே கதைதான். யோசனையிலேயே மூன்று நாட்கள் ஓடி விட்டன. அதனால், வந்து சேர்ந்ததாகச் சிதம்பரத்துக்குக் கடிதம் எழுதக்கூடத் தோன்றவில்லே.

நான்காம் நாள் மீனுவிடமே ராமலிங்கம் யோசனை கேட்டான்.

அவள் எடுத்த எடுப்பிலேயே சொன்னாள்: ''என்னைக் கேட்டால், உடனே பணத்தை அனுப்பிச்சிப் போடணும். நாம்ப வேணும்னு பட்டினி கிடப்போம். பணத்தை அனுப்ப மாட்டோமோன்னு அவங்க சந்தேகப்படறாப்லே வச்சிக்கிடக் கூடாது.''

''நீ சொல்றது வாஸ்தவம்தான் மீனு. ஆனால் இப்போ கையிலே அவ்வளவு இல்லே யென்னு பார்க்கிறேன். பாங்கிலே போட்டிருந்ததையும் எடுத்துச் செலவு பண்ணிவிட்டோம்.''

''என்ன செய்வீங்களோ, எனக்குத் தெரியாது. அவங்களை நினைச்சாலே எனக்குப் பிடிக்கல்லே. ஆயுசிலே ஒரு நாள் நாம்ப சுகமா சந்தோஷமா இருக்கிறதைக்கூட அவங்களாலே பொறுக்க முடியவில்லே.''

''நீ யாரைச் சொல்கிறே ?''

''யாரைச் சொல்கிறேன் ? சொல்கிறவங்களைத்தான் சொல்றேன் ! அவங்க பார்வையும் ! அவங்க சிரிப்பும் ! என்னமோ வைத்தியக்காரங்களைப் பார்த்துச் சிரிக்கிறமாதிரியில்லே ஒவ்வொருத்தரும் சிரிக்கிறாங்க? அவங்க பிள்ளைகளுக்குப் பழமும், மிட்டாயும், பிஸ்கோத்தும் வாங்கிக் கொடுக்கிறதைப் பார்த்தே சிரிக்கிறாங்க, தெரியுமா ....?''

அவன் பெருமூச்சு விட்டான். அவன் ஏதோ பேச வாய் எடுத்தான். அதற்குள் அவள் தொடர்ந்து பேசினாள்:

''என் புடவையைப் பார்த்து எத்தனை கேள்வி ? 'உனக்கு இந்தப் புடவையா ? உங்களுக்குக் குத்தாலப் பயணமா? உங்களுக்கு ஸ்பெஷல் காரா?' — அந்த மாதிரி நினைக்கச் சிரிக்கிற சிரிப்பாக்கும் அது! உங்க சிநேகிதரும் வழியெல்லாம் சிரிச்சுக்கிட்டு வந்தாரே, உங்க மணிபர்ஸையும் ஆழம் பார்த்துக்கிட்டு! பார்க்கலேயா நீங்க?''

மனைவி பேசுவதை அவனால் கேட்டுக் கொண்டு நிற்க முடியவில்லே. கோபம்கூட வந்துவிட்டது. ''நீ அர்த்தமில்லாமல் படபடக்கிறே, மீனு! அவங்களை உனக்குத் தெரியாது. சும்மா இடு. நான் எவ்வளவு காலம் உசுருக்கு உசுராப் பழகின சிநேகிதன் !.... போ, போ !'' என்று மிகவும் கடிந்து கொண்டான்.

அப்பொழுதே, அந்த இடத்திலேயே அவன் சிதம்பரத்துக்குக் கடிதம் எழுத உட்கார்ந்துவிட்டான். தற்சமயம் கையில் பணம் கொஞ்சம் தட்டுப்பாடாக இருக்கிறது என்றும், இன்னும் ஆறே நாட்களில், — அதாவது முதல் தேதியன்று சம்பளம் வாங்கியதும் அனுப்பி விடுவதாகவும் எழுதினான். கடிதத்தைக் கையோடு ! தபாலில் சேர்த்துவிட்டுத்தான் ஆபீசுக்குப் போனான்.

மூன்று நாட்களாகக் குழம்பிக் கொண்டிருந்த அவனுக்கு அன்றுதான் மனம் நிம்மதி அடைந்தது.

சாயங்காலமானதும் வெளியே எங்கும் போகாமல் நேரே வீட்டுக்கு வந்தான். அவன் வந்ததுமே ஒரு தபால் கார்டைக் கொண்டுவந்து நீட்டினாள் மீனு. ''மத்தியானம் வந்தது'' என்றும் சொன்னாள். ''ஒரு தடவைக்கு இரண்டு தடவை வாசியுங்க!'' என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.


கடிதத்தில் ஒரு சில வரிகளுக்குமேல் இல்லே. ராமலிங்கம் வாசித்தான் :

''அன்புள்ள நண்பர் ராமலிங்கத்துக்கு,

வணக்கம். சௌக்கியமாகப் போய்ச் சேர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நாங்கள் வீட்டோடே ஆடிச் சுக்கிர வாரத்துக்குத் திருச்செந்தூருக்குப் போகிறோம். அதை முன்னிட்டு நிறையச் செலவுகள் இருப்பதால் இந்தக் கடிதத்தை அவசரமாக எழுதுகிறேன். தாங்கள் என்னிடம் வாங்கிச் சென்ற ஐம்பது ரூபாயை இக்கடிதம் கண்டதும் உடனடியாக அனுப்பி வைத்தால் பெரிய உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

தங்கள் அன்பு மறவாத
ப. சிதம்பரம்.''


குடும்பப் பிரச்னை



அறுபதுக்கு அப்பால்!

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற நமசிவாயத்துக்கு அன்று விடை கொடுத்து அனுப்பி வைக்கும் பாராட்டு விழா.

கடந்த முப்பத்தி எட்டு வருடங்களாகத் தொடர்ந்து பார்த்து வந்த வேலைக்கு முதல் நாள் மாலையுடன் முற்றுப்புள்ளி வைத்தாயிற்று. வாலிபராக அந்தத் துடிப்போடு அன்று காரியாலயத்துடன் உறவு பூண்டு உள்ளே புகுந்தவர், அங்கேயே நடுத்தர வயதைக் கழித்துவிட்டு, இன்று அறுபது வயது முதியவராக அமைதியுடன் வெளியே வந்து விட்டார். நமசிவாயம் (ரிட்டயர்ட்)




என்ற அடைமொழியும், பென்ஷன்தார் என்ற பெருமையும் அவரைத் தேடி வருகின்றன.

விழா ஆரம்பமாகி விட்டது. யார் யாரோ காரியாலய ஊழியர்கள் பேசுகிறார்கள்.

''திருவாளர் நமசிவாயம் பெரிய குடும்பஸ்தர். நாடு சுதந்திரம் அடைந்து பல துறைகளில் முன்னேற்ற மடைய முனைந்த போது அத்துடன் இவர் குடும்பமும் முன்னேற்றமடைந்து பெரிய சாம்ராஜ்யமாகி விட்டது. இந்தக் காலே அரைக்கால் பென்ஷனில் ஒன்பது குழந்தைகளைப் பராமரிப்பது சிரமம்தான். அதற்கான தெம்பையும் மனோதைரியத்தையும் ஆண்டவன் நண்பர் நமசிவாயத்துக்கு அளிப்பாராக!'' என்று ஓர் அபசுரக் குடுக்கை இடம் பொருள் ஏவல் தெரியாமல் பேசி வைத்தார்.

''இரண்டே சத் புத்திரர்களைப் பெற்றெடுத்த ஓய்வு பெற்ற ஆசாமி ஒருவரை எனக்கு நன்கு தெரியும். திருநெல்வேலியில் ஒரு பிள்ளையும், தில்லியில் ஒரு பிள்ளையும் வேலை பார்த்தார்கள். திருநெல்வேலிப் பிள்ளை திடீரென்று ஒரு நாள் 'அப்பா!



நீங்களும் அம்மாவும் தில்லியிலே போய் இருப்பதே தேவலை. இங்கே சரோஜாவுக்கு உடம்பே சரியாக இல்லை' என்று ஆரம்பித்து அவர்களை ரயிலேற்றி விட்டுத்தான் நிம்மதியாகத் தூங்குவான். இரண்டாவது மாசம் தில்லிப் பிள்ளையாண்டான், 'என்னப்பா! ஹாய்யாக தாமிரபரணியில் ஸ்நானம் செய்துண்டு அங்கே இல்லாமல் இந்தப் பாழாய்ப் போன தில்லியிலே வந்து நீங்களும் அம்மாவும் அவஸ்தைப்படுகிறீர்கள். எனக்குத்தான் தலையெழுத்து வேலை பார்க்க! இங்கே சாந்தாவுக்கு நிறைய ரெஸ்ட் வேணும்னு டாக்டரம்மா சொல்றா' என்று சொல்லி பதிலுக்குக் காத்திராமல் ரயில் டிக்கெட் ரிசர்வேஷன் கவுண்டரிலே போய்த்தான் நிற்பான். இப்படியாகத்தானே இரண்டே பிள்ளைகளுக்குப் பெற்றோர்களாக இருக்கும் பாக்கியம் பெற்ற அந்த அப்பாவும் அம்மாவும் வருடத்தில் ஆறு மாதங்களைப் பிள்ளைகளிடமும் ஆறு மாதங்களைத் தில்லி — சென்னை கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸிலும் கழித்தார்கள். இந்த நிலை நிச்சயமாக நம் அன்பர் நமசிவாயத்துக்கு வராது. ஒன்பது நபர்களில் ஒரு நப

ருக்காவது கருணை உள்ளம் இருக்காதா?'' என்று கேட்டு, சிரிப்பொலியையும் கைதட்டலையும் பெற்றுக் கொண்டு அமர்ந்தார் மற்றோர் சக ஊழியர்.



''மதிப்புக்குரிய நமசிவாயம் நம் இலாகாவில் புகுந்தபோது மகா கோபக்காரராம். முப்பத்திஎட்டு வருட சர்வீஸில் அவர் எதை மீதம் செய்து வைத்தாரோ நமக்குத் தெரியாது. ஆனால் அந்த ஆரம்பகால கோபத்தை அப்படியே கடைசிவரை சேமித்து வைத்திருக்கிறார். இப்போதாவது அவர் அதைக் கைவிட்டுவிட வேண்டும். ஓய்வு பெற்றவரின் கோபத்துக்கு வீட்டுக் குழந்தைகளிடம்கூட மதிப்பு இருக்காது'' என்று ஓங்கி யடித்துப் பேசினார் மூன்றாவது ஆசாமி.

''நாம் இன்று, நம்முடைய அபிமான, அடையாள அன்பளிப்பாக திரு நமசிவாயம் அவர்களுக்குக் கைத்தடி வழங்கவில்லை. அதற்குப் பதிலாக கையடக்கமான திருக்குறளையும் பகவத் கீதையையும் அளிக்கின்றோம். மனத்தில் குழப்பம் தோன்றும்போதெல்லாம் குறளையும் கிலேசம் உண்டாகும்போதெல்லாம் கீதையையும் அவர் தேடிப் போவாரானால் அவர் ஒரு சாந்த சிவமாகவே மாறிவிடுவார்'' என்று பொடி வைத்துப் பேசினார் அடுத்துப் பேசியவர்.

பாராட்டு விழா தொடர்ந்து நடைபெறுகிறது.....

ஓய்வு பெற்றுப் போனவரை மறுநாளே மறந்து, அவரவர்கள் தங்கள் காரியங்களில் ஈடுபடுவார்கள். 'ஓய்வு பெற்றவர்கள்' என்ற அந்தஸ்தைப் பெற்றவுடனேயே அவர்களுக்கு பல பிரச்னைகளும் சிக்கல்களும் மாறுபட்ட மனப்பான்மைகளும் தோன்றிவிடுகின்றன என்பது மற்றவர்களுக்குத் தெரியாது.

சிலர் முன்கூட்டியே ஓய்வு கால வாழ்க்கைக்காகத் தங்களைத் தயார் செய்து கொண்டு விடுகிறார்கள். வேலைக்கு 'டாடா' சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்து உட்கார்ந்ததும் அவர்கள் இந்த மாறுதலை அதிகம் உணர்வதில்லை. ஆனால் வேறு சிலர் ஓய்வு பெறும்போது பஞ்சராகப்போன சைக்கிள் போல ஆகிவிடுகிறார்கள். ஓய்வு பெற்ற பின் வாழ்க்கையை ஓட்ட முடியாமல் தவிக்கிறார்கள்.

அதோ வருகிறாரே சாரங்கன்! இவர் விவகாரத்தை எடுத்துக் கொள்ளலாம். எண்பது ரூபாய் மாதாந்திரப் பென்ஷன். பாங்கி ஒன்றில் அலுவல் பார்க்கும் மகனுடன்தான் சாரங்கனும் அவர் மனைவியும் இருக்கிறார்கள். வீட்டில் மருமகள், பேரக் குழந்தைகள் எல்லாம் உண்டு. சாரங்கன் தன் பென்ஷனை வாங்கி அப்படியே தன் மகனிடம் கொடுத்து விடுவார். தன் சில்லறைத் தேவைகளுக்கு அவ்வப்போது அவனிடம் கேட்டு வாங்கிக் கொள்வார்.

''இந்தா! அப்பாவுக்குக் காப்பி கொடுத்தாயோ?'' என்று மகன் தணிந்த குரலில் மனைவியிடம் கேட்பான்.

''எல்லாம் கொடுக்கலாம். இன்னும் இரண்டாவது டிகாக்ஷன் இறங்கலே. கிழக்கட்டைகளெல்லாம் காப்பி குடிக்கிறதை விட்டு விடலாம்! இது என்ன கட்டுப்பிடியாகிற காலமா?'' என்று மருமகள் அழுத்தம் திருத்தமாகக் கேட்பாள்.

இந்தச் சம்பாஷணை சாரங்கன் செவிகளில் தெளிவாக விழும். சில நிமிடங்களில் 'டங்' என்ற சப்தத்தோடு ஒரு டம்ளர் வைக்கப்படும் ஓசை அவருக்குப் பக்கத்தில் ஒலிக்கும். ஏதோ புதுவித நிறத்தில் ஒரு திரவம் அந்த டம்ளரில் இருக்கும்.


சாரங்கனுக்கு ரோஷம் உண்டுதான். ஆனால் ''இந்தாம்மா! காப்பியை எடுத்துக் கொண்டு போ! நான் இன்றோடு இந்த வழக்கத்தை விட்டு விட்டேன்'' என்று சொல்லும் துணிவு இல்லை. காரணம், எஞ்சியிருக்கும் அவருடைய ஒரு பெண்ணுக்கு, மகன் தயவில்தான் திருமணம் நடந்தாக வேண்டும். மருமகளுடன் முறைத்துக் கொண்டு தன் பென்ஷனை நம்பி வெளியே தனியாகப் போக அவருக்குத் தைரியமில்லை. அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்.


சாரங்கன், வாசகசாலைகளிலும், பார்க்குகளிலும் கோவில் பிரகாரங்களிலும் நாளின் பெரும் பகுதியைக் கழிப்பது மருமகளுக்குப் பொறுக்காது. ''எங்கேயாவது கடைகளிலே கணக்கு எழுதினால்கூட மாதம் நாற்பது ஐம்பது கிடைக்குமே'' என்று அவள் பொருமுவதைக் காதில் போட்டுக் கொள்ளாமலிருக்கும் கலையைக் கற்றிருந்தார்.

பிக்கல் பிடுங்கல் இல்லாமல், குழந்தை குட்டியுமில்லாமல், நிறையப் பென்ஷன் வாங்குபவர்களுக்கு நிம்மதி இருக்கும் என்று நினைத்தால், அங்கும் பிரச்னைகள் இருக்கின்றன.

புருஷோத்தமனும் அவர் மனைவியும் அவரது தம்பி குடும்பத்துடன் வசிக்கிறார்கள். இவருக்குப் பிற்காலத்தில் இவருடைய உடைமைகள் எல்லாம் அந்தத் தம்பிக்குத்தான் போய்ச் சேரும். தம்பியும் உத்தியோகம் பார்ப்பவர்.

ஆனால் புருஷோத்தமனின் வாழ்க்கை முள் மேல் நடப்பது போல் இருக்கிறது. காரணம் தம்பியின் மனைவிக்கு, தன் மைத்துனர்





'என்னுங்க! ஊரெல்லாம் ஜேப்படி ரொம்ப ஜாஸ்தியா இருக்குதாமே... கொஞ்சம் ஆபீஸ்வரைக்கும் துணைக்கு வாங்களேன்....!''

''...!...?...!...?...''

ஓரகத்தியுடன் சேர்ந்து வசிப்பது பரம எரிச்சலாக இருக்கிறது. குமுறிக் குமுறி எழுகிறாள். புருஷோத்தமனும் தன்னால் இயன்றவரை தன் மனைவியைத் தன்னுடன் மற்றொரு வீட்டில் வந்து இருக்க வற்புறுத்துகிறார். ஆனால் அந்த அம்மாள் திட்டவட்டமாக அவர் வேண்டுகோளை மறுக்கிறாள். அந்தத் தம்பியைச் சிறு வயதிலிருந்து வளர்த்தவள் அந்த அம்மாள். கணவனின் தம்பி என்ற உறவைவிட தன் மகன் என்ற நினைப்பே அந்த அம்மாள் மனத்தில் பதிந்து விட்டது. 'என் மகனை விட்டுவிட்டு வரமாட்டேன்' என்று சொல்கிறாள் அவள்.

இதோ பார்க்கில் அமர்ந்திருக்கிறாரே, ரகுநாதன்! இவர் ஒரு தனி டைப். ''எனக்கு எந்தவிதமான பிரச்னைகளுமில்லை! ஓய்வு காலப் பிரச்னைகளை நான் முன்கூட்டியே ஆராய்ந்து முடிவு கண்டுவிட்டேன். எனக்கு ஓய்வுடன் நிம்மதியும் உண்டு'' என்று சொல்லும் இவர் ரயில்வே இலாகாவில் உயர்ந்த உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்றவர். கணிசமானபென்ஷன் பெறுபவர்.

''நான் ஓய்வு பெற்றவுடன், 'நீங்க வேறு வேலைக்கு டிரை பண்ணலியா? நீங்க அந்தக் கார்ப்பொரேஷனிலே ஜாயின் பண்ணலாமே? இந்தக் கம்பெனியிலே டாப் எக்ஸிக்யூட்டிவாகப் போகலாமே?' என்று துக்கம் விசாரிப்பது போல பல நண்பர்கள் விசாரித்தார்கள். 'ஐயா! நான் நிஜமாகவே ரிடையர் ஆக விரும்புகிறேன்' என்று நான் ஓங்கிச் சொன்ன போதுகூட அவர்கள் நம்ப மறுத்தார்கள்.

''என் மூன்று பிள்ளைகளுக்கும் ஒரு பெண்ணுக்கும் திருமணம் ஆகிவிட்டது. என் பிள்ளைகளுக்குப் பெண் கொடுக்க முன்வந்தவர்கள் கல்யாண 'டேர்ம்ஸ்' பற்றிப் பேச வந்தார்கள். 'நான் இது பற்றி ஒன்றும் பேசத் தயாரில்லை. உங்கள் இஷ்டம்போல் நடத்தி விடுங்கள்' என்றுதான் சொன்னேன். ஏதோ பெருமைக்காக, பிரின்ஸிபலுக்காகச் சொன்ன வார்த்தைகள் இல்லை. முன்னேற்பாடான திட்டத்தோடுதான் சொன்னேன். நாலைக்கே ஒரு பிள்ளை வீட்டுக்குப் போய்த் தங்குவேன். என் மருமகள் காப்பி கொண்டு வருவாள். 'இந்தப் பாவி மாமனார்தானே என் அப்பா கழுத்தில் கத்தியை வைத்து அத்தனை ஆயிரத்தை வை, இத்தனை சாவரினை வை' என்று விரட்டிய கிராதகன் என்ற நினைப்பு அவளுக்கு வந்து அந்த காப்பி டம்ளரை 'ணங்' என்று வைக்கக் கூடாதே! அதைத் தவிர்க்கத்தான் இந்த முன்னேற்பாடு!

''ஒரு பிள்ளை டில்லியிலே ஆபீஸராக இருக்கிறான். அவனிடம் தங்கியிருக்கும் போது, அவன் என் பென்ஷன் பணத்தில் ஒரு பைசாக்கூடத் தொட மாட்டான். அதே போல அவன் தன் தம்பிகளுக்கும் உத்தரவு போட்டிருக்கிறான். 'அப்பா அம்மா உங்களுடன் தங்கியிருக்கும்போது தான செலவுகளை நான் ஏற்றுக் கொள்வேன். அவர் பென்ஷனை தொடக் கூடாது' என்று. ஆனால் நான் கல்கத்தா பிள்ளையுடனோ மெட்ராஸ் பிள்ளையுடனோ இருக்கும் போது என் பென்ஷனில் முக்கால் பகுதியை அவர்களிடம் வற்புறுத்திக் கொடுத்து விடுவேன். இவர்கள் இன்னும் அண்ணன்காரன் சம்பளத்தை எட்டவில்லையல்லவா? ஒவ்வொருவரும் தங்களுடனேயே நான் தங்க வேண்டும் என்று போட்டி போடுகிறார்கள்.

''புத்தகம் படிப்பதில் ஆர்வத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறேன். யாருக்கும் பாரமாக இருக்கிறோம் என்ற உணர்ச்சி என்னிடம் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன்.''

ரகுநாதன் 'டைப்' தனிதான் என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். அவர் மாதிரி எல்லோராலும் இருந்துவிட முடியாதே!

ஓய்வுபெற்ற வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது என்பதைப் பற்றி முன்கூட்டியே ஒரு திட்டம் போட்டுக் கொள்வது நல்லது. சுறுசுறுப்பாக இருந்தால் கூடியவரை நோய்களைத் தவிர்க்கலாம்.

வயதுக்குத் தகுந்த ஆகார வகைகளையும் அவைகளை உண்ணும் வேளையையும் ஒழுங்காக அமைத்துக்கொள்வதில் பல நன்மைகள் விளையும்.

காலம் மாறிக் கொண்டே இருக்கிறது என்பதை ஓய்வு பெற்றவர்கள் உணர வேண்டும். அதற்கேற்ப வளைந்து கொடுக்கவும் அவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நேரத்தைப் பயனுள்ள விதத்தில் செலவிட மனப் பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொழுது போகாமல் வீண் அரட்டை அடிப்பது, சிண்டு முடித்து விடுவது, கலகம் பண்ணுவது போன்ற காரியங்களில் இறங்கினால் எல்லாரது வெறுப்பையும் வெகு சீக்கிரம் சம்பாதித்துக் கொண்டவராகி விடுவார்கள்.

தங்கள் எண்ணங்களையும் முடிவுகளையும் மற்றவர்கள் மேல் சுமத்துவதைவிட, மற்றவர்கள் அபிப்பிராயங்களைப் பரிசீலனை செய்யும் பொறுமை உணர்ச்சியை மனத்திலே பயிற்சிக்குக் கொண்டு வரவேண்டும்.

இத்தகையவர்களுக்கு ஓய்வுபெற்ற வாழ்க்கையானது பொன்னான வாழ்க்கையாகவே இருக்கும்!

— மேனு

பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 41

அன்னமே கலைக்கு ஆதாரம்

சின்னத்தம்பி குயிலியையே பார்த்தான். அவளோ அவனுக்கு எதிரில் காட்சி அளித்த திருக்கோயிலின் தோற்றத்தைக் கண் கொட்டாமல் பார்த்தாள்.

"அடே, சின்னத்தம்பி! அன்றைக்கு ராசா ஊர்வலத்திலே பார்த்தோம் பாரு குதிரையிலே. அதே மாதிரி குதிரையை ஒரு ரதத்திலே பூட்டியிருக்கிற மாதிரி இருக்குதடா கோயில் ரதம். மூணு சக்கரத்தையும், குதிரையையும் பாருங்கள். ஆஹா! என்ன அழகு!" என்றாள் குயிலி. அவள் பரிவாரங்கள் எல்லாம் குதிரை பூட்டிய ரதம் போல் அமைந்த அந்த மண்டபத்தின் உயர்வையும் அழகையும் பார்த்த கண் பார்த்தபடி நின்றார்கள். குயிலியின் ரசிகத்தன்மையைக் கூர்ந்து நோக்கினான் கீர்த்தி சிங்கன். அவளைக் கோயிலுக்குள் அழைத்துக் கொண்டு வந்த நோக்கம் பலித்து விடும் என்னும் களிப்பு அவன் முகத்தில் தெரிந்தது.

"என்ன குயிலி! நீ முந்திப் பிந்திக் கோயிலைப் பார்த்ததில்லையா? தஞ்சாவூர்ச் சீமையிலே பொறந்திருக்கே, கோயிலையே பார்த்ததில்லையென்றால் உனக்கு வெட்கமாக இல்லையா?"

"சும்மா இரய்யா. கோயிலும் சாமியும் குடம் ரொம்பியிருக்கிறவங்களுக்குத்தான் உண்டு. நம்மைப் போல் ஏழைகளுக்கு வயிறுதான் கோயில்" என்று சொல்லிவிட்டு அவனைப் பாராமலே கோவில் படிகளில் குயிலி வேகமாக ஏறினாள். பெருமூச்சு வந்தது. எதிரில் இருந்த கல் தூணை இடது கையால் பிடிப்பதற்குத் தொட்டாள். கல் தூணின் மீது கைபட்டவுடனே அவளுடைய) கைகள் கூசின. சரேலென்று கையை எடுத்துக் கொண்டாள். "அடி அம்மா! என்ன கல் தூணு? அல்லது கலைத் தூணு? ஒரு தூணுக்குள் எத்தனை சிற்பங்கள்? சின்னஞ் சிறு பிள்ளையார்கள் எத்தனை! இந்தக் கோயிலிலே கல்லைக் கடவுளாகவும் ஆக்கியிருக்கிறார்கள். கல்லைக் குதிரையாகவும் ஆக்கியிருக்கிறார்கள். கல்லே தேராகவும் ஆகியிருக்கிறது. அதே கற்பாறையை மலர்களாகவும் ஆக்கியிருக்கிறார்கள்" என்று ஆச்சரியத்தில் தூணையே பார்த்தாள் தோகை.

"ஏ, பொண்ணே! என்ன தூணையே பார்த்துக்கிட்டு நிக்கறே?" என்று கேட்டான் சிங்கன் கிண்டலுடன்.

"பின்னே என்ன? தூணைப் பார்க்காமல் ஆளைப் பார்த்துக்கிட்டா நிற்பாங்க? ஐயா, என்ன அழகு பாரய்யா!"

"நீ இப்பத்தான் கோயிலையே பார்க்கிறாயா?"

"எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். ஆனால் இப்படிப் பார்த்ததில்லை" என்று சொல்லிக் கொண்டே வலதுபுறம் திரும்பினாள் குயிலி. திடுக்கிட்டாள். குபீரென்று அவள் உடல் வியர்த்தது. காணாத ஒன்றைக் கண்டது போல் அவள் கண்களில் ஓர் அதிசய உணர்ச்சி பரவியது.

"இது என்ன சிலை?" என்று தன் விரலால் ஓர் அற்புத திருவுருவத்தைக் காட்டிச் சிங்கனிடம் கேட்டாள்.

"அது சிலை இல்லை. கலையின் தாயார்" என்றான் அவன்.

"அப்படியென்றால்?"

"நீ பலமுறை கோயிலுக்குப் போயிருக்கிறாய். ஆனால் சிலை, சிற்பம் ஒன்றையாவது நீ இது வரையில் பார்த்ததில்லை. இன்று மாத்திரம் ஏன்



உன் கண்ணில் கலையின் அழகு தெரிகிறது ?''

''என்னய்யா புதிர்போடுகிறாய் ?''

'' புதிரல்ல. நீ வயிறு நிறையச் சாப்பிட்டிருக்கிறாய். உன் மனம் நிறைந்திருக்கிறது. அந்த நிறைவில்தான் கலைகளெல்லாம் மலருகின்றன. குளத்திலே தண்ணீர் இருந்தால்தான் தாமரை பூக்கும். வயிற்றுக்குச் சோறு இருந்தால்தான் கலைகள் மலரும். இந்தச் சிலை அன்னபூரணியின் சிலை. அன்னம் பூரணமாகச் சோழ நாட்டு மண்ணிலே கிடைக்கிறது. அதனால்தான் இங்கே கலைகள் செழிக்கின்றன.''

'' நீ உண்மையிலேயே சிங்கம்தான் ஐயா!'' அவன் முதுகில் தட்டினாள் குயிலி. ஆயினும் அவன் பார்வை சிலையின் திருவடிகளிலேயே லயித்திருந்தது.

நாம் கல்லை மட்டும் கும்பிடவில்லை. கலையையும் சேர்த்துக் கும்பிடுகிறோம். உலகத்திலேயே கலையைக் கடவுளாக வழிபடும் ஒரே நாடு தமிழ் நாடுதான். இங்குதான் ஆடவல்லானாகிய அம்பலக்கூத்தனைப் பாடிப் பரவுகின்றோம்..... நமது பாரத தேசத்திலும் நம் நாடு ஒன்றில்தான் நடராச வணக்கம் தொன்றுதொட்டு இருந்துவருகிறது.

இது குவலயத்திற்கே தெரியாதே. குயிலிக்குத் தெரியுமா? தாராகரம் அன்னபூரணி திருப்பாதங்களை விருப்பமுடன் நோக்கிய குயிலி திகைத்



தான். அந்தத் திருவடிகள் பூமியில் பதிந்திருக்கும் அழகில் அவன் மனம் பதிந்தது. வலது பாதத்தைக் காட்டிலும் இடது பாதத்தைச் சற்று இலகுவாக ஊன்றி அன்னை இயம்பி நிற்பதைக் கண்டு அந்த எழிலில் அவன் மயங்கினான்.

''சிங்கா, ஏன் இந்தச் சிலை இப்படி நிக்குது?'' என்றாள் குயிலி.

''பக்தர்கள் சிலை மட்டும்தான் இங்கே விறைப்பாக நிற்கும். கடவுள் சிலைகளெல்லாம் நாட்டிய பாணியிலே தான் நிற்கும்.''

''பக்தர் சிலை மட்டும் ஏன் விறைப்பாக நிற்குது?''

''அவன் மனுஷன். அது தெய்வம். அன்னபூரணி உலகத்துக்கே அமுது படைக்கிறவ. ஆத்தா விறைப்பா நின்னு பிள்ளைகள் வயிறு காத்தாடிப் போகும். அதுக்காகத்தான் அமிர்த கலசத்தைக் கையிலே வைச்சுக்கிட்டு யார் கூப்பிட்டாலும் ஓடிப் போய்ப் பரிமாறத் தயாராய் நிற்கிறாள்.''

சிலையின் அழகைச் சிங்கனின் விமரிசனம் அதிகப்படுத்தியது. குறும்புக்காரக் குயிலி விரித்த விழிகளை மூடாமல் அன்னையின் வடிவத்தைப் பார்த்தாள்.

''ஐயோ, அந்த முகத்திலேதான் எவ்வளவு கருணை! ஒரு பிள்ளை பசித்து அழுதாலும் அம்மா பொறுக்கமாட்டாங்க போலே இருக்கே!''

''இந்தக் குயிலியே அப்படி இருக்கிற போது அவள் கும்பிடுகிற சாமி ஏன் அப்படி இருக்காது?'' என்று சொல்லி விட்டுச் சிங்கன் வேகமாக நடந்து கஜஸம்ஹாரமூர்த்தியின் சிலைக்கு முன் போய் நின்றான்.

மன்னிக்க வேண்டும். அது சிலையல்ல. சிற்பமும் அல்ல. கல்லில் வடித்த கவிதை. கைக்கு இதமான களிமண்ணில்கூட அப்படி ஒரு சிலையை இப்பொழுது யாரும் செய்துவிட முடியாது. அம்மம்மா, அது அழகின் கருவூலம். அந்தச் சிற்பி செய்திருக்கும் நுண்ணிய வேலைப்பாடுகளைப் பார்த்தால் அந்த ஆசாரியின் திருவடிகளில் ஆயிரம் முறை விழுந்து வணங்கத் தோன்றும். அப்படி ஓர் அற்புதச் சித்திரம் அது. கூடவே தொடர்ந்த குயிலி அம்மூர்த்தியின் தோற்றத்தில் திகைத்தாள்.

''சிங்கா, இது என்ன சிலை? ஆனை உடம்பிலே புகுந்து அதைப் பிளந்து கொண்டு வருகிறாப் போலே இருக்குதே. அம்மா, ஒரு காலை வலுவாக ஊன்றி ஒரு காலை மடக்கி, இரண்டு கையையும் அகல விரிச்சு யானை உடம்பைக் கிழிச்சுக்கிட்டு வர்றமாதிரி இருக்குதே.''

''அதை எப்படி நீ இவ்வளவு சீக்கிரமா புரிஞ்சுகிட்டே?''

''கண் இருக்குது, புரிஞ்சுகிட்டேன். இதைக் கையாலே ஒருத்தன் செய்திருக்கான். கண்ணாலே நமக்குப் பார்க்கக்கூடவா தெரியாது?''

சிங்கன் சிரித்தான். ''குயிலி, கண்களிலே காகக் கண், கலைக் கண், காமக் கண், கஞ்சிக் கண் என்று நாலு கண்ணு. அதிலே உனக்கு இருக்கிறது கலைக் கண்'' என்றான்.

''உங்களுக்கு இருக்கிறது காமக் கண்ணோ?'' என்றான் சின்னத்தம்பி. சிங்கன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். தன் கண்ணில் அது இருக்கிறதோ என்று அவசரமாகத் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டான் சிங்கன்.

துளிர்க்கும் செடியைத் துடைத்துவிடலாம். துளிர்க்கும் சிந்தையைத் துடைத்துவிட முடியுமா? மறுபடியும் சிங்கனின் கண்களில் குயிலியைப் பாராட்டும் ஓர் உணர்ச்சி வெளிப்பட்டது. சின்னத் தம்பியின் கேள்வியில் குயிலியும் சிறிது அதிர்ச்சி அடைந்தாள். சிங்கனின் கண்களில் அந்த நோக்கம் இருக்கிறதா என்று பார்ப்பது போல் அவன் கண்களையே ஆவலுடன் நோக்கினாள். அவள் பார்வை தான் அங்கும் இருந்தது. ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை. அவர்கள் இருவருக்கும் தோன்றாத ஓர் உணர்ச்சியை மூன்றாவது ஆளாகிய சின்னத் தம்பி சொல்லியதில் அவனுக்குக் கோபம் வந்தது. பாவம், சின்னத் தம்பியின் பார்வை பொதுப் பார்வை.

''டேய், சின்னத்தம்பி! சும்மா இருடா. அது சொல்லட்டும்!'' என்று அவனை அதட்டினான் குயிலி.

''ஒரு காலத்திலே படிச்சவங்களுக்குக் கர்வம் வந்தது. நாம் கற்றவர்கள்; ஆதலால் கடவுளுக்கும் மேம்பட்டவர்கள் என்று நினைத்துச் சிவபெருமானையே ஒழிக்கத் தாருகாவனத்து ரிஷிகள் ஓர் ஆபிசார யாகம் பண்ணினார்கள்.''

''படிச்சிருக்கிறோம்கிற கர்வத்திலேயா? மெத்தப் படிச்சவன் சுத்தப் பைத்தியக்காரன்னு தெரியாமலா சொன்னாங்க? அது அந்தக் காலத்து ரிஷிகளையும் விடவில்லை போலிருக்கு.''

''கடவுள் காலத்தைப் படைக்கிறபோதே கலகத்தையும் சேர்த்துத்தான் படைச்சிருக்கார். அந்த ரிஷிகளெல்லாம் சிவபெருமானை அழிக்க ஒரு யானையைப் படைச்சு அவர் மேலே ஏவிவிட்டாங்க. அவரு அந்த யானைக்குள்ளேயே புகுந்து அதைக் கிழிச்சுக்

பரிசுகள்!

பார்லே **க்ளுகோ**

பிஸ்கட் வாங்குவோருக்கு



3 சிறிய பாக்கெட் க்ளுகோ பிஸ்கட்டுகளுடன்




இலவசமாக

1 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டீஸ்பூன் கிடைக்கும்

கோதுமை, பால், சர்க்கரை மற்றும் இதர ஆரோக்யமளிக்கும் சேர்க்கைப் பொருள்களின் வளமையெல்லாம் சேர்ந்த பார்லே க்ளுகோ பிஸ்கட்டுகள் மிகுந்த சக்தியூட்டுபவை. பார்லே க்ளுகோ பிஸ்கட்டுகளின் உன்னத மணம், நிகரற்ற சுவை, ஒப்பற்ற போஷாக்கு மற்றும் கரகரப்பான புதுமைக்கு ஈடில்லை, இணையில்லை!. பார்லே க்ளுகோ இந்தியாவிலேயே உன்னத விற்பனையுள்ள பிஸ்கட்டாக விளங்குவதில் வியப்பில்லை!

பரிசுச் சலுகை சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி நகர்களுக்கு மட்டுமே...சரக்குகள் தீரும் வரை

everest/383a/PP TM


EXPORT QUALITY
இப்பொழுது
உங்களுக்கும்
கிடைக்கும்
Sulekha
EXECUTIVE INK
CONTAINS SOLVENT S-100
EXECUTIVE INK
SULEKHA WORKS LTD
EXECUTIVE INK

தோட்டக்காரன் தந்த பாடம்!

லால் பகாதூர் ஆறு வயதுச் சிறுவனாக இருந்தபோது தம் நண்பர்களுடன் விளையாடச் சென்றார். எல்லோருமாக ஒரு தோப்புக்குள் சென்றார்கள். எல்லோரும் ஒவ்வொரு மரத்தில் ஏறிக் கொண்டார்கள். பழங்களைப் பறித்தார்கள். தோட்டத்தை நாசம் செய்தார்கள். ஆனால் லால்பகதூரோ மரத்தில் ஏறவில்லை; கீழேயே இருந்தார். சுற்று முற்றும் பார்த்தார். பயந்து கொண்டே தம் கைக்கு எட்டிய பூ ஒன்றைப் பறித்துக் கையில் எடுத்தார். திடீரென்று தோட்டக்காரன் வந்துவிடவே, எல்லோரும் குதித்தோடிவிட்டார்கள். வெலவெலத்து நின்ற லால் பகாதூர் மட்டும் தோட்டக்காரனிடம் அகப்பட்டுக் கொண்டார். நன்கு அடியும் வாங்கினார். பின்னர் அழுது கொண்டே தோட்டக்காரனை மெதுவாகப் பார்த்து. "ஐயா, நான் ஏழை. தகப்பனற்றவன். நீங்கள் இப்படிச் செய்யக் கூடாது!" என்று சொன்னார். அந்தத் தோட்டக்காரன் சிரித்துக் கொண்டே, "தம்பி, நீ சொன்ன அதே காரணங்களுக்காகவே இம்மாதிரிக் காரியங்களில் ஈடுபடாமல் நல்லபடியாக நடந்துகொள்ள வேண்டும்" என்று சொன்னான். இவ்வார்த்தைகள் பகாதூரின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன. பிற்காலத்தில் லால் பகாதூரின் கட்டுப்பாடான ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கைக்கு இந்நிகழ்ச்சியே ஆதாரமாக இருந்தது.

(காந்தி ஜயந்தி லால் பகாதூரின் பிறந்த தினமும் ஆகும்.)

— இரா. பாலாஜி



கரி உரியைக் கச்சமா கட்டிக்கிட்டார். அந்தக் காட்சிதான் இது."

"அடேயப்பா! அந்த முகத்திலேயும் கைகால்களிலேயும் வீரம் சொட்டுதே. வீரம்தான் அழகு போலிருக்குது. கோபத்திலேயும் அழகு கொஞ்சுதே."

"அந்தக் கால்களைப் பார். உள்ளங்கால் வெளியே தெரியற அழகைப் பார்."

குயிலி பேசவில்லை. அந்த உள்ளங்காலில் அவளுடைய உள்ளம் பதிந்தது. அந்தக் கால் இறைவனின் திருவடி. அவளுடைய உள்ளத்தையும் அடக்கிக் கொண்டு உள்ளங் காலாக ஆயிற்று. "ஆண்டவனும் நாட்டிய பாணியிலேதான் ஆடுகின்றார்" என்று அவள் வாய் முணு முணுத்தது.

அந்த வார்த்தையில் சிங்கன் மகிழ்ந்தான். தான் சிரமப்படுவது வீண் போகவில்லை. குயிலியின் மனத்தில் நாட்டியத்தின் ஊற்றுக் கண் திறக்கிறது என்று கண்டான். பிக்ஷாடனர் சிலையின் முன் போய் நின்றான்.

கரியை உரிக்கும் போது கோபாவேசத்துடன் தோன்றிய அதே திரு உருவம் இங்கே பிச்சைக்காரனாக தாருகாவனத்துக்குள் பிரவேசிக்கின்றது. பிச்சை எடுக்கும் அத்திருஉருவம் ஆண்களுக்கெல்லாம் அழகைப் பிச்சை இடுகின்றது. அதைப் பார்த்துச் சில பெண்மணிகள் அந்த அழகில் சொக்கித் தங்களை மறந்து நிற்கின்றார்கள். குயிலியும் அப்படித்தான் நின்றாள். அவளை அறியாமல் ஒரு பெருமூச்சு வெளிவந்தது. அவளுடைய மார்பு விம்மியது. மனம் நிறைந்தது. அவள் கண்களில் விழி துயில் விளையாடியது. சிங்கன் சிலையின் அழகை இங்கு விமர்சனம் செய்யவில்லை. சொல்லுக்குள் அடங்காத ஒன்றைச் சொல்லிப் பயன் இல்லை என்று எண்ணி நின்றான். பரவச நிலையில் நின்ற குயிலி சிறிது கழித்துச் சிங்கனைப் பார்த்தாள்.

"என்ன பார்க்கிறே?"

"நான் தஞ்சாவூரிலே சித்திரக்காரர் ரங்கமன்னார் வீட்டிலே நாலு சித்திரங்களைத்தான் பார்த்தேன். அப்போதுதான் முதல் தடவையா நான் பார்த்தேன் இந்தக் கோயிலைப் பார்க்

கிற போது இதுவே அழகுப் பெட்டக மாக இருக்குதே!''

''ரங்கமன்னார் வீட்டிலேயா?..... யாருடைய சித்திரத்தைப் பார்த்தாய்'' என்று பரபரப்பாகக் கேட்டான் சிங்கன்.

அங்கே தன் சித்திரத்தைக் குயிலி பார்த்திருப்பாளோ? இங்கு தன்னிடம் விஷயத்தைச் சொல்லாமல் ஆழம் பார்க்கிறாளோ என்ற துடிப்பு அவன் குரலில் ஒலித்தது.

''நான் பார்த்தது மனுசன் படமில்லே. சாவித்திரி படத்தை அவர் எழுதினார். அதைப் பார்த்தேன், ஓர் இராமர் படம், அரிச்சந்திரன் படம், இதெல்லாம் பார்த்தேன். அந்த ஓவியங்கள் என் கண்களைச் சித்திரத்தைப் பார்க்கப் பழக்கப்படுத்தித்து. இப்போ பார்த்தா அந்த மாதிரி பெரிய ஓவியர்கள்கூட இந்தக் கோயில்களைப் பார்த்துத்தான் எழுதக் கத்துக்கிடு வாங்களோன்னு தோணுது. சிங்கா, இந்தக் கோயிலே யார் கட்டினது?'' என்றாள் ஆவலுடன்.

''உங்க தாத்தா!''

''எங்க தாத்தா இதை ஏன் கட்டறாரு? அவர் எங்க பாட்டியைக் கட்டிக்கிட்டு ரெண்டு பேர் செலவுக்குக் காசு பத்தாம வயித்தை இழுத்துப் புடிச்சுக் கட்டியிருப்பாரு. இதை யார் கட்டினாங்க என்று கேட்டா...?''

''கேட்டு என்ன செய்யப் போறே?''

''கட்டினவங்களைக் கையெடுத்துக் கும்பிடுவேன். இதை அழியாம காப்பாத்தினவங்க காலிலே விழுந்து வணங்குவேன். நான் வேறு என்ன செய்ய முடியும்? யார் கட்டினாங்க சொல்லுவே?''

''ஊர் பேரைப் பார்த்தாலே யார் கட்டினாங்கன்னு தெரியல்லியா?''

''ஊருக்குப் பேரென்ன?'' என்றாள் குயிலி. முந்திரிக் கொட்டை இடைமறித்தான்.

''தாராசுரம்னு பேரு. சந்திரன் பொஞ்சாதி தாரைக்கு ஒருவாட்டி சுரம் வந்ததாம். அவ இந்தத் தீர்த்தத்திலே வந்து குளிச்சதும் இந்தப் பாசியிலே சுரம் போய்டுச்சாம். அதுக்காகச் சந்திரன் இந்தக் கோயிலைக் கட்டி 'தாராசுரம்'னு பேர் வைச்சானும். இது தெய்வத் திருப்பணி'' என்றான் முந்திரிக் கொட்டை. சிங்கன் கடகடவென்று சிரித்தான்.

''அட பாவி! கதையையே மாத்திப் பிட்டியேடா! குயிலி. தஞ்சாவூர்க் கோயில் பார்த்திருக்கியா?''

''பார்க்காம இருப்பேனா?''

''அந்தக் கோயிலைக் கட்டின ராஜ ராஜ சோழனுடைய பேரன் இரண்டாம் ராஜ ராஜ சோழர் இந்தக் கோயிலைக் கட்டினார். இராசராசேஸ்வரம்னு பேரிட்டாரு. நாளடைவிலே..''

''கழுதை தேஞ்சு கட்டெறும்பான மாதிரி...'' என்றான் சின்னத்தம்பி.

''இல்லே. கற்கண்டு தேஞ்சு சர்க்கரையான மாதிரி. இராச ராசேச்வரம் ராராசுரம் ஆயி பின்னாலே தாராசுரம் ஆயிடுத்து.''

''அதனாலே என்ன? இப்போ ஊர் கெட்டாலும், அதன் பேர் கெட்டாலும் கோயிலுக்குள்ளே இருக்கிற உருவங்கள் கெடவில்லே.''

''அது நெசம்தான். நம்முடைய ஊர் கெட்டாலும் பேர் கெட்டாலும் நமக்கு உள்ளே இருக்கிற உள்ளம் கெடவில்லே. அதனால்தான் அந்த உருவங்கள் உன் கண்ணில் பட்டவுடன் உனக்கு ஆனந்தம் உண்டாகுது!'' என்றான் சிங்கன்.

''சோழ மகாராசா கட்டினதா? நான் நம்ப மராட்டிய ராசாங்கதான் கட்டிப்புட்டாங்களோன்னு பார்த்தேன்'' என்றான் சின்னத் தம்பி.

''அட, அவங்களுக்குக் கோயில் கட்ட நேரம் ஏது? அந்த நேரத்திலே கூட இரண்டு பெண்டாட்டியை வேணுமின்னு கட்டிக்குவாங்க!'' என்றாள் குயிலி.

அதைக் கேட்ட கீர்த்தி சிங்கன் திணறினான். தன் முகத்துக்கு எதிரிலேயே தன் குலத்தைப் பற்றி இவ்வளவு அரிய நற்சாட்சிப் பத்திரத்தை ஒரு பெண் கொடுத்தால் அவன் என்ன செய்வான்? சிரித்துக் கொண்டார். ஆனால் அதில் கொஞ்சம் அசடு வழிந்தது. வேஷம் மாறியிருந்தாலும் தன் விஷயம் என்று வரும் போது ஆத்திரத்தோடு பதில் சொல்லத் தோன்றியது.

''எடுத்த எடுப்பிலேயே தகுந்த பெஞ்சாதி கிடைச்சுட்டா ஏன் ஏழும் எட்டும் கட்டிக்கிறாங்க?'' என்று கேட்டுவிட்டு, ''குயிலி, உனக்கு எப்படி அதெல்லாம் தெரியும்?'' என்று கேட்டான்.

''அட, போய்யா! ஒரு நாள் ராத்திரி ஒரு சிப்பாய் என்னைத் துரத்தினான் பாரு. அரண்மனையான் கையிலே விழுகிறதைக் காட்டிலும் காட்டாற்றிலே விழுந்தா தேவலேன்னு ஓடி இருக்குறேன் பாரு. அதை இப்ப நினைச்சாலும் குளிருது'' என்றாள் சிரித்தபடி குயிலி.

மாறு வேடத்திலிருந்த இளவரசர் அவளையே பார்த்தார். அவளும் அவரையே பார்த்தாள்.

ராபின் ப்ளூ உலகத்தில் மிக ஏராளமாக விற்பனையாகும் நீலம்

உலகம் முழுதும் சுத்தமான அல
ட்ரா மரைன் ப்ளூ என்றும்,
வெண்மை தருவதில் பிரபல
மானது என்றும் புகழ்பெற்றது.
ராபின் அசல் ப்ளூ ஆனபடியால்
உங்களுக்கு இயற்கையில் கவர்ச்சி
யான வெண்மை தருகிறது. அத்
துடன் ஒரு பாக்கெட் பல சலவை
களுக்கும் பயன்படுகிறது.
மேலும் ராபின் ப்ளூ துணிகளை
கெடுக்காது என்பதையும்
நினைவில் வைத்துக்
கொள்ளுங்கள்.

போலிகள் ஜாக்கிரதை.
அசல் ராபின் ப்ளூவையே
வற்புறுத்திக்கேளுங்கள்.





ராபின் ப்ளூ உங்கள்
துணிகளுக்கு இயற்கையில்
கவர்ச்சிகரமான
வெண்மையை சேர்க்கிறது



ARBC-29 TAM

''ஏண்டா, முந்திரிக்கொட்டை! அந்தச் சிப்பாய்கூட சிங்கன் உயரம் தானே இருக்கும்?'' என்று கேட்டான்.

'சிங்கா, என்னைத் துரத்திய சிப்பாய் நீதானே?' என்று அவன் கேட்டு விடுவானோ? அப்படிக் கேட்டால் தான் வந்திருக்கும் காரியம் கெட்டு விடுமே. நடுத் தூக்கத்தில் நம்மை விட்டு விட்டுக் கம்பி நீட்டி விடுவானே என்று பயந்தார் அவர்.

''உனக்கு அரண்மனை என்றாலே பகை போலே இருக்குது.''

''அவங்களைப் பகைக்கிறதுக்கு நான் என்ன பெரிய மனுசியா?'' எனக்குக் கூட இந்த மகாதேவ பட்டணம் ராசகுமாரன் மாலையும் கழுத்துமா குதிரை மேலே வார போது பார்க்க அழகாகத் தான் இருந்தது. என் கண்ணுக்குள்ளேயே நின்னுது. ஆனா வடவாற்று தண்ணியிலே கண்ணைச் சுத்தமா கழுவிப்புட்டேன்'' என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டாள் குயிலி. இளவரசனின் முகம் வியர்த்தது. தாம் தேடிக் கொண்டேயிருக்கும் பாடும் குயில் தமது மரக் கிளைகளில் உட்கார்ந்திருக்கிறது என்று எண்ணினார். அவர் முகம் குபீரென்று சிவந்தது. 'நான்தான் இளவரசன். அரண்மனைக்கு வா. உனக்கு ஆட்டத்தைக் கற்றுக் கொடுக்கிறேன்' என்று கூறத் துடித்தார். ஆனால் தளிர் நிறைந்த மாங்கொம்பில் அமர்ந்து கூவும் குயிலைத் தங்கக் கூட்டிலே அடைத்தால்கூவாது. காட்டிலே தன்னிச்சையாக ஆடும் மயில் கூட்டிலே ஆடுவதில்லை. நாம் அவளைப் போலவே இருப்பதால் அவள் நம்மிடம் அன்போடு பழகுகிறாள். இருவருக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வைக் கூறிவிட்டால் நாம் வேற்றுமனிதனாகி விடுவோம் என்று விவேகம் மிகுந்தவர் ஆதலால் தம் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார் இளவரசர்.

''என்ன சிங்கா, என்ன யோசிக்கிறே?'' என்றாள் குயிலி.

''சிங்கனும் சிலையாகி விட்டான்'' என்றான் முந்திரிக் கொட்டை.

''அப்படி இல்லே, தம்பி! உங்க அக்கா ராசன் மகனைக்கூட மதிக்கலே. சிப்பாயை, 'சீ போடா'ன்னு சொல்லிப்புட்டா.''

''காட்டு ராசாவைக் காலாலே எட்டி உதைச்சிட்டா!''

''ஆனா இந்த மத்தளக்கார சிங்கன் கிட்டே மனசை விட்டுப் பேசறா.''

''ஏய், ஏய்! நிறுத்துங்கடா, நிறுத்துங்கடா! என்னையா ரெண்டு பேரும்



'சமையல் மகா மோசம்' என்று ஹாஸ்டல் பசங்கள் 'கம்ப்ளெயிண்ட்' பண்ணின போது மேல் அதிகாரி உண்மையைப் பரிசோதிக்கச் சென்றார்.

"இந்த ரசம் பேஷாக இருக்கே! என்ன ருசி!" என்றார்.

உடனே பையன்கள் எல்லோரும் ஒரே குரலில், "அது ரசம் இல்லே; பாயசம்" என்றார்கள்.

மாலை தொடுக்கிறீங்க. போதும்!'' என்றாள் குயிலி.

''இல்லே, குயிலி! இந்தப் பிச்சாண்டி வேஷக்காரனையே நம்பப்படாது. சில பேரு பெண்ணாலே மயங்கி ஆண்டியா போயிடுவாங்க. இன்னும் சில பேரு ஆண்டி வேஷத்திலே வந்து பெண்ணை மயக்கிப்பிடுவாங்க.''

''சே, நம்ம சிங்கன் அப்படியெல்லாம் இல்லேடா!'' என்று அவன் முதுகில் ஒரு தட்டுத் தட்டினாள் குயிலி.

ஏற்கனவே விழ இருந்த சிங்கன் இந்தத் தட்டில் ஒரு தடவை தள்ளாடி நிமிர்ந்தான்.

''ஏன், சிங்கா, சிவபெருமான்தான் மயான ருத்திரனார் ஆச்சே, அவருக்கு ஏது இவ்வளவு அழகு? அவர் ஏன் ஆடுற திருக்கோலத்திலே இருக்கார்?''

''நமது தெய்வங்கள் எல்லாவற்றுக்கும் அழகுதான் உருவம். ஆட்டந்தான் உயிர். சிவபெருமான் ஆனந்தம் வந்தாலும் தாண்டவம் ஆடுவார். அது ஆனந்தத் தாண்டவம். கோபம் வந்தா அது ருத்திர தாண்டவம். அதுதான் தமிழன் கலையழகு. சிரித்தே எரித்தார் சிவபெருமான்னு சொல்லுவாங்களே அது திரிபுர தாண்டவம். சிவபெருமான் தன்னுடைய ஐந்து சக்திமார்களுக்கெல்லாம் ஆடிக் காட்டியது தான் தாண்டவத்தின் பிறப்பு.''

''அப்படின்னா சக்தியும் ஆடுவாங்களா....?'' என்று வியப்பினால் விரிந்த விழிகளோடு கேட்டாள் குயிலி.

(தொடரும்)

வெட்டமதி

சிந்தனை பற்றிச் சிந்தனைகள்

நடிகையர்கள் பழியைத் தயாரிப்பாளர்கள் மீதும், தயாரிப்பாளர்கள் ரசிகர்கள் மீதும் போடுவது கேட்க வருத்தமாக இருக்கிறது. இதற்குக் காரணகர்த்தா யார் என்பது தற்போதைய பிரச்னை இல்லை. நடிகையர்கள் ஆபாசமான உடைகளில் நடிக்க மறுத்து விட்டால் தயாரிப்பாளர்களால் என்ன செய்ய இயலும் ?

திருப்பத்தூர்
17—8—68 நிர்மலா

சினிமாசிந்தனையைத் தொடர்ந்து படித்து வருகிறேன். இந்தியத் திரைப்படங்கள் மேனாட்டுப் பாணியைப் பின்பற்றி வருகின்றன. ஆனால் சமீபத்தில் அமெரிக்காவில் விளைந்த அரசியல் கொலைகளுக்குப் பின்பு 'ஹாலிவுட்' எடுத்த நல்லதொரு முடிவை அறிவோம். சினிமாவுக்கும் சமூக வளர்ச்சிக்கும் சம்பந்தம் உண்டு என்பதை அறிந்து ஹாலிவுட் செயலாற்றத் தொடங்கியதை நம் நாட்டிலும் எதிர்பார்க்கலாமா ? மலேசியா நாடுகளில் வாழும் தமிழர் ஆபாசமான தமிழ்ப் படத்தைத் தம் குடும்பத்தினர் பார்க்க அனுமதிக்கவில்லை என்பதை திரு ஏ. எல். சீனிவாசன் எடுத்துக்காட்டினார். நம் தமிழகத் திரை உலகம் இதை மறந்து விடுமா ? இத்தகைய ஆபாசக் காட்சிகளை வளர விடுவதோ, வேரோடு அறுப்பதோ பெண் குலத்தின் கையில்தான் உள்ளது. நம் பண்பாடு வளர்வதும் அழிவதும் அவர்களின் மூச்சில் அடங்கியுள்ளது. அவர்களே இதற்குத் தகுந்த பாடத்தைக் கற்பிக்க முடியும்.

தாரமங்கலம்
15—8—68 டி. கே. தர்மராஜன்

தமிழர்களுடைய ரசனையைப் பற்றிய திரு கண்ணதாசன் அவர்களது கருத்தைக் கண்டு மிகவும் வருத்தம் அடைகிறேன். தத்துவங்கள் நிரம்பிய அழகிய பாடல்களை எளிமையான முறையில் உருவாக்கி எல்லாருடைய வாயிலும் முழங்கச் செய்த கவிஞரா இவ்வாறு கூறுவது ?

திரைப் படங்களுக்கும், திரைப் பாடல்களுக்கும் நிறைய வேற்றுமை உண்டு. படங்களுக்குச் சென்றுதான் பாடல்கள் கேட்க வேண்டுமென்பதில்லை. வானொலி தவிர எல்லாவிதத் திருநாட்களிலும், பொதுக் கூட்டங்களிலும் மண விழாக்களிலும் ஒலி பெருக்கி மூலம் கிராமங்களில் கூட மூலை முடுக்குகளிலெல்லாம் திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. பொருள் தெரிந்தவர், கற்றவர் சொல்லக் கூசும் சொற்களை விவரம் தெரியாத குழந்தைகள் பகிரங்கமாக பாடுகின்றனர். அவர்களைக் கண்டிக்கப் புகும் பெற்றோர்கள், ஏன் பாடக்கூடாது என்பதற்குப் பொருள் விளக்கவேண்டி வரும்போது, எதைச் சொல்லித் தொலைப்பது? விவரம் தெரிந்த விடலைகளோ கேட்கவே வேண்டாம். நான்கு பெண்கள் குழுமி நிற்கும் இடங்களில் தான் அவர்களுக்குக் கவிஞரின் பாடல்கள் கைகொடுக்கின்றன.

ஆகவே, கவிஞருக்குத் தாய்மார்கள் சார்பில் ஒன்று வேண்டிக்கொள்கிறேன். வளரும் குழந்தைகளுக்காகவாவது அவருடைய பாடல்களில் ஆபாசம் மறைந்து அர்த்தம் ஒலிக்கட்டும். குழந்தைகளுக்கு அதிகப் பால் அஜீர்ணமாகும்.

சென்னை—10
30—8—68 நாகலக்ஷ்மி பலராமன்

என்னுடைய தொழில் அல்லது பணம் சம்பாதிக்கும் முறை, கீழ்த்தரமான உணர்ச்சியைத் தூண்டும் பாடல்களை எழுதுவதுதான் என்று கூறும் ஒருவரை வைத்தா ஓர் அகில இந்தியக் கட்சி ஒரு போராட்டத்தை நடத்த முன்வந்தது? வெட்கம்! வெட்கம்!

நாகர்கோவில்,
31 8—68 செந்தில்வேந்தன்

மகாகவி பாரதி, ''நமக்குத் தொழில் கவிதை ; நாட்டுக்குழைத்தல்'' என்றான். இன்றைய கவிஞர், ''நமக்குத் தொழில் கவிதை; நாட்டைக் கெடுத்தல்'' என்ற ரீதியில் பொறுப்பைத் தட்டிக் கழித்துப் பதில் 'கூறியுள்ளார்.

எங்கே சென்றாலும் காலராக் கிருமிகள் போல ஆபாசப் பாடல்கள் பரவி உள்ளங்களைக் கெடுக்கின்றன. மனிதனை உடற்பசி ஆட்டி வைக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அதை வைத்தே பணம் தேடலாமா?

நாச்சியார்கோயில்
2—9—68 சுப. கோ. நாராயணசாமி

தொழில் என்று சொல்லித் தட்டிக் கழிப்பது ஒரு வழக்கமாகி விட்டது. இழிசுவை ஊட்டுதலைத் தனது தொழில் என்று கூறிக் கொள்வதில் இவர்களுக்கு என்னதான் பெருமையோ? இத்தகைய ஒரு தொழிலுக்கும் விபசாரத்துக்கும் வேறுபாடு எதுவும் இருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை.

ஒழுக்கத்தைப் போதிக்கும் நீதி நூலாக ஒவ்வொரு பாடலும் விளங்காவிட்டாலும், ஒழுக்கத்தைப் பாதிக்கும் இழிநூலாவதை விரும்பக் கூடுமா ?

ஐ. ஐ. டி. கான்பூர் வா. வி. நாகராஜன்
கனம்பூர் ஸ்ரீதரன்
9—9—68 ச. நாராயணன்

திருமதி மனோரமா அவர்கள் உண்மையாகவே நகைச்சுவை பற்றி அறிந்து கொள்ள வேண்டியவராகவே இருக்கின்றார்.

காமெடிக்கென காமெடியன் இருப்பது தமிழ்ப் படத்தின் பெரிய காமெடி.

பம்பாய்— 22
8—9—68 பத்மா

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



எதற்கும் ஏற்றது!
MAFATLAL GROUP
இதோ, எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்ற ஒரு ஷர்ட். விளையாட்டுப் போட்டியா? உங்களைப் போலவே பொருத்தமா ஒரு அங்கம் வகிக்கும். அந்தி வேளை சந்திப்பா? அதற்கென்றே பிறந்தது தெள்ளத் தெளிவான வெண்மை. எத்தனை தடவைகள் சலவை செய்தாலும்சரி, மடிப்புக் கலையாத பண்பு. அந்தி சாயும் வரை கூட.
இந்த ஷர்ட்டின் இரகசியம்தான் என்ன? அதன் துணி. அதுவே மஃபத்லால் க்ரூப்பின் இரகசியம்.
மபத்லால் க்ரூப்
பாப்ளின்களும் ஷர்ட்டிங்குகளும்
காட்டன், 'டெரீன்'/ காட்டன் 2×2 'டெரீன்'/ காட்டன் பிரின்டெட், டெபிலேஸ்டு, மபிளேஸ்டு & ஸ்ட்ரெட்ச் ரகங்கள்
நியூ ஷோராக் (ஷோராக), அகமதாபாத் • நியூ ஷோராக், நதியாத் • ஸ்டாண்டர்டு, பம்பாய் • ஸ்டாண்டர்டு (நியூ சைனா), பம்பாய் • ஸ்டாண்டர்டு (தேவாஸ்) • ஸஸூன், பம்பாய் • ஸஸூன் (நியூ யூனியன்) பம்பாய் • ஸூரத் காட்டன், ஸூரத் • மஃபத்லால் ஃபைன், நவசாரி • மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்

...istered No. M. 4392
...gistered as a Newspaper in Ceylon